"சில்பாலோக்க வேலைத்திட்டம்"

கல்விப் பொது தராதரப்பத்திர (உ/த) பரீட்சைப் பெறுபேற்றை அதிகரித்தல் - 2021

வணிகக்கல்வி

தரம் - 13

சுயகற்றலுக்கான கைபேடு

மத்தியமாகாணக் கல்வித் திணைக்களம்
கண்டி

மாகாணக் கல்விப் பணிப்பாளரின் செய்தி

பிள்ளைகளின் கற்றல் செயற்பாட்டின் வெற்றியானது தொடர்ச்சியானதாக காணப்படவேண்டுமாயின், அவர்கள் சுயகற்றலில் ஈடுபடுவதன் மூலமே சாத்தியமாக அமையும். மாணவர்களின் அடைவு மட்டத்தை மேலும் அதிகரிக்க வேண்டுமாயின் சுயகற்றலில் ஈடுபடுவது அத்தியாவசியமாகும். தம் கற்றல் செயற்பாட்டை முகாமை செய்யும் திறனை வளர்த்துக் கொள்வதற்கு, தனிப்பட்ட உந்துதல் அவசியமாவதுடன் இந்த நவீன உலகின் முன்னுரிமை வழங்க வேண்டிய விடயமும் அதுவே ஆகும்.

கொரோனா வைரசின் தாக்கம் காரணமாக 2019 ஆம் ஆண்டின் இறுதி காலாண்டிலிருந்து உலக மக்களது செயற்பாடுகள் பல்வேறு சவால்களுக்கு உள்ளாகியுள்ளன. எனவே அனைத்து மானிட செயற்பாட்டையும் நவீனமயப்படுத்தப்பட வேண்டிய கட்டாயத்திற்கு உள்ளாகியுள்ளோம். அந்தவகையில் மாணவர்களது கற்றல் செயற்பாட்டையும் நவீனமயப்படுத்தி மாற்றியமைக்க வேண்டியது காலத்தின் தேவையாகும்.

அந்த வகையில் மத்திய மாகாணத்தின் க.பொ.த (உ/த) மாணவர்களின் கற்றல் கற்பித்தல் செயற்பாட்டை நவீனமயப்படுத்தி, ஓர் உயர்ந்த அடைவு மட்டத்திற்கு மாணவர்களை இட்டு செல்வதற்காக இந்த கையேட்டுத் தொகுதியானது வடிவமைக்கப்பட்டுள்ளது. இத்துடன் வழங்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கமைய உங்கள் கல்வி செயற்பாட்டை வடிவமைத்துக் கொள்வதுடன், இச்செயற்பாட்டிற்கு பிள்ளைகளுக்கு துணைப்புரிவதற்கு மாகாணக் கல்வி அமைச்சு, மாகாணக் கல்வித் திணைக்களம், வலயக்கல்விக் காரியாலயம், கோட்டக்கல்விக் காரியாலயம் மற்றும் பாடசாலை சமூகம் போன்றோர் எந்த நேரத்திலும் தயார் நிலையிலுள்ளார்கள் என்பதை உங்களுக்கு மிக மகிழ்வுடன் தெரிவித்துக்கொள்கின்றேன். மேலும் உங்களது சுயகற்றல் செயற்பாட்டிற்காக ஆசிரியர் குழாம், ஆசிரிய ஆலோசகர்கள், அதிபர்கள் மற்றும் கல்வி அதிகாரிகள் ஆகியோர் இது ஒரு முன்னுரிமைப்படுத்தப்பட வேண்டிய பொறுப்பு என்பதை அறிந்துள்ளதுடன் அதற்காக எந்த நேரத்திலும் உதவுவதற்கு தயாராக உள்ளனர் என்பதையும் அறியத்தருகின்றேன். மேலும் 2021 ஆம் ஆண்டின் க.பொ.த (உ/த) மாணவர்களுக்காக இக்கற்றல் தொகுதியானது வடிவமைக்கப்பட்டுள்ளதுடன் தொடர்ந்து வரும் உங்களது சகோதர சகோதரிகளும் பயன்படுத்தி பயன்பெற முடியும்.

இந்த கற்றல் தொகுதியானது, வழங்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கமைய பயன்படுத்தும் போது உங்களது உயர்கல்விக்கு உறுதுணையாக அமையும் என கருதுகின்றேன். மத்திய மாகாணத்தின் அடைவு மட்டத்தை உயர்த்தும் முன்னுரிமை வேலைத்திட்டமான “ சில்பாலோக்க” வேலைத்திட்டத்தின் கீழ் இச் செயற்றிட்டமானது வடிவமைக்கப்பட்டுள்ளதுடன் இதற்காக நிதியுதவி வழங்கியதுடன் ஆலோசனை வழிகாட்டல்களையும் வழங்கிய மத்திய மாகாணத்தின் பிரதான செயலாளர் மற்றும் மாகாண கல்வி அமைச்சின் செயலாளர், ஆகியோருக்கு எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன். இந்த கற்றல் தொகுதியை வடிவமைப்பதற்கு பல்வேறு வகைகளிலும் உறுதுணையாக இருந்த அனைவருக்கும் எனது நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றேன். இறுதியாக மத்திய மாகாணக் கல்வித் திணைக்களத்தின் சகல உத்தியோகத்தர்களுக்கும் எனது நன்றிகள் உரித்தாகட்டும்.

உங்களது எதிர்காலத்தின் கனவு நனவாக எனது நல்லாசிகள்.

E.P.T.K. ஏக்கநாயக்க,
மாகாணக் கல்விப்பணிப்பாளர்,
மத்திய மாகாணக் கல்வித்திணைக்களம்,
கண்டி.

மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளரின் செய்தி

இலங்கையில் Covid 19 இன் பரவல் ஆரம்பித்த உடன் பிள்ளைகளை இப்பாதிப்பிலிருந்து பாதுகாக்கும் முகமாக 2020 March 12ம் திகதியளவில் மூடப்பட்ட பாடசாலைகள் இன்று வரை தமது வழமையான செயற்பாடுகளுக்கு திரும்ப முடியாத நிலையிலேயே உள்ளன.

இந்நிலையை ஓரளவேனும் ஈடு செய்யும் முகமாக மத்திய மாகாணக் கல்வி திணைக்களமானது இணையம், தொலைக்காட்சி, வானொலி, தொலைபேசி போன்ற டிஜிட்டல் தளங்களுடாக கல்வி நடவடிக்கைகளை மேற்கொள்ள முயற்சி செய்து வருகிறது. எனினும் இந்த டிஜிட்டல் வளங்களை அணுகும் சந்தர்ப்பங்கள் அனைத்து மாணவர்களுக்கும் சீராக அல்லது ஒரே மாதிரியாக அமையாமலிருப்பது எமக்கு மிகப் பெரிய சவாலாக உள்ளது.

எனவே 2021ல் உயர்தர பரீட்சைக்கு தோற்றவிருக்கும் மாணவர்களின் நன்மை கருதி இக்கற்றல் துணையேடு சகல பாடங்களுக்குமாக தயாரிக்கப்பட்டு மென் பிரதிகளாக பாடசாலைகளுக்கு முதற்கட்டமாக வழங்கப்படுகிறது. ஆர்வம், விடாமுயற்சி, இலக்கு நோக்கிய பயணம் என்பன நமது சமூக எழுச்சிக்கான அடிப்படையான கல்வி சார் நடவடிக்கைகளாக கருதி இன்று நாம் எதிர் கொள்ளும் சவால்களை வெற்றிகரமாக முகம் கொடுக்க தயாராக வேண்டும்.

எனவே எமது இந்த முயற்சியானது பரீட்சைக்கு உங்களை தயார் செய்து கொள்வதிலும் வெற்றிபெற செய்வதிலும் உறுதுணையாக இருக்கும் என்பதில் ஐயமில்லை. தவறவிடப்பட்ட கற்றல், கற்பித்தல் செயற்பாடுகளை சுயகற்றலின் வாயிலாக அடையும் வகையில் இக் கையேடு வடிவமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். மாணவச் செல்வங்கள் இக் கையேட்டினை முறையாக பயன்படுத்தி பரீட்சையில் வெற்றிபெற வாழ்த்துகின்றேன்.

இவற்றை தயாரித்து வடிவமைத்து தந்து உதவிய ஆசிரியர்கள், வளவாளர்கள் அனைவருக்கும் மிகப்பெரிய நன்றிகளையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஏ. ஆர். சத்தியேந்திரா,
மேலதிக மாகாணக் கல்விப்பணிப்பாளர்,
மத்திய மாகாணக் கல்வித்திணைக்களம்,
கண்டி.

மத்திய மாகாணக் கல்வித் திணைக்களம்

கண்காணிப்பும் மேற்பார்வையும்

E.P.T.K ஏக்கநாயக்க
மாகாணக் கல்விப் பணிப்பாளர்
மத்திய மாகாணக் கல்வித்திணைக்களம்

A.R சத்தியேந்திரா
மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர்
மத்திய மாகாணக் கல்வித்திணைக்களம்

A.L.M.சாருடீன்
மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர்
மத்திய மாகாணக் கல்வித்திணைக்களம்

வழிகாட்டல்

P. விக்னேஸ்வரன்
உதவிக் கல்விப் பணிப்பாளர்
மத்திய மாகாணக் கல்வித்திணைக்களம்

நூலாக்கம்

A.நந்தகுமார்
மமா/அ/சென்மேரிஸ் கல்லூரி, பொகவந்தலாவ.

கணிணி வடிவமைப்பு

I.தேவநாயகம்
மமா/அ/சென்மேரிஸ் கல்லூரி, பொகவந்தலாவ.

மத்திய மாகாண கல்வித் திணைக்களம்

பொருளடக்கம்

தேர்ச்சி இல	தேர்ச்சிகள்	பக்கம்
1	வணிக அடிப்படைகளையும் வணிகங்கள் செயற்படுகின்ற சூழலையும் தேடியறிவார்.	6
2	வணிகச் சூழலுக்கு இயைபாக்கமடைவதற்கு வணிகமானது சமூகரீதியான பொறுப்புக்கள், விழுமியங்கள் மீது கவனம் செலுத்தும் முறையினைக் கேட்டறிவார்.	13
3	அரசுடன் தொடர்புகளைப் பேணியவாறு வணிகங்களை நடாத்திச் செல்வதன் தேவைப்பாட்டினை உறுதிப்படுத்துவார்.	19
4	பல்வேறுவணிக அமைப்பு வகைகளையும் அவற்றை முறையாக ஆரம்பித்து நடத்திச் செல்வதற்கான தேவைப்பாட்டினையும் உறுதிப்படுத்துவார்.	25
5,6	சமூக பொருளாதார தனியாள் விருத்திக்காக முயற்சியாண்மையின் பங்களிப்பினை மதிப்பார். சிறிய நடுத்தர அளவான வணிகங்கள் பொருளாதார அபிவிருத்திக்கு வழங்கும் பங்களிப்பினை மதிப்பார்.	33
7	வணிகங்களின் வாழ்தன்மைக்கும் வளர்ச்சிக்கும் பணம் மற்றும் நிதி நிறுவனங்களினால் வழங்கப்படுகின்ற பங்களிப்பினை மதிப்பார்	40
8	வணிகங்களின் வாழ்தன்மைக்கு காப்புறுதியின் தேவைப்பாட்டினை உறுதிப்படுத்துவார்.	46
9	வணிகக் கருமங்களின் வெற்றிக்கு தொடர்பாடலை பயனுறுதியாக பயன்படுத்துவதன் தேவைப்பாட்டினை உறுதிப்படுத்துவார்.	47
10	போக்குவரத்தும் (Logistics) வழங்கல் சேவையும் வணிகங்களின் வெற்றிக்குப் பங்களிப்புச் செய்யும் முறையினைத் தேடியறிவார்.	48
11	உற்பத்திகளை விநியோகிப்பதற்கு வியாபாரம் பங்களிப்புச் செய்யும் முறையினைத் தேடியறிவார்.	52
16	வணிகத்தின் வெற்றிக்கு மனிதவளத்தை வினைத்திறனாக பயன்படுத்துகின்ற முறையினைத் தேடியறிவார்.	58
17	வணிகங்களின் வெற்றிக்கு தகவல் முறையின் பங்களிப்பினைப் பெற்றுக்கொள்கின்ற முறையினைத் தேடியறிவார்.	71
18	வணிகங்களை ஆரம்பிப்பதற்கும் விரிவாக்குவதற்கும் வணிகத் திட்டத்தினைத் தயாரிக்கும் முறையினை அறிந்துகொள்வார்.	76

மத்திய மாகாண கல்வித்திணைக்களம்

தேர்ச்சி – 1

வணிகம்

- மனித தேவைகள் விருப்பங்களை பூர்த்தி செய்வதற்குள்ள எந்தவொரு பொருளாதார நடவடிக்கையும் வணிகம் ஆகும்.

தேவைகள்

- மனிதனால் கட்டாயம் நிறைவு செய்ய வேண்டிய உடல், உள நிலமைகள் தேவைகள் எனப்படும்.

விருப்பம்

- தேவைகளை பூர்த்தி செய்து கொள்ளும் பல்வேறு முறைகள் விருப்பங்களாகும்.

உற்பத்தி

- மனித தேவைகளை பூர்த்தி செய்வதற்கு சந்தைக்கு முன்வைக்கப்படும் எதுவும் உற்பத்தியாகும்.
- உற்பத்தியை பிரதானமாக இரு வகைப்படுத்தலாம்.
  1) பொருட்கள்
  2) சேவைகள்

சந்தை

- கொள்வனவாளரும் விற்பனையாளரும் தொடர்புபடும் எந்தவொரு நிலைமையும் சந்தை எனப்படும்.

வணிகங்களில் காணப்படும் பண்புகள்

- விற்பனை அல்லது பரிமாற்றம் இடம்பெறல்
- பொருட்கள், சேவைகளில் கொடுக்கல், வாங்கல்கள் இடம்பெறல்.
- தொடர்ச்சியாக கொடுக்கல், வாங்கல்கள் இடம்பெறுதல்.
- இலாபத்தினால் ஊக்குவிக்கப்படல்.
- நட்ட இடர் காணப்படல்.
- விருப்பங்களை தோற்றுவித்தல்.
- பொருளாதார கருமமாக இருத்தல்.

மத்திய மாகாண கல்வித் திணைக்களம்

வணிகமொன்றின் பிரதான கருமங்கள்

- ❖ மனித தேவை விருப்பங்களை நிறைவு செய்தல்.
- ❖ வளங்களுக்கு பெறுமதி சேர்தல்.

வணிக பரம்பலின் முக்கியமான சந்தர்ப்பங்கள்

- ❖ பண்டமாற்று
- ❖ பண பாவனை
- ❖ கைத்தொழில் புரட்சி
- ❖ தகவல் பொருளாதாரம்

வணிகங்களை வகைபடுத்தும் நியதிகள்

- ❖ உற்பத்தி தன்மையின் அடிப்படையில்
  1) முதலாம் நிலை
  2) இரண்டாம் நிலை
  3) மூன்றாம் நிலை

- ❖ உரிமையின் அடிப்படையில்
  1) தனியார் துறை
  2) பொது துறை

- ❖ நோக்கத்தின் அடிப்படையில்
  1) இலாப நோக்கம்
  2) இலாப நோக்கமற்ற

- ❖ பருமனின் அடிப்படையில்
  1) சிறிய நடுத்தரளவ
  2) பாரியளவு

- ❖ உற்பத்தி துறையின் அடிப்படையில்
  1) விவசாயம்
  2) கைத்தொழில்
  3) சேவை

வணிகத்தின் உள்ளீட்டு வெளியீட்டு செயன்முறை

- ❖ உள்ளீடு ⟹ செயன்முறை ⟹ வெளியீடு

மத்திய மாகாண கல்வித் திணைக்களம்

உள்ளீடுகள்

- நிலம்
- உழைப்பு
- மூலதனம்
- முயற்சி
- அறிவு
- தகவல்
- நேரம்

செயன்முறை கருமங்கள்

- நிர்வாகம்
- உற்பத்தி
- சந்தைப்படுத்தல்
- நிதி நடவடிக்கை
- மனித வள கருமம்
- ஆராய்ச்சி அபிவருத்தி
- தகவல் முகாமைத்துவ கருமம்

வெளியீடு

- பொருட்கள்
- சேவைகள்

வணிகம் தொடர்பில் அக்கறை செலுத்தும் பிரிவினர்

- உரிமையாளர்
- முகாமையாளர்
- ஊழியர்
- கடன்கொடுத்தோர்
- வாடிக்கையாளர்
- வழங்குநர்கள்
- அரசு
- பல்வேறு முதலீட்டாளர்கள்
- பொது மக்கள்

வணிக சூழல்

- வணிக கருமங்களில் தாக்கத்தையேற்படுத்தும் காரணிகள் செயற்படுகின்ற சூழல் வணிக சூழல் எனப்படும். இது இரு வகைப்படும்.
  1) அகச் சூழல்
  2) புறச் சூழல்

அகச்சூழல்

மத்திய மாகாண கல்வித் திணைக்களம்

❖ அமைப்பொன்றில் காணப்படுகின்றதும் தாக்கத்தை ஏற்படுத்துவதுமான குழுக்கள், நிலைமைகள் என்பன அகச் சூழல் எனப்படும். அகச்சூழல் விரைகளாவன
  1) உரிமையாளர்
  2) முகாமையாளர்
  3) ஊழியர்
  4) நிறுவன கட்டமைப்பு
  5) நிறுவன கலாச்சாரம்
  6) வளங்கள்

புறச்சூழல்

❖ வணிகத்தில் தாக்கத்தை ஏற்படுத்துவதும் அவ்வணிகத்திற்கு வெளியில் காணப்படும் சகலதும் புறச்சூழல் எனப்படும். இது இரு வகைப்படும்.
  1) அண்மிய சூழல்
  2) பேரின சூழல்

அண்மிய சூழல்

❖ வணிக புறச்சூழலுக்குரியவைகளில் வணிகத்தில் தாக்கத்தை ஏற்படுத்துகின்ற விஷேட அமைப்பு அல்லது குழு வேலை சூழல் அல்லது அண்மிய சூழல் எனப்படும்.
❖ அண்மிய சூழல் காரணிகளாவன
  1) நுகர்வோர்
  2) வழங்குநர்
  3) போட்டியாளர்கள்
  4) பிரதீயீட்டு பொருள் உற்பத்தியாளர்
  5) சந்தையில் பிரவேசிப்பதற்கு எதிர்பார்த்திருக்கும் புதிய வணிகர்கள்

பேரின சூழல்

❖ வணிகத்தின் விரிவான சுற்று சூழலும் அதனுடன் இணைந்து தாக்கத்தை ஏற்படுத்தும் குழுவும் பேரின சூழல் எனப்படும். பேரின சூழல் விரைகளாவன
  1) பொருளாதார சூழல்
  2) அரசியல் சூழல்
  3) சட்ட சூழல்
  4) மக்கள் சூழல்
  5) தொழினுட்ப சூழல்
  6) இயற்கை சூழல்
  7) சமூக மற்றும் கலாசார சூழல்
  8) பூகோள சூழல்

வணிக சூழலை கற்பதன் மூலம் வணிகரொருவருக்கு கிடைக்கும் நன்மைகள்

மத்திய மாகாண கல்வித்திணைக்களம்

- ❖ பலங்களை அறிந்து கொள்ளலாம்
- ❖ பலவீனங்களை அறிந்து கொள்ளலாம்
- ❖ வாய்ப்புக்களை அறிந்து கொள்ளலாம்
- ❖ சவால்களை அறிந்து கொள்ளலாம்

தேர்ச்சி – 1

சரியான விடையின் கீழ் கோடிடுக.

1) பின்வருவனவற்றுள் சரியான கூற்று
   1) தேவைகள் கட்டாயமானது, விருப்பங்கள் வரையறுக்கப்பட்டது.
   2) தேவைகள் கட்டாயமானது, விருப்பங்கள் பொதுவானது
   3) தேவைகளை தோற்றுவிக்க முடியும், விருப்பங்கள் வேறுபட்டதாக அமையும்.
   4) தேவைகள் வரையறுக்கப்பட்டது, விருப்பங்கள் மாறுபட்டதாக காணப்படல்.
   5) தேவைகள் வரையறுக்கப்பட்டது, விருப்பங்கள் இயல்பாக தோன்றுவது.

2) கைத்தொழில் புரட்சியின் மூலம் ஏற்பட்ட மாற்றமாக கொள்ள முடியாதது
   1) கைத்தொழில் புரட்சியானது வணிக பரம்பலின் மூன்றாவது கட்டமாகும்.
   2) வணிக நடவடிக்கைகள் அனைத்தும் இலத்திரனியல் மயமானது.
   3) கைத்தொழில் புரட்சியுடன் துணை சேவைகளின் வளர்ச்சி ஏற்பட்டது.
   4) சிற்றளவு கைத்தொழில்கள் பாரியளவு கைத்தொழிலாக வளர்ச்சியடைந்தது.
   5) சர்வதேச வர்த்தகம் வளர்ச்சியடைந்தது.

3) கைத்தொழில் துறையில் உள்ளடக்கப்படும் விடயங்கள்
   1) உற்பத்தி கைத்தொழில், சுரங்கமறுத்தல், தகவல் தொடர்பாடல்
   2) சுரங்கமறுத்தல், நிர்மாண கைத்தொழில், உணவு குடிபானம் வழங்கல்
   3) கனிய அகழ்வு, மீன்பிடி கைத்தொழில், நீர் சுத்திகரிப்பு வினியோகம்
   4) கனிய அகழ்வு, சுரங்கமறுத்தல், நீர் சுத்திகரிப்பு வினியோகம்
   5) நிர்மாண கைத்தொழில், உணவு குடிபானம் வழங்கல், மின், வாயு, வெப்பம், குளிரூட்டல் வழங்கல்.

4) முகாமையாளர்களின் உள ரீதியான உழைப்பு, இடர்களை ஏற்று தீர்மானமெடுத்தல் என்பன எவ் உற்பத்தி காரணிகளுக்கு கீழ் உள்ளடக்கப்படும் என்பதை முறையாக காட்டும் விடை
   1) உழைப்பு, அறிவு 2) உழைப்பு, தகவல 3) உழைப்பு, மூலதனம்
   4)உழைப்பு, முயற்சியாண்மை 5) முயற்சியாண்மை, உழைப்பு

5) கருமங்கள் உதாரணம்

கருமங்கள்	உதாரணம்
1)நிர்வாகம்	A)விலையினை தீர்மானித்தல்
2)உற்பத்தி	B)சம்பள கொடுப்பனவு
3)சந்தைப்படுத்தல்	C)தர கட்டுப்பாடு
4)நிதி	D) வருகை அட்டவணை பேணல்

தொடர்புபடுத்தலின் போது சரியான விடையாக அமைவது

1) 1-B, 2-C, 3-D, 4-A 2) 1-B, 2-A, 3-C, 4-D 3)1-D, 2-B, 3-C, 4-A
4)1-D, 2-B, 3-A, 4-C 5)1-D, 2-C, 3-A, 4

6) வழங்கப்பட்ட கடனை மீளபெற்றுக் கொள்வதற்கு கடன் பணத்தின் பாதுகாப்பினை அறிந்து கொள்வதற்கும் வணிகத்தின் மீது அக்கறை செலுத்தும் தரப்பினர் பின்வருவோருள் யார்?
   1) முகாமையாளர் 2) கடன்கொடுத்தோர் 3)வழங்குநர்
   4)முதலீட்டாளர் 5)ஊழியர்கள்

7) அண்மிய சூழல் காரணிகளை மட்டும் கொண்ட தொகுதி
   1) நுகர்வோர், வழங்குநர், போட்டியாளர், பிரதியீட்டு பொருள் உற்பத்தியாளர்
   2) ஊழியர், வாடிக்கையாளர், போட்டியாளர், பிரதியீட்டு பொருள் உற்பத்தியாளர்
   3) நுகர்வோர், ஊழியர், போட்டியாளர், வழங்குநர்
   4) நுகர்வோர், வளங்கள், போட்டியாளர், பிரதியீட்டு பொருள் உற்பத்தியாளர்
   5) புதிய வணிகர்கள், போட்டியாளர், மக்கள் சூழல், வழங்குநர்

8) நிறுவனத்தின் நோக்கத்தினை அடைந்து கொள்வதற்கு அமைப்பின் கருமங்கள், வளங்கள், அதிகாரம் என்பன முறையை காட்டுவது
   1)நிறுவன கலாச்சாரம் 2) ஊழியர் தொடர்பான கட்டமைப்பு
   3)வளங்கள் தொடர்பான கட்டமைப்பு 4) மூலதன கட்டமைப்பு
   5)நிறுவன கட்டமைப்பு

9) A- நுகர்வோரின் வருமானம் அதிகரித்தல்.
   B- அதிகளவான கடன் கட்டுப்பாடுகள் காணப்படல்.
   C – அதிகளவான போட்டியாளர்கள் காணப்படல்.
   D – பதிலீட்டு பொருள் உற்பத்தியாளர்கள் சந்தையிலிருந்து வெளியேறுதல்.
   E – முதலீட்டாளர்கள் சந்தையில் பிரவேசிக்க எதிர்பார்ப்புடன் இருத்தல்.
   மேலுள்ளவற்றுள் வணிகத்திற்கு வாய்ப்பாக மட்டும் உள்ள விடயங்களிள் தொகுதி
   1) A, B,C,E 2) A,B,D,E 3) A,B,D 4) A,D,E 5) A,C,E

மத்திய மாகாண கல்வித் திணைக்களம்

10) பின்வருவனவற்றுள் பொருளாதார சூழல் காரணிகளை மட்டும் கொண்ட தொகுதி
   1) விலை, பணவீக்கம், முதலீடு, சேமிப்பு, கல்வி மட்டம்
   2) விலை, பணவீக்கம், வாழ்க்கை செலவு, வருமான பகிர்வு, வேலை வாய்ப்பு
   3) விலை, முதலீடு, சேமிப்பு, வாழ்க்கைச் செலவு, மனை அமைப்பு
   4) விலை, முதலீடு, தரசட்டம், அந்நியசெலாவணி, வேலை வாய்ப்பு
   5) விலை, முதலீடு, வாழ்க்கை செலவு, தொடர்பாடல், சேமிப்பு, பணவீக்கம்

இடைவெளி நிரப்புக.

1) வணிகமென்பது ……………, ………….. என்பவற்றை நிறைவு செய்வதற்காகவுள்ள பொருளாதார நடவடிக்கை என்பதுடன் உற்பத்தியினை பிரதானமாக ……………., …………… என வகைபடுத்த முடியும்.
2) கொள்வனவாளரும் விற்பனையாளரும் தொடர்புபடும் எந்தவொரு நிலைமையும் ………………… என அழைக்கப்படுவதுடன் பொருளொன்றை உற்பத்தி செய்யும் போது வளங்களின் தன்மையில் மாற்றங்கள் செய்வதன் மூலம் ஏற்படுகின்ற பெறுமதி அதிகரிப்பு ……………….. பெறுமதி எனப்படும்.
3) வணிக பரம்பலின் முக்கியமான சந்தர்ப்பங்களாக …………… , …………. , ……………. , ………….. என்பவற்றை கூறலாம்.
4) உற்பத்தியின் தன்மைக்கேற்ப வகைப்படுத்தும் போது 2ம் நிலை உற்பத்தியினுள் ………………. , ………………… என்பன உள்ளடக்கப்படும்.
5) அமைப்பொன்றில் காணப்படுவதும் தாக்கத்தை ஏற்படுத்துவதுமான …………… , ………………. அகச்சூழல் என அழைக்கப்படும்.
6) வணிக சூழலை கற்பதன் மூலம் வணிகர் ஒருவர் …………….. , ………………… , …………………… , ………………….. ஆகிய தன்மைகளை பெற்றுக் கொள்ளலாம்.
7) உயர்மட்ட முகாமையாள் எடுக்கப்படுகின்ற தீர்மானங்களை நடைமுறைப்படுத்துபவர்கள் ……………. எனவும் பொருட்கள் சேவைகளை உற்பத்தி செய்வதற்கு உள்ளீடுகளை பயன்படுத்துகின்றவை ……………… எனவும் அழைக்கப்படும்.
8) நேர் உற்பத்தி மூலம் ஏற்பட்ட ………………… காரணமாக ………………….. தோற்றம் பெற்றது.
9) வலையமைப்பினூடாக கொள்வனவு விற்பனை நடவடிக்கைகள் இடம்பெறுவது ……………… எனவும் வணிக நடவடிக்கைகள் அனைத்தும் வலையமைப்பின் மூலம் இடம்பெறுவது ………………… எனவும் அழைக்கப்படும்.
10) தனிநபர்களிடம் காணப்படும் நம்பிக்கைகள், பெறுமதிகள், ……………………. சனத்தொகையின் அளவு, வளர்ச்சி வீதம், பால் வேறுபாடு …………………… உள்ளடக்கிய காரணிகளாகும்.

பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.

1) தேவை விருப்பங்களுக்கிடையிலான வேறுபாடுகளை குறிப்பிடுக.
2) வணிகங்களில் காணப்படகூடிய பண்புகள் 5 இனை குறிப்பிடுக.
3) பொருளாதார வாழ்தன்மைக்கு வணிகங்கள் பங்களிப்பு செய்யும் முறையினை குறிப்பிடுக.
4) இலத்திரனியல் பணம் என்பது யாது? உதாரணம் தருக.
5) நிகழ்காலத்தில் தகவல் தொழிநுட்பத்தின் வளர்ச்சி காரணமாக வணிக துறையில் ஏற்பட்ட நவீன போக்குகள் எவை?
6) வணிகங்களை வளப்படுத்தல் நியதிகளை குறிப்பிடுக.
7) முகாமையாளர், ஊழியர்கள் வணிகத்தின் மீது அக்கறை செலுத்துவதற்கான காரணங்கள் இவ்விரண்டு வீதம் குறிப்பிடுக.
8) வணிக சூழலை வகைபடுத்தி காட்டுக.

மத்திய மாகாண கல்வித்திணைக்களம்

9) பேரின சூழல் காரணிகள் 2 இனை குறிப்பிட்டு அது எவ்வாறு வணிகத்திற்கு வாய்ப்பாகவும் அச்சுறுத்தலாகவும் அமையும் என்பதை இவ்விரண்டு உதாரணம் கொண்டு விளக்குக.
10) பேரின சூழல் காரணிகளால் அண்மிய சூழல் காரணிகளில் தாக்கத்தை ஏற்படுத்துவதினூடாக வணிகங்களுக்கான வாய்ப்புக்கள் அச்சுறுத்தல்களை உருவாக்க முடியும் என்பதை 2 உதாரணங்கள் மூலம் விளக்குக.

தேர்ச்சி – 2

வணிகங்களின் சமூக பொறுப்பு

- ❖ வணிகத்துடன் தொடர்புடைய அனைத்து அக்கறை செலுத்தும் பிரிவினர்களுக்கும் இயன்றளவில் நியாயமொன்று நிறைவேற்றக் கூடிய முறையில் நடவடிக்கை மேற்கொள்ளல் சமூகபொறுப்பாகும்.
- ❖ வணிகம் சமூக ரீதியான பொறுப்புக்களை நிறைவேற்ற வேண்டிய தரப்பினர்.

1) வாடிக்கையாளர்
   - நியாயமாக நடந்து கொள்ளல்
   - சேதத்தை இழிவுபடுத்தல்.
   - உரிமைகளை பாதுகாத்தல்

2) ஊழியர்கள்
   - சமத்துவமான நிலை
   - தொழில் பாதுகாப்பு
   - சிறந்த ஊழியர் தொடர்பு

3) உரிமையாளர்
   - நியாயமாக உழைப்பை பெற்று கொள்ளல்.
   - பொருளாதார நலன்களை பெற்று கொள்ளல்
   - நேர்மையாகவும் வினைதிறனாகவும் முகாமை கருமங்களை நிறைவேற்றல்.

4) சமூகம்
   - வேலை வாய்ப்பை வழங்கல்.
   - வரியை உரிய முறையில் வழங்கல்.
   - கழிவு பொருள் முகாமைத்துவம்

நிலைபேறான அபிவிருத்தி

- ❖ நிலைபேறான அபிவிருத்தி என்பது எதிர்கால பரம்பரையினரின் தேவைகளை நிறைவு செய்வதற்கு இருக்கின் உரிமையினை புறக்கணிக்காது நிகழ்கால தேவைகளை அடைந்து கொள்வதற்கான அபிவிருத்தியாகும்.
- ❖ இது மூன்று தூண்களின் அடிப்படையில் கட்டியெழுப்பப்பட்டுள்ளது.

மத்திய மாகாண கல்வித் திணைக்களம்

1) பொருளாதார நிலைபேறான அபிவிருத்தி
2) சூழல் நிலைபேறான அபிவிருத்தி
3) சமூக நிலைபேறான அபிவிருத்தி

வணிகமொன்று பொருளாதார நிலைபேறான தன்மையின் சார்பாக கருமமாற்றும் பொழுது கவனம் செலுத்தப்பட வேண்டிய விடயங்கள்

- பொருளாதார விருத்தியும் நிலைபாடும்
- வினைதிறனான வளப் பயன்பாடு
- நியாயமான போட்டி
- உற்பத்தியும் நுகர்வும்
- பூரண வேலைவாய்ப்பு
- சர்வதேச வியாபாரம்

வணிகமொன்று சூழல் நிலைபேறான தன்மையின் சார்பாக கருமமாற்றும் பொழுது கவனம் செலுத்த வேண்டிய விடயங்கள்

- வளப்பயன்பாடு
- மூலப்பொருள், கழிவுபொருள் முகாமைத்துவம்
- இடர் முகாமைத்துவம்
- இயற்கையானதும் கலாச்சார உரிமங்களை பாதுகாத்தல்.

வணிகமொன்று சூழல் நிலைபேறான தன்மையின் சார்பாக கருமமாற்றும் பொழுது கவனம் செலுத்த வேண்டிய விடயங்கள்

- மக்களின் வாழ்க்கை தரத்தை உயர்த்துதல்.
- சமமான சந்தர்ப்பங்களை ஏற்படுத்தல்.
- சமூக ஓரினத்தன்மையை ஏற்படுத்தல்.
- சர்வதேச ஒத்துழைப்புக்களை பெற்று கொள்ளல்.
- மனித மூலதனத்தை பராமரித்தல்.
- கலாச்சார சூழலை பாதுகாத்தல்.

நிலைபேறான தன்மைக்கான 4R எண்ணக்கரு

- மீள்சுழற்சி
- மீள்பாவனை
- பாவனையை குறைத்தல்
- மீள் உருவாக்கம்

வணிக ஒழுக்கவிழுமியம்

- ❖ வணிகம் தன்னுடன் கருமமாற்றுகின்ற சகல தரப்பினருக்கும் நன்மை பயக்ககூடிய முறையில் நல்லவை தீயவை தொடர்பாக விளங்கி செயற்படல் ஒழுக்க விழுமியம் எனப்படும்.

வணிக ஒழுக்கவிழுமிய முறைமையொன்றை கட்டியெழுப்பும் போது கவனம் செலுத்த வேண்டிய விடயங்கள்

- ❖ வணிகம்
- ❖ வாடிக்கையாளர்
- ❖ ஊழியர்
- ❖ போட்டியாளர்
- ❖ சமூக கலாச்சாரம்
- ❖ அமைப்பு கலாச்சாரம்
- ❖ நடைமுறை ரீதியானது

தேர்ச்சி – 2

சரியான விடையின் கீழ் கோடிடுக.

1) சமூகத்தில் நேரான தாக்கமொன்றை உருவாக்குவதற்கு வணிக செயற்பாடுகளை எவ்வாறு முகாமைத்துவம் செய்வது என்பது தொடர்பான கருத்தொன்றே சமூக பொறுப்பாகும். என வரைவிலக்கணம் கூறியவர்
   1) நாராயண மூர்த்தி
   2) மாலன் பேட்டர்
   3) உலக வர்த்தக சங்கம்
   4) USA
   5) பிலிப்பைன்ஸ்

2) வணிக நிறுவனம் ஒன்றினூடாக பின்வரும் சமூகரீதியான பொறுப்புக்கள் நிறைவேற்றப்பட்டன.
   A – சேதத்தை இழிவுபடுத்தல்
   B – வரி செலுத்தலை சரியாக மேற்கொள்ளல்
   C – வேலை வாய்ப்பிற்கு பங்களிப்பு செய்தல்.
   D – பொருளாதார நலன்களை பெற்றுக் கொள்ளல்.
   E – பசுமை உற்பத்தியினை மேற்கொள்ளல்
   மேற்கூறியவற்றில் சமூகம் தொடர்பாக நிறைவேற்றப்பட்ட பொறுப்புக்களை மட்டும் கொண்ட தொகுதி
   1) ABC 2) BCD 3) BCE 4) BDE 5) ACE

3) பின்வரும் பிரிவினர்களுக்கு வணிகத்தினால் நிறைவேற்றப்பட்ட சமூக ரீதியான பொறுப்புக்கள் தரப்பட்டுள்ளது.

பிரிவினர்	நிறைவேற்றப்பட்ட சமூக ரீதியான பொறுப்பு
A) உரிமையாளர்	1) உரிமைகளை பாதுகாத்தல்
B) வாடிக்கையாளர்	2) நியாயமாக உழைப்பை பெற்று கொள்ளல்
	3) பொருளாதார நலன்களை பெற்று கொள்ளல்.
	4) தொழில் பாதுகாப்பு

மத்திய மாகாண கல்வித் திணைக்களம்

5) சேதத்தை இழிவுபடுத்தல்

மேலுள்ளவற்றை தொடர்புபடுத்தினால் சரியான விடையாக அமைவது
1) A – 1, 3 , B – 2, 4
2) A – 3, 5 , B – 3, 4
3) A – 1, 2 , B – 3, 4
4) A – 3, 5 , B – 1, 4
5) A – 2 , 3, B – 1, 5

4) சமூக ரீதியான பொறுப்புக்களை நிறைவேற்றும் பொழுது குறித்த தரப்பினருக்கு நியாயமான உழைப்பை பெற்றுக் கொடுத்தல், மூலதனம் ஏனைய பிரிவினருக்கு சேதத்தை இழிவுபடுத்தல், வரியை சரியாக செலுத்ததுதல், குறித்த தரப்பினரிடையே சமத்துவமான நிலையை பேணல் மூலமும் ஒவ்வொரு பிரிவினரதும் சமூகப் பொறுப்புக்கள் நிறைவேற்றப்பட வேண்டும். இங்கு குறிப்பிடப்பட்டுள்ள சமூகப் பொறுப்புக்கள் நிறைவேற்றப்பட்ட தரப்பினரை ஒழுங்கு முறையாக காட்டினால் சரியான விடை?
1) ஊழியர், சமூகம், உரிமையாளர், வாடிக்கையாளர்
2) உரிமையாளர், வாடிக்கையாளர், சமூகம், ஊழியர்
3) உரிமையாளர், சமூகம், வாடிக்கையாளர், ஊழியர்
4) சமூகம், உரிமையாளர், வாடிக்கையாளர், ஊழியர்
5) ஊழியர், வாடிக்கையாளர், உரிமையாளர், சமூகம்

5)

வரைவிலக்கணம்	உரியதரப்பினர்
A) வாடிக்கையாளர், ஊழியர், சமூகம், அரசு; சூழல் போன்ற அனைத்து பிரிவினருக்கும் நியாயமான வகையில் கருமமாற்றி உச்ச பெறுமானமொன்றை பெற்றுக் கொடுத்தல்.	1)வர்த்தக சங்கம் 2) மாலன் பேக்கர் 3) நாராயணமூர்த்தி 4)அமெரிக்ககுடியரசு
B) தனது வணிக நடவடிக்கை தொடர்பாக அதன் மூலம் சமூகத்திற்கு ஏற்படும் தாக்கம் தொடர்பாக தனிப்பட்ட ரீதியிலான வணிக பொறுப்பு	5) பிலிப்பைன்ஸ்

மேற்கூறிய வரைவிலக்கணத்தை உரிய தரப்பினருடன் தொடர்புபடுத்தும் போது சரியாக காட்டும் விடை?
1) A – 2 , B – 4 2) A – 3 , B – 1 3) A – 3 , B – 5 4) A – 1 , B – 4 5) A- 3 , B – 4

6) நிலைபேறான அபிவருத்திக்காக வணிகங்கள் கருமமாற்றும் பொழுது கவனம் செலுத்த வேண்டிய விடயங்கள் சில கீழே தரப்பட்டுள்ளன.
A – வளப்பயன்பாடு
B – பூரண வேலை வாய்ப்பு
C – வாழ்க்கை தரத்தை உயர்த்துதல்.
D – கழிவு முகாமைத்துவம்
E – மனித மூலதனம்

F – நியாயமான போட்டி
மேலுள்ளவற்றில் பொருளாதார நிலைபேறான அபிவிருத்தி தொடர்பாக கருமமாற்றும் பொழுது கவனம் செலுத்த வேண்டிய விடயங்கள்
1) ABF 2) ABC 3) BCD 4) ABE 5) ABD

7) ஜேர்மன் பாவனையிலிருந்து ஒதுக்கப்படுகின்ற மோட்டார் வாகனங்களை உடைத்து இரும்புகளாக மாற்றுதல்
   1) Up cycle 2) Low cycle 3) Reuse 4) Reduce 5) Replace

8) சில வணிகங்களின் ஒழுக்க விழுமிய மீறல்கள் கீழே தரப்பட்டுள்ளன. இவற்றில் வணிக ஆளணி தொடர்பான ஒழுக்க விழுமிய மீறல் எது?
   1) போலியான தரம் குறைந்த பொருட்களை வழங்குதல்.
   2) பால் வேறுபாட்டுடன் வேதன கணிப்பு
   3) நிதி மோசடிகளில் ஈடுபடுவதற்கு முறைகேடான முறையில் கணக்கீடுகளை தயாரித்தல்.
   4) தரக்குறிகளை தவறாக பயன்படுத்தல்.
   5) போலி விளம்பரம் மூலம் நுகர்வோரை கவருதல்.

9) வணிகமானது சூழல் நிலைபேறான தன்மை கொண்டுள்ளது என்பதை உறுதிபடுத்துவதற்கு மேற்கொள்ள வேண்டிய செயற்பாடுகள் பின்வருவனவற்றுள் எது?
   1) நிறுவனத்தின் உட்கட்டமைப்பு வசதிகளின் விருத்திக்கு பங்களிப்பு செய்தல்.
   2) தொழிநுட்பத்தை விருத்தி செய்தல்.
   3) உயிரினங்களின் பல்லினத்தன்மையை பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுத்தல்.
   4) கலாச்சார சூழலை பாதுகாத்தல்.
   5) மானிட பல்லினத் தன்மைக்கு மதிப்பளித்து கருமமாற்றுதல்.

10) நிலைபேறான அபிவருத்தி தொடர்பான சில நடவடிக்கைகள் வருமாறு.
   1) கலாச்சார சூழலை பாதுகாத்தல்.
   2) வறுமையை இழிவுபடுத்தல்.
   3) ஊழியர் தொடர்பு
   4) மக்களின் வாழ்க்கை தரத்தை உயர்த்துதல்.

   மேற்கூறப்பட்ட நடவடிக்கைகள் உள்ளடக்கப்படுவது
   1) வணிகமொன்று பொருளாதார நிலைபேறானது என்பதை உறுதிப்படுத்துவதற்காக மேற்கொள்ள வேண்டிய கருமங்கள் சில.
   2) வணிகமானது சூழல் நிலைபேறான தன்மையை கொண்டுள்ளது என்பதை உறுதிப்படுத்துவதற்காக மேற்கொள்ள வேண்டிய கருமங்கள் சில.
   3) வணிகம் பொருளாதார நிலைபேறான தன்மையின் சார்பாக கருமமாற்றும் பொழுது கவனம் செலுத்தப்பட வேண்டிய விடயங்கள் சில.
   4) வணிகமானது சமூக கலாச்சார நிலைபேறான தன்மை கொண்டுள்ளது என்பதை உறுதிப்படுத்துவதற்கு மேற்கொள்ள வேண்டிய கருமங்கள் சில.

5) வணிகம் சமூக கலாச்சார நிலைபேறான தன்மையின் சார்பாக கருமமாற்றும் பொழுது கவனம் செலுத்தப்பட வேண்டிய விடயங்கள் சில.

இடைவெளி நிரப்புக.

11) வணிகத்துடன் தொடர்புடைய அனைத்து ………………… செலுத்தும் பிரிவினர்களுக்கு இயன்றளவில் …………………….. நிறைவேற்றக்கூடிய முறையில் நடவடிக்கை மேற்கொள்ளல் சமூக பொறுப்பாகும்.
12) வணிகங்களில் சமூக ரீதியான பொறுப்புக்களை நிறைவேற்ற வேண்டிய தரப்பினர் ……………… , ………………… ,………………… , ………………. என்பவராவர்.
13) ……………………. , ……………………. ஒரு நாட்டில் காணப்படும் பொழுது அங்கு சமத்துவமான நிலை காணப்படல்.
14) நிலைபேறான சூழல் அபிவிருத்தியை அடைந்து கொள்வதற்காக செயற்படும் பொழுது …………….. , ………………. , ……………… , ……………….. போன்ற விடயங்கள் தொடர்பில் கவனம் செலுத்த வேண்டும்.
15) நவீன சமூகத்தின் ………………. , ………………… போன்ற செயற்பாடுகள் காரணமாக நாளாந்தம் அளவுக்கதிகமான கழிவுப் பொருள்கள் சேர்வதானது பூகோள ரீதியான பிரச்சினையொன்றாக மாறி உள்ளது.

பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.

1) வணிகத்தின் மீது அக்கறை செலுத்தும் பிரிவினர்களுக்கும் பொதுவாக சமூகத்திற்கும் அழுத்தங்களை ஏற்படுத்தும் காரணிகள் பல வளர்ச்சியடைந்த வண்ணம் உள்ளன. அவ்வாறான காரணிகள் 4 இனை குறிப்பிடுக.
2) ஊழியர் தொடர்பாக வணிகத்தினால் நிறைவேற்ற வேண்டிய சமூக பொறுப்புக்கள் 4 இனை குறிப்பிடுக.
3) நிலைபேறான அபிவிருத்தி 3 சமமான பிரதான கோபுரங்களின் அடிப்படையிலேயே கட்டியெழுப்பப்படுகின்றன. அவை எவை?
4) கழிவு பொருள் முகாமைத்துவத்தின் போது 4R எண்ணக்கரு பயன்படுத்தப்படுகின்றது. 4R பிரதிநிதித்துவப்படுத்தப்படும் விடயங்களை குறிப்பிடுக.
5) வணிக ஒழுக்க விழுமிய முறைமையொன்றை கட்டியெழுப்பும் போது கவனம் செலுத்த வேண்டிய விடயங்கள் 4 இனை குறிப்பிடுக.

மத்திய மாகாண கல்வித் திணைக்களம்

தேர்ச்சி – 3

அரசு வணிகங்களில் செல்வாக்கு செலுத்தும் முறைகள்

- ❖ உட்கட்டமைப்பு வசதிகளை வழங்கல்.
- ❖ போட்டியாளரொருவராக செயற்படுதல்.
- ❖ வாடிக்கையாளரொருவராக செயற்படுதல்.
- ❖ கொள்கைகளை உருவாக்கல்.
- ❖ சட்டதிட்டங்களை உருவாக்கல்.
- ❖ வரி அறவீட்டாளராக செயற்படுதல்.

அரசின் பொருளாதார நோக்கங்கள்

- ❖ பொருளாதார வளர்ச்சியும் அபிவருத்தியும்
- ❖ பூரண வேலை வாய்ப்பு மட்டும்
- ❖ நியாயமான வருமான பரம்பல்.
- ❖ பொருளாதார நிலைப்பு தன்மை
  1) அகரீதியான விலை நிலைப்பு தன்மை
  2) புறரீதியான விலை நிலைப்பு தன்மை
- ❖ சாதகமான சர்வதேச வியாபாரம்

அரசின் பொருளாதார நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதற்கு வணிகங்கள் பங்களிப்பு செய்யும் முறைகள்

- ❖ வரி கொடுப்பனவு
- ❖ உள்நாட்டு வள பயன்பாடு
- ❖ அரசினால் நடைமுறைப்படுத்தப்படும் கொள்கைகளை பின்பற்றுதல்.
- ❖ சட்டதிட்டங்களை பின்பற்றல்
- ❖ வேலை வாய்ப்பிற்கு பங்களிப்பு செய்தல்.
- ❖ சூழல் மாசடைவதை இழிவுபடுத்தல்.

இறை கொள்கை

- ❖ அரச வருமானங்கள், செலவுகள் தொடர்பாக இடம்பெறும் கருமங்கள் இறை கொள்கை எனப்படும்.

அரச வருமானம்

- ❖ யாதேனும் பொருளாதாரமொன்றில் நிதியாண்டொன்றில் வரி, வரி அல்லாத வகைகளின் மூலம் கிடைக்கும் வருமானம் அரச வருமானமாகும்.

மத்திய மாகாண கல்வித் திணைக்களம்

- இது இரு வகைப்படும்.
  1) வரி வருமானம்
  2) வரி அல்லாத வருமானம்

வரி வருமானம்

- நேர் வரி
  1) வருமான வரி
  2) கம்பனி வரி
  3) நிறுத்தி வைத்தல் வரி
  4) மூலதன இலாபத்தின் மீதான வரி
- நேரில் வரி
  1) சேர்க்கப்பட்ட பெறுமதியின் வரி
  2) சுங்க வரி
  3) உற்பத்தி வரி

வரி அல்லாத வருமானங்கள்

- இலாபங்களும், பங்கிலாபங்களும்
- கட்டணங்களும், அறவீடுகளும்
- வட்டி வருமானம்
- ஏனையவை

அரச செலவுகள்

- விருத்தி செலவு
- மூலதன செலவு

நிதி கொள்கை

- நாட்டின் பண வழங்களை கட்டுப்படுத்துவதற்கு அரசு பின்பற்றும் கொள்கை நிதி கொள்கை எனப்படும். நிதி கொள்கையினை இலங்கை மத்திய வங்கி நடைமுறைப்படுத்தப்படுகின்றது.
- நிதி கொள்கையை நடைமுறைபடுத்துவதற்கு மத்திய வங்கி பயன்படுத்தும் கருவிகள்
  1) வட்டி வீதம்
     - நிலையான வைப்பு வசதி வீதம்
     - நிலையான கடன் வசதி வீதம்
     - வங்கி வட்டி வீதம்
  2) ஒதுக்கு தேவைபாட்டை மாற்றுதல்
  3) திறந்த சந்தை நடவடிக்கைகள்
  4) கழிவு விகிதங்களை மாற்றுதல்.
  5) கடன் கட்டுப்பாடுகளை விதித்தல்.
     - அளவு ரீதியான கடன் கட்டுப்பாடு
     - பண்பு ரீதியான கடன் கட்டுப்பாடு

மத்திய மாகாண கல்வித் திணைக்களம்

நுகர்வோர் பாதுகாப்பு

- ❖ நுகர்வோரினால் செலுத்தப்படும் பணத்திற்கு தேவையான அளவிலான திருப்தியை பெற்று கொடுப்பதை உறுதிபடுத்துவதற்காக இருக்கின்ற சட்டரீதியான காப்பு நுகர்வோர் பாதுகாப்பாகும்.

சர்வதேச ரீதியாக ஏற்றுக்கொள்ளப்பட்ட நுகர்வோர் உரிமைகள்

- ❖ ஜோன்.F.கௌடியினால் பிரகடனப்படுத்தப்பட்ட நுகர்வோர் உரிமைகள்
  1) பாதுகாப்பை ஏற்படுத்தி கொள்வதற்காக உரிமை
  2) தகவல் அறிந்து கொள்வதற்கான உரிமை
  3) தெரிவு செய்வதற்கான உரிமை
  4) செவிமடுப்பதற்கான உரிமை

- ❖ சர்வதேச நுகர்வோர் சங்கத்தினால் பிரகடனப்படுத்தப்பட்ட நுகர்வோர் உரிமைகள்
  1) அடிப்படை தேவைகளை நிறைவு செய்து கொள்வதற்கான உரிமை
  2) இழப்பீட்டை பெற்று கொள்வதற்கான உரிமை
  3) நுகர்வோர் கல்வியை பெற்று கொள்வதற்கான உரிமை
  4) தேகாரோக்கியம் கொண்ட சூழலில் வாழ்வதற்கான உரிமை

- ❖ நுகர்வோர் பொறுப்புக்கள்
  1) ஆறிவை பெற்று கொள்ளகூடிய தன்மை
  2) தொடர்ச்சியான பங்களிப்பு
  3) சமூகம் தொடர்பாக கவனம் செலுத்துதல்.
  4) சூழல் தொடர்பாக கவனம் செலுத்துதல்.
  5) ஒத்துழைப்புடன் கருமமாற்றுதல்

இலங்கையில் நுகர்வோர் பாதுகாப்பிற்காக தொழிற்படுகின்ற அரச நிறுவனங்கள்

- ❖ நுகர்வோர் அலுவல்கள் தொடர்பிலான அதிகார சபை
- ❖ இலங்கை தரகட்டளைகள் பணியகம்
- ❖ அளவை நிறுவை தர நியம சேவைத் திணைக்களம்
- ❖ மத்திய சூழல் அதிகார சபை
- ❖ பிரதேச சுகாதார வைத்திய அதிகாரியின் காரியாலயம்
- ❖ மாவட்ட செயலாளர் அலுவலகம்

மத்திய மாகாண கல்வித் திணைக்களம்

தேர்ச்சி – 3

சரியான விடையின் கீழ் கோடிடுக.

1) அரசு வணிகங்களில் செல்வாக்கு செலுத்தும் முறையும் அதற்கான உதாரணங்களும் வருமாறு.

A	B
1) உட்கட்டமைப்பு வசதி வழங்கல்	அ) அரசதுறையின் தொலைகாட்சி அலைவரிசை
2) போட்டியாளராக செயற்படல்	ஆ) கட்டடங்களை அமைப்பதற்கு அனுமதி அளித்தல்
3) கொள்கைகளை உருவாக்கல்	இ) கழிவுபொருள் அகற்றல்.
4) சட்டதிட்டங்களை உருவாக்கல்	ஈ) நிதி, இறை கொள்கை

A, B என்பவற்றை தொடர்புபடுத்தும் போது சரியான விடையாக அமைவது

1) 1-அ , 2-இ, 3-ஆ , 4-ஈ
2) 1-ஈ, 2-இ, 3-ஆ, 4-அ
3) 1-இ, 2-ஈ, 3-அ, 4-ஆ
4) 1-ஆ, 2-அ, 3-இ, 4-ஈ
5) 1-இ, 2-அ, 3-ஈ, 4-ஆ

2) உள்நாடு, வெளிநாடு எனும் வகையில் பிரச்சினைகள் ஏதும் ஏற்படாதிருப்பதற்கு சிறப்பாக தாக்குபிடிக்கக்கூடிய ஆற்றலை குறிப்பது?

1) பொருளாதார வளர்ச்சி
2) பூரண வேலை வாய்ப்பு
3) நியாயமான வருமான பரம்பல்
4) பொருளாதார நிலைப்பு தன்மை
5) சாதகமான சர்வதேச வியாபாரம்

3) அரசின் பொருளாதார நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதற்கு வணிகங்களின் பங்களிப்பு முறையாக அமையாதது?

1) வரியை உரியவாறு செலுத்தாமை
2) உள்நாட்டு வள பயன்பாடு
3) சட்டதிட்டங்களை பின்பற்றுதல்
4) வேலை வாய்ப்பை வழங்கல்
5) சூழல் மாசடைவதை இழிவுபடுத்தல்

4) பின்வருவனவற்றுள் நேர்வரியை மட்டும் கொண்ட தொகுதி

1) வருமான வரி, கம்பனி வரி, நிறுத்தி வைத்தல் வரி, உற்பத்தி வரி
2) வருமான வரி, கம்பனி வரி, நிறுத்தி வைத்தல் வரி, வட்டி வருமானம்
3) வருமான வரி, கம்பனி வரி, நிறுத்தி வைத்தல் வரி, மூலதன இலக்கு மீதான வரி
4) வருமான வரி, கம்பனி வரி, நிறுத்தி வைத்தல் வரி, VAT வரி
5) வருமான வரி, கம்பனி வரி, நிறுத்தி வைத்தல் வரி, சுங்க வரி

5) பின்வருவனவற்றுள் அளவு ரீதியான கடன் கட்டுப்பாடு முறையாக அமைவது

மத்திய மாகாண கல்வித் திணைக்களம்

1) ஒதுக்கு வீத தேவைப்பாட்டை மாற்றுதல்.
2) தெரிவு செய்த துறைக்கு கடன் பாய்ச்சப்படுவதை கட்டுப்படுத்தல்.
3) வணிக வங்கிகளின் மூலதனம் சொத்து என்பவற்றுக்கிடையே குறைந்த விகிதத்தை தீர்மானித்தல்.
4) கடனை அறவிடுவதற்கான உச்சகாலம் மற்றும் பிணை பத்திரங்களின் தன்மையில் மாற்றங்களை செய்தல்.
5) திறந்த சந்தை நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

6) அரசு தனது நிர்வாக நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு ஏற்படும் அனைத்து செலவுகளையும் உள்ளடக்கியது.
   1) மூலதன செலவு 2) நடைமுறை செலவு 3) சமூக செலவு
   4)நேர்செலவு 5) நேரில் செலவு

7) குறித்த சில தேர்ந்தெடுக்கப்பட்ட பொருட்கள் சேவைகள் மீது விதிக்கப்படும் வழியாக கருதப்படுவது
   1) பெறுமதி சேர்வரி 2) நேரில் வரி 3) கம்பனி பிரதான வரி
   4)வருமான வரி 5) கலால் வரி

8) சர்வதேச நுகர்வோர் தினமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ள தினம்
   1) மார்ச்-15 2) ஏப்ரல்-15 3) ஒக்டோபர்-16 4) மார்ச்-22
   5)செப்டெம்பர்-16

9) பின்வருவனவற்றுள் நுகர்வோர் உரிமையாக கருதபடாதது
   1) தகவல் பெறுதல் 2) கவனத்தை ஈர்த்தல் 3) தெரிவு செய்தல்
   4)கூட்டமாக செயற்படுதல் 5) நட்டயீட்டை பெற்றுகொள்ளல்.

10) ஒரு சுட்டு துண்டில் இடம்பெறுவதற்கு அவசியமற்ற விடயமாக கருதப்படுவது
   1) உற்பத்தி நிறுவனம் 2) உற்பத்தி செய்த திகதி 3) விலை
   4)காலாவதியாகும் திகதி 5) மேற்கூறிய ஒன்றுமில்லை

மத்திய மாகாண கல்வித்திணைக்களம்

இடைவெளி நிரப்புக

11) பொருளாதார நிலைப்பு தன்மையினை ……………………. , ……………….. என வகைப்படுத்த முடியும்.
12) வருமான வரி, கம்பனி மீதான வரி என்பன ………………….. காணப்படுவதுடன் உற்பத்தி வரி, இறக்குமதி வரி என்பன ……………………… காணப்படும்.
13) அரசின் வரி அல்லா வருமானங்களாக ……………………… , ……………………. என்பவற்றை குறிப்பிடலாம்.
14) அரச செலவீனங்களை …………………… , …………………….. என வகைப்படுத்த முடியும்.
15) அரசின் நிதி கட்டுப்பாட்டினை மேற்கொள்வதற்கு பயன்படுத்துகின்ற பிரதான கருவியான வட்டி வீதத்தினுள் …………………. , ………………… என்பன உள்ளடக்கப்படும்

பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.

1) அரசு வணிகங்களில் செல்வாக்கு செலுத்தும் முறையினை குறிப்பிடுக.
2) அரசின் பொருளாதார நோக்கங்களை நிறைவேற்றி கொள்வதற்கு வணிகங்கள் எவ்வகையில் பங்களிப்பு செய்கின்றது?
3) அரசின் இறைகொள்கையானது வணிகங்களில் தாக்கத்தை ஏற்படுத்தும் முறைகளுக்கு உதாரணங்களை குறிப்பிட்டு விளக்குக.
4) நிதி கொள்கையினை நடைமுறைப்படுத்துவதற்கு அரசு பின்பற்றும் கருவிகள் எவை?
5) அண்மை காலத்தில் நுகர்வோர் முக்கியத்துவம் பெறுவதற்கான காரணங்களை குறிப்பிடுக.
6) நுகர்வோர் பாதுகாப்பின் மூலம் கிடைக்கும் அனுகூலங்களை குறிப்பிடுக.
7) சந்தையில் பகுத்தறிவான நுகர்வோர் ஒருவரின் செயற்பாடுகளை குறிப்பிட்டு விளக்குக.
8) இலங்கையில் நுகர்வோர் பாதுகாப்பிற்காக தொழிற்படுகின்ற அரச நிறுவனங்களை குறிப்பிடுக.
9) நுகர்வோர் அலுவல்கள் அதிகார சபையின் நோக்கங்களை குறிப்பிடுக.
10) இலங்கை தர கட்டளைகள் நிறுவனத்தின் தர நியமங்கள் நடைமுறைப்படுத்தப்படும் முறைகளை குறிப்பிடுக.

மத்திய மாகாண கல்வித் திணைக்களம்

தேர்ச்சி – 04

அமைப்பு

❖ பொது நோக்கமொன்றை நிறைவேற்றிக் கொள்வதற்காக ஒன்றிணைந்திருக்கும் தனிநபர் குழுவொன்றினால் உருவாக்கப்பட்ட சமூக அலகொன்றே அமைப்பொன்றாகும்.

வணிக அமைப்பு

❖ இலாபத்தை உழைக்கின்ற அல்லது சமூக நலனோம்பினை நோக்கமாகக் கொண்டு பொருள் அல்லது சேவைகளை உற்பத்தி செய்தல், விநியோகித்தல், சந்தைப்படுத்தல் என்பவற்றில் ஈடுபடும் முயற்சியாண்மைகள் வணிக அமைப்புக்களாகும்.

மத்திய மாகாண கல்வித் திணைக்களம்

வணிக அமைப்புக்களை வகைபடுத்தல்

வணிக அமைப்புக்கள்

- தனியார்துறை வணிக அமைப்பு
  - தனியாள்உரிமை வணிகம்
  - பங்குடமை வணிகம்
  - கூட்டிணைக்கப்பட்ட வணிகம்
  - கூட்டுறவு
- அரசதுறை வணிக அமைப்பு
  - மத்திய அரசின் கீழ் வணிகங்கள்
    - திணைக்களங்கள்
    - அரச கூட்டுதாபனங்கள்
    - அரச கம்பனிகள்
  - மாகாண சபைகளின் கீழ் செயற்படும் வணிகங்கள்
  - உள்ளுராட்சி மன்றங்களின் கீழ் செயற்படும் வணிகம்

தனியுடமை வணிகம்

❖ தனிநபரொருவருக்கு உரிமையான வணிகங்கள் தனியாளுரிமை வணிகமாகும்.

தனியுடமை வணிகத்தின் பண்புகள்

- ❖ உரிமையாளர் தனியாக மூலதனமிடல்.
- ❖ முகாமைத் தீர்மானங்கள் உரிமையாளரினால் எடுக்கப்படல்.
- ❖ உரிமையாளரின் வரையறுக்கப்படாத பொறுப்பு
- ❖ வணிகத்திற்குச் சட்டரீதியான தனிமனித அந்தஸ்துக் காணப்படாமை.
- ❖ பதிவு செய்தல் கட்டாயமில்லை.
- ❖ இலாபம் அல்லது நட்டங்களை தனியாக அனுபவித்தல்.
- ❖ இடர்களுக்குத் தனியாக முகங்கொடுத்தல்.
- ❖ தொடர்ந்தியங்கும் நிலைப்பாடு காணப்படாமை.
- ❖ கணக்கு வைப்பு கட்டாயமில்லை.
- ❖ வணிகத்தின் பெயரில் வரிக் கொடுப்பனவு மேற்கொள்ளப்படுவதில்லை.

பங்குடமை வணிகம்

- ❖ இலாபம் உழைக்கும் நோக்கத்துடன் வணிகமொன்றை நடாத்திச் செல்லும் தனிநபர்களுக்கிடையே காணப்படும் தொடர்பே பங்குடமை வணிகமாகும்.

மேற்குறிப்பிட்ட வரைவிலக்கணத்திற்கமைய பங்குடைமை வணிகமொன்று பின்வரும் பண்புகளைக் கட்டாயமாகக் கொண்டிருத்தல் வேண்டும்.

- ❖ இலாபம் பெறும் நோக்கமொன்றிருத்தல்.
- ❖ வணிக நடவடிக்கையொன்றாக இருத்தல்.
- ❖ தனிநபர்கள் இருத்தல்.
- ❖ அன்னியோன்னியமான இடைத்தொடர்புகள் இருத்தல்.

பங்குடமை ஒப்பந்தம்

- ❖ பங்குடமை வணிகமொன்றின் நடவடிக்கைகளை ஆரம்பித்து நடாத்திச் செல்லல் தொடர்பாகப் பங்காளர்களுக்கிடையே ஏற்படுத்திக் கொள்ளப்படும் உடன்பாடே பங்குடமை ஒப்பந்தமாகும்.

பங்குடமை ஒப்பந்தம் ஏற்படுத்தப்படும் வழிமுறைகள்

- ❖ வாய்மொழி மூலம்
- ❖ எழுத்து மூலம்
- ❖ நடத்தை மூலம்

பங்குடமை ஒப்பந்தமொன்றில் உள்ளடக்கப்படும் விடயங்கள்

- ❖ வணிகம் தொடர்பான அடிப்படைத் தகவல்கள்
- ❖ மூலதனமிடல் தொடர்பான விபரம்
- ❖ இலாப நட்டம் பகிரப்படும் முறை தொடர்பான விபரம்
- ❖ பங்குடமையின் நோக்கம்

மத்திய மாகாண கல்வித்திணைக்களம்

- ❖ பங்காளர்களின் பற்றுத் தொடர்பான வரையறை
- ❖ பங்காளர்களின் மூலதன வட்டி, பற்று வட்டி தொடர்பான விபரம்
- ❖ பங்குடமை வணிகத்தை கலைப்பது தொடர்பான நிபந்தனைகள்
- ❖ மேலதிக மூலதனமிடல் தொடர்பான நிபந்தனைகள்

கூட்டிணைக்கப்பட்ட கம்பனிகள்

- ❖ 2007ம் ஆண்டு 7ம் இலக்கக் கம்பனிச் சட்டத்தின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட தனிநபர்களின் கூட்டு கம்பனி எனக் குறிப்பிட்டு காட்டலாம்.

கூட்டிணைக்கப்பட்ட கம்பனிகளின் சிறப்பு பண்புகள்

- ❖ கம்பனிச் சட்டத்தின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட சுயாதீன நிறுவனமொன்றாக இருத்தல்.
- ❖ கம்பனியொன்று அதன் அங்கத்தவர்களிலிருந்து வேறுபட்ட சட்டரீதியான அலகொன்றாக இருத்தல்.
- ❖ தொடர்ச்சியான வாழ்தன்மை எனும் நீண்ட காலம் நிலைத்திருக்கும் தன்மையினைக் கொண்டிருத்தல்.
- ❖ உரிமையாளரின் பொறுப்பு வரையறுக்கப்பட்டதாக இருத்தல்.
- ❖ பங்குகளை வழங்கி மூலதனத்தைத் திரட்டிக் கொள்ளல்.
- ❖ பங்குகளைக் கைமாற்றம் செய்யலாம்.
- ❖ முகாமையானது இயக்குநர் சபையினூடாக மேற்கொள்ளப்படல்.

மத்திய மாகாண கல்வித்திணைக்களம்

2007ம் ஆண்டு 7ம் இலக்கக் கம்பனிச் சட்டத்திற்கேற்ப கம்பனிகளை வகைபடுத்தலாம்.



வரையறுக்கப்பட்ட கம்பனி

- ❖ பங்காளர்கள் தாம் கொள்வனவு செய்த பங்குகளுக்குச் செலுத்திய அல்லது செலுத்துவதற்கான கடப்பாட்டினைக் கொண்டுள்ள பெறுமதிக்கு மாத்திரம் அவர்களின் பொறுப்பு வரையறுக்கப்பட்டிருக்கும் கம்பனி வரையறுக்கப்பட்ட கம்பனி எனப்படும்.

வரையறுக்கப்பட்ட பொது கம்பனி

- ❖ பங்குகளையும் தொகுதிக் கடன்களையும் பகிரங்கமாகப் பொதுமக்களுக்கு வழங்குவதற்கு அனுமதிக்கப்பட்ட ஆகக்குறைந்த பங்காளர் எண்ணிக்கை 1 ஆகவும் உச்ச எண்ணிக்கை வரையரையற்றதான கம்பனி வரையறுக்கப்பட்ட கம்பனி எனப்படும். அது இரு வகைப்படும்.
  1) பட்டியலிடப்பட்ட பொதுக்கம்பனி (விலை கூறப்பட்ட கம்பனி)
  2) பட்டியலிடப்படாத கம்பனி (விலை கூறப்படாத கம்பனி)

கரை கடந்த கம்பனிகள்

- ❖ ஏதாவது நாடொன்றில் கம்பனியாகக் கூட்டிணைக்கப்பட்டு அந்நாட்டினின்றும் வெளியில் வணிக நடவடிக்கைகளை மேற்கொள்ளும் கம்பனி கரைகடந்த கம்பனிகள் என அழைக்கப்படும்.

பிணையால் வரையறுக்கப்பட்ட கம்பனிகள்

- ❖ பங்கு வழங்களை மேற்கொள்ளாது அங்கத்தவர்களின் பொறுப்பு அகவிதிச் சட்டக் கோவையில் குறிப்பிடப்பட்டுள்ள பிணைத்தொகைக்கு வரையறுக்கப்பட்டுள்ள கம்பனியே இதுவாகும்.

வெளிநாட்டு கம்பனிகள்

- ❖ இலங்கையில் வணிக நிலையத்தினைக் கொண்டுள்ள போதும் இலங்கைக்கு வெளியில் கூட்டிணைக்கப்பட்டுள்ள கம்பனி வெளிநாட்டு கம்பனிகள் எனப்படும்.

கூட்டுறவு சங்கம்

- ❖ தமது பொருளாதார சமூக கலாசார ரீதியான தேவைகள் எதிர்பார்ப்புக்கள் என்பவற்றை நிறைவேற்றிக் கொள்ளும் பொருட்டுச் சுயமாக ஒன்றிணைந்த தனிநபர்களின் சுயாதீனமான சங்கமொன்று என்பதுடன் சம உரிமையுடன் கூடிய சனநாயக முறையில் நிர்வாகிக்கப்படும் வணிக அமைப்பொன்றாகும்.

கூட்டுறவு சங்கத்தின் பண்புகள்

மத்திய மாகாண கல்வித் திணைக்களம்

- சுயாதீனமான அமைப்பொன்றாக இருத்தல்.
- சுயமாக ஒன்றிணைந்த தனிநபர்களின் தொகுதியொன்றாக இருத்தல்.
- அங்கத்தவரின் சம உரிமை
- பொதுத்தேவை மற்றும் எதிர்பார்ப்புக்களை உள்ளடக்கியதாக இருத்தல்.
- சனநாயக ரீதியான நிர்வாகத்துடன் கூடிய வணிகமொன்றாக இருத்தல்.
- பங்குகளின் பெறுமானம் மாற்றமடையாது இருத்தல். (பங்கொன்றின் பெறுமதி ரூபா 100)
- அங்கத்தவர் ஒருவருக்கு ஒரு வாக்குரிமை மட்டுமே உரித்துடையது.
- உழைக்கும் மேலதிகத்தை அங்கத்தவர்கள் சங்கத்துடன் மேற்கொண்ட கொடுக்கல் வாங்கல்களின் பெறுமானத்திற்கமைய அவர்களுக்கிடையே பகிர்ந்தளிக்கப்படும்.
- இலாபத்தை அடிப்படை நோக்கமாக கொண்டிருக்காமை.

அங்கீகார வணிகம்

- ஏதாவது பொருளொன்றை அல்லது சேவையொன்றை வழங்கும் வணிக நிறுவனமொன்று அப்பொருள் அல்லது சேவையினைக் குறித்த சந்தைப் பிரதேசமொன்றில் விற்பனை செய்வதற்கு மற்றொரு வணிக நிறுவனமொன்றிற்குச் சந்தர்ப்பம் வழங்குமாயின் அவ்வணிக அமைப்பு முறையானது அங்கீகார வணிகம் எனப்படும்.

- இதனுடன் தொடர்புடையோர்
  1) அங்கீகாரம் வழங்குவோர்
  2) அங்கீகாரம் பெறுபவர்

அங்கீகார வணிகங்களை வகைப்படுத்தல்

- உற்பத்தி பொருள் அங்கீகார வணிகம்
- உற்பத்தி அங்கீகார வணிகம்
- வணிக முறைக்கான அங்கீகார வணிகம்

கூட்டு வணிகங்கள்

- கம்பனிகள் 2 அல்லது பல ஒன்று சேர்ந்து செயற்படல் வணிகங்களின் கூட்டு எனப்படும்.
- இது இரு முறைகளில் மேற்கொள்ளப்படும்.
  1) ஒன்றிணைதல்
  2) கையகப்படுத்தல்

ஒன்றிணைதல் அல்லது கையகப்படுத்தல் மூலம் இடம்பெறுகின்ற இணைவானது பிரதானமாக 3 முறைகளில் இடம்பெறும்.

- கிடை இணைப்பு
- நிலைக்குத்து இணைப்பு

மத்திய மாகாண கல்வித் திணைக்களம்

- ❖ முரண்பாடாண இணைப்பு

அரசதுறை அமைப்பு

- ❖ அரச கூட்டுதாபனங்கள்
- ❖ அரச திணைக்களம்
- ❖ அரச கம்பனிகள்
- ❖ மாகாணசபை மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்கள் கீழ் இயங்கும் வணிகங்கள்.

தேர்ச்சி – 4

சரியான விடையின் கீழ் கோடிடுக.

1) ஒழுங்கு முறையான அமைப்பொன்றில் காணப்படகூடிய பொதுப்பண்புகளில் ஒன்று
   1) இலாப நோக்குடன் செயற்படுதல்.
   2) உரிமையாளரினால் மூலதனமிடப்படல்
   3) இலாப நட்டங்கள் பங்காளரிடையே பகிரப்படல்.
   4) அமைப்பு ரீதியான கட்டமைப்பொன்றிருத்தல்.
   5) சுயாதீனமாக தீர்மானம் எடுக்க முடிதல்.

2) பின்வருவனவற்றுள் தனியார்துறை வணிக அமைப்புக்களில் உள்ளடக்கப்படாத அமைப்பு
   1) தனியுடமை 2) கூட்டிணைக்கப்பட்ட கம்பனி 3) அரச கம்பனி
   4)கூட்டுறவு 5) பங்குடமை வணிகம்

3) பின்வருவனவற்றுள் தனியாளுரிமை வணிகங்களின் பண்பு அல்லாதது?
   1) முகாமை தீர்மானங்கள் உரிமையாளரினால் எடுக்கப்படல்.
   2) இலாப நட்டங்களை தனியாக அனுபவித்தல்.
   3) இடர்களுக்கு தனியாக முகங்கொடுத்தல்.
   4) உரிமையாளரின் வரையறுக்கப்படாத பொறுப்பு
   5) வணிகத்திற்கு சட்டரீதியான தனிமனித அந்தஸ்து காணப்படல்.

4) பங்குடமையின் இழிவளவான பங்காளர்களின் எண்ணிக்கையை கட்டுபடுத்தும் சட்டம்
   1) 1890ம் ஆண்டு பங்குடமை கட்டளை சட்டம்
   2) 1982ம் ஆண்டு கம்பனி சட்டம்
   3) 1907ம் ஆண்டு வரையறுக்கப்பட்ட பங்குடமை சட்டம்
   4) வியாபார பெயர் பதிவு கட்டளை சட்டம்
   5) மோசடி தவிர்ப்பு சட்டம்

மத்திய மாகாண கல்வித் திணைக்களம்

5) பங்குடமை ஒன்றில் காணப்படும் அடிப்படை பண்பாக கருதப்படுவது?
1) தனிநபர்கள் ஒன்றினைதல். 2) இலாப நோக்கம்
3)வணிகநடவடிக்கைகள் காணப்படல். 4) அன்னியோன்ய இடைதொடர்பு இருத்தல். 5) மேற்கூறிய அனைத்தும்

6) ரூபா 1000/= இற்கு மேற்பட்ட மூலதனத்தை உடைய பங்குடமைகளுக்கு எழுத்து மூலமான ஒப்பந்தத்தினை வலியுறுத்தும் சட்டமாக அமைவது?
1) பங்குடமை கட்டளை சட்டம்
2) பெயர் பதிவு கட்டளை சட்டம்
3) 2007ம் ஆண்டு 7ம் இலக்க கம்பனி சட்டம்
4) 1990ம் ஆண்டு பங்குடமை சட்டம்
5) கூட்டுறவு கட்டளை சட்டம்

7) வரையறுக்கப்பட்ட தனியார் கம்பனி தொடர்பான பிழையான கூற்று
1) ஆகக்குறைந்த பங்குதாரர் -1 உச்ச எண்ணிக்கை 50 பேர் காணப்படுதல்.
2) ஆகக்குறைந்த 2 இயக்குநர் காணப்படுதல்.
3) பெயருடன் வரையறுத்த சொத்து என்ற பதத்தினை சேர்த்தல் வேண்டும்.
4) பங்குகளை தொகுதி கடன்களை பொதுமக்களுக்கு வழங்கி மூலதனத்தை திரட்டலாம்.
5) கடனை மீளசெலுத்தும் ஆற்றல் தொடர்பான பரிசோதனை இன்றி பங்குலாபத்தை பகிரலாம்.

8) பின்வருவனவற்றுள் இலங்கையில் கூட்டிணைக்கப்பட்டு வெளிநாட்டில் வணிக நடவடிக்கைகளில் ஈடுபடும் கம்பனி எவ்வாறு அழைக்கப்படும்?
1) வெளிநாட்டு கம்பனி
2) கரைகடந்த கம்பனி
3) அங்கிகாரம் வழங்கும் கம்பனி
4) பிணையால் வரையறுக்கப்பட்ட கம்பனி
5) வரையறுக்கப்பட்ட பொது கம்பனி

9) பின்வருவனவற்றிலிருந்து அங்கிகாரம் வழங்குபவரிடமிருந்து அங்கிகாரம் பெறுபவர் பெற்றுகொள்ள முடியாத வசதியினை தெரிவு செய்க.
1) தனது பெயரை பயன்படுத்துவதற்கு அனுமதி வழங்கல்.
2) சந்தைப்படுத்தலுக்கான உதவியினை வழங்கல்.
3) நிதி வசதிகளை வழங்கல்.
4) தொழிநுட்ப வசதிகளை வழங்கல்.
5) எந்தவொரு வழங்குநரிடமிருந்தும் பொருட்களை கொள்வனவு செய்வதற்கு அனுமதி வழங்கல்.

10) அரசு வணிகநடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கான காரணமாக கூறமுடியாதது?
1) தனியார்துறை நியாயமற்ற வகையில் இலாபமீட்டுவதை தவிர்க்க.
2) ஏகபோக நிறுவனங்கள் உருவாகுவதை தடுக்க.
3) மக்களுக்கு அத்தியாவசிய சேவைகளை வழங்குவதற்கு
4) நாட்டின் வள விரயத்தினை கட்டுபடுத்துவதற்கு
5) மேற்கூறியவை அனைத்தும்

மத்திய மாகாண கல்வித் திணைக்களம்

இடைவெளி நிரப்புக.

11) தனியுடமை அமைப்புக்களை …………………… சட்டத்தின் கீழ் ………………….. பதிவு செய்ய வேண்டும்.
12) பங்குடமை ஒப்பந்தமொன்று ……………… , ………………. , …………………... ஏற்படுத்தி கொள்ளமுடியும்.
13) வரையறுக்கப்பட்ட கம்பனிகள் ………………. , ………………. , ……………… என வகைபடுத்துவதோடு வரையறுக்கப்பட்ட பொது கம்பனிகள் ………………… , ……………………… என வகைபடுத்தலாம்.
14) கடனை மீள செலுத்தும் ஆற்றல் தொடர்பான பரிசோதனை இன்றி பங்கிலாபத்தை பகிர்ந்தளிக்ககூடிய கம்பனி ……………………… ஆகவும் மீளச்செலுத்தும் ஆற்றல் தொடர்பில் பரிசோதனை மேற்கொள்ளும் கம்பனி …………………… ஆகவும் காணப்படும்.
15) கூட்டுறவு சங்கங்கள் …………………… இல் ……………………. கீழ் பதிவு செய்யப்படுதல் வேண்டும்.
16) அங்கிகார வணிகங்களை ………………… , …………………… , ………………… என வகைபடுத்த முடியும்.
17) ஒரே வகையிலான வணிக நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள கம்பனிகள் ஒன்று சேர்தல் ………………… எனவும் ஓரினமல்லாத வெவ்வேறுபட்ட வகையிலான வணிகங்கள் ஒன்றிணைதல் ……………………. எனவும் அழைக்கப்படும்.
18) இலாபத்தினை நோக்காக கொண்ட போதிலும் பதிவு செய்தல் அவசியமற்ற இரண்டு வணிக அமைப்புகளாவன …………………….. , ……………… ஆகியனவாகும்.
19) அங்கிகாரம் பெற்ற வியாபாரியினால் மொத்த ………………… பெறுமதியின் சதவீதமாக அங்கிகாரம் வழங்கும் வியாபாரிக்கு செலுத்தப்பட வேண்டியது ……………….. ஆகும்.
20) நிறுவன சட்டகோவை, நிதி பிரமாணம் போன்ற அரச கொள்கைகளுக்கமைய கருமமாற்றும் ………………… தனக்கு தேவையான நிதியினை ……………………. மூலம் பெற்றுக்கொள்ளும்.

பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.

1) தனியுடமை அமைப்பில் காணப்படகூடிய அனுகூலங்கள், பிரதிகூலங்கள் இவ்விரண்டு வீதம் குறிப்பிடுக.
2) பங்குடமை ஒப்பந்தமொன்றில் உள்ளடக்கப்பட வேண்டிய விடயங்கள் எவை?
3) கூட்டிணைக்கப்பட்ட கம்பனிகளில் காணப்படும் சிறப்பு பண்புகள் எவை?
4) கூட்டிணைக்கப்பட்ட கம்பனியொன்றை பதிவு செய்யும் போது சமர்ப்பிக்க வேண்டிய ஆவணங்கள் எவை?
5) வரையறுக்கப்பட்ட தனியார் கம்பனி, பொது கம்பனி என்பவற்றை வேறுபடுத்துக.
6) பிணையால் வரையறுக்கப்பட்ட கம்பனிகளில் காணப்படும் பண்புகள் எவை?
7) கூட்டுறவு சங்கங்களின் ஆலோசனைக்காக முன்மொழிய கூடிய ஆலோசனைகள் 4 இனை குறிப்பிடுக.
8) அங்கிகார வணிகத்திற்கும் பங்குடமைக்குமிடையிலான வேறுபாடுகளை குறிப்பிடுக.
9) அரசு வணிக கருமங்களில் ஈடுபடுவதற்கான காரணங்களை குறிப்பிடுக.
10) அரச திணைக்களங்களுக்கும், கூட்டுதாபனங்களுக்குமிடையிலான வேறுபாடுகளை குறிப்பிடுக.

மத்திய மாகாண கல்வித் திணைக்களம்

தேர்ச்சி – 5 , 6

முயற்சியாண்மை

- ❖ சூழலிலுள்ள சந்தர்ப்பங்களை ஆக்க ரீதியான பெற்று நட்ட இடரினை ஏற்று புத்தாக்கங்களை உருவாக்குகின்ற செயன்முறை முயற்சியாண்மை எனப்படும்.

முயற்சியாண்மையின் முக்கியத்துவங்கள்

- ❖ புத்தாக்கங்களை உருவாக்க
- ❖ போட்டிகளுக்கு சிறந்த முறையில் முகங்கொடுத்து சந்தையில் நிலைத்திருக்க
- ❖ சகல அமைப்புகளுக்கும் தலைமைத்துவத்தை வழங்க
- ❖ தனிநபர்களின் வாழ்க்கை தரத்தை உயர்த்துவதற்கு
- ❖ புதிய வணிகங்களை ஆரம்பிப்பதன் மூலம் தொழில்களை உருவாக்க

முயற்சியாண்மைக்கும் பொருளாதார விருத்திக்குமிடையிலான தொடர்பு

- ❖ புத்தாக்கங்கள் உருவாகி தேசிய உற்பத்தி அதிகரிக்கும்.
- ❖ புதிய தொழில்கள் உருவாகுவதன் மூலம் வேலை வாய்ப்பு அதிகரிக்கும்.
- ❖ தொழில் வாய்ப்புக்கள் உருவாவதன் மூலம் பொருளாதார விருத்தி உயர்வடையும்.



- ❖ பிரதேச வளங்கள் பயன்படுத்தப்படுவதால் அவற்றிற்கான கேள்வி அதிகரித்தல்.
- ❖ சந்தை செயற்பாடுகள் விரிவடைதல் புதிய போட்டி சந்தைகள் உருவாவதன் மூலம் பொருளாதாரம் விருத்தியடைதல்.

முயற்சியாண்மையின் போக்குகள்

- ❖ உள்ளக முயற்சியாண்மை
- ❖ பூகோள ரீதியான முயற்சியாண்மை
- ❖ சமூக ரீதியான முயற்சியாண்மை
- ❖ பசுமை முயற்சியாண்மை

முயற்சியாண்மை செயன்முறை

- ❖ வணிக வாய்ப்புக்களை உருவாக்கி கொள்ளல், அவற்றிலிருந்தும் பயன்களை பெற்றுகொள்ளல், ஒழுங்கமைப்புக்களை உருவாக்கி கொள்ளல் போன்ற

மத்திய மாகாண கல்வித்திணைக்களம்

கருமங்களின் போது மேற்கொள்ளப்படுகின்ற சகல செயன்முறைகளும் முயற்சியாண்மை செயன்முறை எனப்படும்.

முயற்சியாண்மை செயன்முறையின் படிமுறைகள்

- புத்தாக்கம் புனைதல்.
- எண்ணக்கருக்களை உருவாக்கலும் வணிகதிட்டத்தை தயாரித்தலும்
- தேவையான வளங்களை பெற்று கொள்ளல்.
- உண்மை நிலைக்கு மாற்றுதல்.
- அனுகூலங்களை பெற்றுகொள்ளல்.

முயற்சியாண்மையின் பொதுவான பண்புகள்

- இடர்களை ஏற்பதற்கான விருப்பம்
- ஆக்கரீதியானது என
- அர்ப்பணிப்பு
- தன்னம்பிக்கை
- சுயாதீனமானது

முயற்சியாண்மை திறன்கள்

- தலைமைத்துவ திறன்
- ஆளிடைதொடர்பு திறன்
- தொடர்பாடல் திறன்
- அடிப்படை முகாமைத்துவ திறன்

முயற்சியாண்மை பண்புகளையும், திறன்களையும் விருத்தி செய்து கொள்ளும் முறைகள்

- சுயமதிப்பீடு
- பயிற்சி
- கல்வி
- அனுபவம்

சிறிய நடுத்தரஅளவு வணிகங்கள்

- சுயாதீனமான உரிமையும் மற்றும் சுயமாக செயற்படுகின்ற அதேவேலை அந்தந்த துறையில் அதிகாரமற்ற வணிகங்கள் சிறிய நடுத்தரளவு வணிகங்கள் எனப்படும்.

சிறிய நடுத்தர அளவிலான வணிகங்களின் பண்புகள்

- சந்தை சிறியதாக இருத்தல்.
- மூலதனத்தின் அளவு சிறியதாக இருத்தல்.
- குறைந்த ஊழியர் எண்ணிக்கை

மத்திய மாகாண கல்வித் திணைக்களம்

- குடும்ப உழைப்பு கூடுதலாக பயன்படுத்தப்படல்.
- நவீன தொழிநுட்ப பயன்பாடு குறைவு
- பெரும்பாலும் சந்தை உள்நாட்டு சந்தையாக காணப்படும்.

சிறிய நடுத்தரஅளவு வணிகங்களை ஊக்குவிப்பதற்காக அரசு மேற்கொள்ளும் நடவடிக்கைகள்

- சந்தை சிறியதாக இருத்தல்.
- குறைந்த ஊழியர் எண்ணிக்கை
- மூலதனத்தின் அளவு சிறியதாக இருத்தல்.
- குடும்ப உழைப்பு கூடுதலாக பயன்படுத்தப்படல்.
- நவீன தொழிநுட்ப பயன்பாடு குறைவு
- பெரும்பாலும் சந்தை உள்நாட்டு சந்தையாக காணப்படும்.

சிறிய நடுத்தரளவ வணிகங்களை ஊக்குவிப்பதற்காக அரசு மேற்கொள்ளும் நடவடிக்கைகள்

- நிதிசார் ஊக்குவிப்பு
- நிதிசாரா ஊக்குவிப்பு

நிதிசார் ஊக்குவிப்புக்கள்

- குறுங்கால நீண்டகால கடன்
- நிதி ரீதியான கடன்கள்
- வரிச்சலுகை
- மீள் நிதியிடல் வசதிகள்

நிதியல்லா ஊக்குவிப்புக்கள்

- ஆலோசனை சேவை
- முயற்சியாண்மை அபிவிருத்தி வேலைதிட்டம்
- உட்கட்டமைப்பு வசதிகள்
- சந்தை வசதிகளை வழங்கல்
- சிறந்த சாதனையாளருக்கு விருதுகளை வழங்கல்.

சிறிய நடுத்தரளவ வணிகங்களுக்கு ஊக்குவிப்பை வழங்கும் அரச நிறுவனங்கள்

- கைத்தொழில் அபிவிருத்தி சபை
- ஏற்றுமதி அபிவிருத்தி சபை
- இலங்கை தரகட்டளைகள் நிறுவனம்
- தேசிய அபிவிருத்தி வங்கி
- கைத்தொழில் தொழினுட்ப நிறுவனம்

மத்திய மாகாண கல்வித் திணைக்களம்

சிறிய நடுத்தரளவு வணிகங்களின் வெற்றிக்கு ஊக்குவிப்புகளை வழங்குவதற்காக தற்போது நடைமுறைபடுத்தப்பட்டு வரும் செயற்திட்டங்கள்

- ❖ லிய இசுறு
- ❖ சுவனா
- ❖ சஹன்யா
- ❖ சனச கடன் திட்டம்
- ❖ கூட்டுறவு கிராமிய வங்கிகடன்
- ❖ சமூர்த்தி வளமான வாழ்வபிவிருத்தி கடன் திட்டமுறை
- ❖ கமநல வங்கி பிரதிநிதித் திட்டம்

தேர்ச்சி – 5 & 6

சரியான விடையின் கீழ் கோடிடுக.

1) நிச்சயமற்ற நிலைமைகளுக்கு முகங்கொடுப்பது முயற்சியாண்மையாகும். இவ்வரைவிலக்கணம் யாரால் முன்வைக்கப்பட்டது?
   1) வில்லியம் டீ பைகிரவ்
   2) ஜோசம் சூப் பீட்டர்
   3) ஒக்ஸ்போர்ட் அதிகாரி
   4) ரிச்சர்ட் தர்டினட்
   5) சர்வதேச தொழிலாளர் அமைப்பு

2) A – தனியாள் ஆற்றலினூடாக நன்மைகளை பெறல்.
   B – வணிக கருமங்கள் விரிவடைதல்.
   C – சமூகத்தில் ஏற்றுகொள்ளும் தன்மை காணப்படல்.
   D – மக்களின் வாழ்க்கை தரம் உயர்வடைதல்.
   E – தனிப்பட்ட நிதி சார்ந்த இலாபம் கிடைக்கப் பெறல்.
   F – புதிய தொழில் வாய்ப்புக்கள் உருவாக்குதல்.
   மேலுள்ளவற்றில் முயற்சியாண்மையினூடாக தனிநபருக்கு கிடைக்கும் அனுகூலங்களை மட்டும் கொண்ட தொகுதி?
   1) ACE 2) ABCE 3) BDE 4) ACEF 5) ABDE

3)

1) உள்ளக முயற்சியாண்மை	A) உலகத்தை சிறந்த இடமாக மாற்றுதல்.
2) பூகோள ரீதியானமுயற்சியாண்மை	B) சூழல் ரீதியாக அவதானம் அவதானம் செலுத்துதல்
3) சமூக ரீதியான முயற்சியாண்மை	C) அமைப்பிலுள்ள தனிநபர்களை ஊக்குவித்தல்.
4) பசுமை முயற்சியாண்மை	D) ஏனைய நாடுகளின் இனங்களோடு தொடர்பை பேணல்.

மத்திய மாகாண கல்வித் திணைக்களம்

மேலுள்ளவற்றை தொடர்புபடுத்தும் போது சரியான விடையாக அமைவது?

1) 1-A, 2-C, 3-D, 4-B
2) 1-C, 2-A, 3-D, 4-B
3) 1-C, 2-A, 3-B, 4- D
4) 1-C, 2-D, 3-A, 4-B
5) 1-B, 2-A, 3-D, 4- C

4) கீழ்வருவனவற்றுள் முயற்சியாளரின் பண்பு அல்லாதது?
   1) இடர்களை ஏற்றல்.
   2) வித்தியாசமான முறையில் கருமமாற்றுதல்.
   3) பாரம்பரியத்தை பின்பற்றுதல்.
   4) அர்பணிப்புடன் செயற்படுதல்.
   5) பிரச்சினைகள் ஏற்படும் போது சிறப்பாக முகங்கொடுத்தல்.

5) பின்வருவனவற்றுள் முயற்சியாண்மை திறன்களை மட்டும் உள்ளடக்கிய தொகுதி?
   1) தலைமைத்துவ திறன், சுயமதிப்பீட்டு திறன், ஆளிடை திறன், தொடர்பாடல் திறன்
   2) முகாமைத்துவ திறன், அர்பணிப்பு திறன், ஆளிடை திறன், தொடர்பாடல் திறன்
   3) ஆக்கதிறன், தலைமைத்துவ திறன், முகாமைத்துவ திறன், தொழினுட்ப திறன்
   4) ஆக்கதிறன், இடரை ஏற்கும் திறன், முகாமைத்துவ திறன், தொழினுட்ப திறன்
   5) முகாமைத்துவ திறன், தலைமைத்துவ திறன், ஆளிடை திறன், தொடர்பாடல் திறன்

6) A – முதலீடு செய்த மூலதனத்தின் அளவு
   B – பயன்படுத்தும் சக்தி
   C – பயன்படுத்தப்படுகின்ற தொழிநுட்பம்
   D – ஈடுபடுத்தியுள்ள ஊழியர்களின் எண்ணிக்கை
   E – வணிக ஒழுங்கமைப்பு முறை

   மேலுள்ளவற்றுள் அளவு ரீதியான காரணிகளை மட்டும் கொண்ட தொகுதி?

   1) ABD 2) ACD 3) ADE 4) ACE 5) BCD

7)

நிறுவனம்	நியதி
1) கைத்தொழில் அபிவிருத்தி சபை	A) ஈடுபடுத்திய மூலதனம் 20 மில்லியனுக்கு மேற்படாத வணிகம்
2) கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சு	B) ஈடுபடுத்திய மூலதனம் 4 மில்லியனுக்கு மேற்படாத வணிகம்
3) குடிசன புள்ளிவிபர திணைக்களம்	C) ஊழியர் எண்ணிக்கை 50க்கு குறைவாக இருக்கும் வணிகம்
4) கிராமிய கைத்தொழில் அபிவருத்தி அமைச்சு	D) ஊழியர் எண்ணிக்கை 25க்கு குறைவாக இருக்கும் வணிகம்

மேலுள்ளவற்றை தொடர்புபடுத்தும் போது சரியான விடையாக அமைவது?

1) 1-A, 2-B, 3-C, 4-D 2) 1-D, 2-C, 3-B, 4-D

3)1-C, 2-D, 3-A, 4-B 4) 1-B, 2-C, 3-A, 4-D

5)1-B, 2-A, 3- D, 4-C

8) பின்வருவனவற்றுள் நிதிசார் ஊக்குவிப்பு முறையபக அமையாதது?
   1) சந்தை வசதி
   2) மீள் நிதியீட்டல் வசதி
   3) உட்கட்டமைப்பு வசதி
   4) ஆலோசனை சேவை
   5) தொழினுட்ப வசதி

9) சிறிய நடுத்தர அளவான வணிகங்களுக்கு நிதி வசதிகளை வழங்கும் நிறுவனம்?
   1) கைத்தொழில் அபிவிருத்தி சபை
   2) இலங்கை சிறிய மட்டும் நடுத்தர அளவு கைத்தொழில் சபை
   3) ஏற்றுமதி சபை
   4) இலங்கை தரகட்டளைகள் நிறுவனம்
   5) தொழிநுட்ப நிறுவனம்

10) சர்வதேச ஒத்துழைப்பிற்கான ஜப்பான் வங்கியின் நிதி அனுசரணையுடன் சிறு கைத்தொழில் முயற்சியாளர்களை உயர்த்துவதற்கு நடைமுறைபடுத்தப்படும் முன்மொழிவு திட்டம்?
   1) லிய இசுறு 2) சஹன்யா 3) சனச 4) சுவன 5) கமநல வங்கி திட்டம்

மத்திய மாகாண கல்வித் திணைக்களம்

இடைவெளி நிரப்புக.

11) இடரை தாங்கி கொண்டு ……………… உருவாக்கும் நபர் முயற்சியாளர் எனப்படுவதுடன் இடர் ஏற்படாத வகையில் பாதுகாப்பான முறையில் வணிகத்தை நடாத்தி செல்பவர் …………………… ஆவார்.

12) முயற்சியாளர் ஒருவர் பொதுவாக ……………………… நோக்காக கொண்டு வணிகத்தை ஆரம்பிப்பதுடன் சமூக ரீதியான முயற்சியாளர் ………………… நோக்காக கொண்டு வியாபாரத்தை ஆரம்பிப்பார்.

13) முயற்சியாண்மைக்கும் பொருளாதார விருத்திக்குமிடையிலான தொடர்பில் இடைவெளியை பூரணப்படுத்துக.



14) முயற்சியாண்மை செயன்முறையின் படிமுறைகளில் இடைவெளியை நிரப்புக.

புத்தாக்கம் புனைதல்

↓

....

↓

....

↓

....

↓

அனுகூலங்களை பெற்று கொள்ளல்

15) முயற்சியாண்மை பண்புகளை ……………… , ………………. , ……………. , ………………. என்பவைகளின் மூலம் விருத்தி செய்து கொள்ளலாம்.

மத்திய மாகாண கல்வித் திணைக்களம்

பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.

1) முயற்சியாண்மை தற்காலத்தில் முக்கியத்துவம் பெறுவதற்கான காரணங்களை குறிப்பிட்டு விளக்குக.
2) முயற்சியாண்மைக்கும் வணிகத்திற்குமிடையிலான தொடர்பை விளக்குக.
3) முயற்சியாண்மை காரணமாக சமூக பொருளாதாரத்திற்கு கிடைக்ககூடிய அனுகூலங்கள் எவை?
4) முயற்சியாளருக்கும் வணிகருக்குமிடையிலான வேறுபாட்டை எழுதுக.
5) முயற்சியாண்மையின் பொதுவான பண்புகளை குறிப்பிட்டு எழுதுக.
6) சிறிய நடுத்தர அளவு வணிகங்களில் காணப்படகூடிய பண்புகளை குறிப்பிடுக.
7) சிறிய நடுத்தர அளவு வணிகங்களின் வெற்றியில் செல்வாக்கு செலுத்தகூடிய காரணிகள் எவை?
8) கைத்தொழில் அபிவிருத்தி சபையில் சிறிய மற்றும் நடுத்தர அளவு வணிகங்களுக்கு வழங்கப்படும் சேவைகளை குறிப்பிடுக.

தேர்ச்சி – 7

பணம்

❖ பொருட்கள் சேவைகளின் பரிமாற்றத்தின் போது பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட எந்தவொரு ஊடகமும் பணம் எனப்படும்.

பணத்தின் தொழிற்பாடுகள்

❖ பரிமாற்ற ஊடகமாக தொழிற்படல்.
❖ பெறுமதியை அளவிடும் அளவீட்டு கருவியாக தொழிற்படல்.
❖ பெறுமான திரட்டாக தொழிற்படல்.
❖ பிற்போடப்பட்ட கொடுப்பனவு ஊடகமாக தொழிற்படல்.

பணத்தின் வகைகள்

❖ சட்ட பணம்
❖ வங்கி பணம்
❖ அண்மிய பணம்
❖ இலத்திரனியல் பணம்

இலங்கையில் நிதி நிறுவனங்களை வகைபடுத்தல்

❖ வங்கி துறை
1) இலங்கை மத்திய வங்கி
2) உரிமம் பெற்ற வணிகவங்கி
3) உரிமம் பெற்ற விசேட வங்கி

❖ வைப்புகளை ஏற்கும் ஏனைய நிதி நிறுவனங்கள்
1) உத்தரவு பெற்ற நிதி கம்பனி
2) கூட்டுறவு கிராமிய வங்கி
3) சிக்கன கடன் வழங்கும் கூட்டுறவு சங்கம்

❖ விசேட நிதி நிறுவனங்கள்
1) குத்தகை நிதி நிறுவனம்
2) முதல் நிலை வணிகர்கள்
3) பங்குதாரர்கள்
4) அலகு பொறுப்பு
5) சந்தை தரகர்கள்
6) முயற்சியாண்மை மூலதன கம்பனி

மத்திய மாகாண கல்வித் திணைக்களம்

- ஒப்பந்த சேமிப்பு நிறுவனங்கள்
    1) காப்புறுதி கம்பனிகள்
    2) ஊழியர் நம்பிக்கை நிதியம்
    3) சேவை வழங்குநர்களின் பொறுப்பு நிதியம்
    4) அரச சேவைகள் நம்பிக்கை நிதியம்

இலங்கை மத்தியவங்கியின் பிரதான நோக்கம்

- பொருளாதார மற்றும் விலைமட்டங்களின் உறுதியினை பேணுதல்.
- நிதி முறையின் உறுதியினை பேணல்.

வணிகங்களின் வெற்றிக்கு மத்தியவங்கியின் தொழிற்பாடுகள் உதவுகின்ற முறை

- இலங்கையிலுள்ள வங்கிகளுக்கிடையிலான கொடுப்பனவு முறைமை
- சர்வதேச வங்கிகளுக்கிடையிலான நிதி இலத்திரனியல் தொடர்பாடல் வலையமைப்பு
- அதே நேர தீர்ப்பனவு முறை
- பத்திரங்களற்ற பிணையகத் தீர்ப்பனவு முறை

வணிகவங்கிகளால் வழங்கப்படும் பிரதான சேவைகள்

- வைப்புகள் தொடர்பான சேவை
    1) நடைமுறை வைப்பு
    2) சேமிப்பு வைப்பு
    3) நிலையான வைப்பு

- கடன் தொடர்பான சேவைகள்
    1) மேலதிக பற்று வசதிகள்
        - நிலையான மேலதிக பற்று
        - தற்காலிக மேலதிக பற்று
    2) கடன்
        - வணிக கடன்
        - நுகர்வு கடன்

வணிக வங்கிகளினால் வழங்கப்படும் ஏனைய சேவைகள்

- பிரதி கர்த்தா சேவை
- குத்தகை சேவை
- இலத்திரனியல் வங்கி சேவை
    1) வீட்டு வங்கி சேவை
    2) தொலைபேசி வங்கி சேவை
- அடகு சேவை
- பாதுகாப்பு வசதிகள்

மத்திய மாகாண கல்வித் திணைக்களம்

- ❖ வெளிநாட்டு செலாவணி கொள்வனவு விற்பனை கருமங்களில் ஈடுபடல்.
- ❖ கடனட்டை தேவை
- ❖ நிலையியற் கட்டளை பெறுவனவு நடவடிக்கை
- ❖ பயணிகள் காசோலை வழங்கல்.
- ❖ தன்னியக்க வங்கி சேவை
- ❖ நாணய கடிதங்களை வழங்கல்.

காசோலை

- ❖ நடைமுறை கணக்கு உரிமையாளர் ஒருவரினால் அதில் குறிப்பிடப்பட்டுள்ள தொகையினை பெயர் குறிப்பிடப்பட்டுள்ள தொகையினை பெயர் குறிப்பிட்ட நபருக்கு அல்லது கொண்டு வருபவருக்கு செலுத்துமாறு வங்கிக்கு இடும் எழுத்து மூலமான கட்டளை காசோலை ஆகும்.

காசோலையின் வகைகள்

- ❖ காவியின் காசோலை
- ❖ கட்டளை காசோலை

காசோலையில் கோடிடல்

- ❖ காசோலையின் முகப்பில் குறுக்காக இரு சமாந்தரகோடுகளை வரைதல் அல்லது வணிக வங்கியொன்றின் பெயரை எழுதுதல் காசோலையில் கோடிடல் எனப்படும். இது இரு வகைப்படும்.
  1) பொது முறை கோடிடல்
  2) சிறப்பு முறை கோடிடல்

காசோலையில் புறக்குறிப்பிடல்

- ❖ காசோலையின் முகப்பில் உள்ளவாறு பெறுபவர் தனது பெயரை காசோலையின் பின்பக்கத்தில் எழுதுதல் புறக்குறிப்பிடல் எனப்படும்.

இலத்திரனியல் பணம்

- ❖ இலத்திரனியல் முறையில் அல்லது கணணி வலையமைப்பினூடாக பரிமாற்றப்படுகின்ற பணம் இலத்திரனியல் பணம் எனப்படும்.

இலத்திரனியல் பண வகைகள்

- ❖ கடனட்டை
- ❖ வரவு அட்டை
- ❖ முற்கொடுப்பனவு அட்டை
- ❖ ஸ்மார்ட் அட்டை
- ❖ நுண்ணட்டைகள்

மத்திய மாகாண கல்வித் திணைக்களம்

தேர்ச்சி – 7

சரியான விடையின் கீழ் கோடிடுக.

1) பின்வருவனவற்றுள் பணத்தின் தொழிற்பாடாக கருதமுடியாதது?
   1) பரிமாற்று ஊடகமாக கருமமாற்றுதல்.
   2) பெறுமதிகளை அளவிடும் அளவீட்டு கருவியொன்றாக கருமமாற்றல்.
   3) இலகுவாக கொண்டு செல்லகூடியதாக இருத்தல்.
   4) பெறுமானம் திரட்டாக இருத்தல்.
   5) பிற்போடப்பட்ட கொடுப்பனவு சாதனமாக இருத்தல்.

2)

பணத்தின் வகை	உதாரணம்
1) சட்ட பணம்	A) கடன் அட்டை
2) வங்கி பணம்	B) சேமிப்பு வைப்பு
3) அண்மிய பணம்	C) நடைமுறை வைப்பு
4) இலத்திரனியல் பணம்	D) குற்றி தாள் நாணயம்

   மேலுள்ளவற்றை தொடர்புபடுத்தும் போது சரியான விடையாக அமைவது?
   1) 1-D, 2-C, 3-B, 4-A   2) 1-D, 2-B, 3-C, 4-A
   3) 1-A, 2-B, 3-C, 4-D   4) 1-C, 2-D. 3-B, 4-A
   5) 1-B, 2-A, 3-D, 4-C

3) பின்வருவனவற்றுள் உத்தரவு பெற்ற விசேட வங்கிகளை மட்டும் கொண்ட தொகுதி?
   1) தேசிய சேமிப்பு வங்கி, இலங்கை சேமிப்பு வங்கி, பிரதேச அபிவருத்தி வங்கி, இலங்கை வங்கி
   2) தேசிய சேமிப்பு வங்கி, இலங்கை சேமிப்பு வங்கி, பிரதேச அபிவிருத்தி வங்கி, சம்பத் வங்கி
   3) தேசிய சேமிப்பு வங்கி, செலான் வங்கி, பிரதேச அபிவிருத்தி வங்கி, சம்பத் வங்கி
   4) தேசிய சேமிப்பு வங்கி, செலான் வங்கி, மக்கள் வங்கி, கொமர்சல் வங்கி
   5) தேசிய சேமிப்பு வங்கி, இலங்கை சேமிப்பு வங்கி, பிரதேச அபிவிருத்தி வங்கி, அரச ஈட்டு முதலீட்டு வங்கி

4) A – உத்தரவு பெற்ற நிதி கம்பனி
   B – குத்தகை நிதி கம்பனி
   C – முதல் நிலை வணிகர்கள்
   D – உத்தரவு பெற்ற விசேட வங்கி
   E – பங்குதாரர்கள்
   F – முயற்சியாண்மை மூலதன கம்பனி
   G – காப்புறுதி கம்பனி
   மேலுள்ளவற்றுள் விசேட நிதி நிறுவனங்களை மட்டும் கொண்ட தொகுதி
   1) ABFG   2) BCEF   3) BDFG   4) ADEF   5) CEFG

மத்திய மாகாண கல்வித் திணைக்களம்

5) மத்திய வங்கியின் தொழிற்பாடுகளும் பிரதிநிதித்துவ தொழிற்பாடுகள் கீழே தரப்பட்டுள்ளன.

A – நாணய கொள்கைநடைமுறைப்படுத்தல்.

B – வெளிநாட்டு ஒதுக்க முகாமைத்துவம்

C – அரசின் கடன் முகாமைத்துவம்

D – சட்டபணத்தை வெளியிடல்.

E – ஊழியர் சேமலாப நிதி முகாமை

F – கிராமிய கடன் முன்மொழிவு தலைமை நிறுவனம்

மேலேயுள்ள பிரதான தொழிற்பாடுகளையும் பிரதிநிதித்துவ தொழிற்பாடுகளையும் ஒழுங்குப்படுத்தும் போது அமையும் ஒழுங்குமுறை

1) ABC / DEF 2) ACD / BEF 3) ABD / CEF 4) CEF / ABD

5)AEF / BCD

6) இலங்கையிலுள்ள வங்கிகளுக்கிடையில் பெறுமதி கூடிய கொடுப்பனவுகளை காலந்தாழ்த்தாது உயர் தொழினுட்பத்தை பயன்படுத்தி தீர்ப்பனவு செய்வதற்காக உருவாக்கப்பட்டுள்ள கணனி கொடுப்பனவு முறை?

1) SLIPS 2) RTGS 3) SWIFT 4) LANKA PAY 5) SSDS

7) விசேட வங்கியுடன் தொடர்பான பிழையான கூற்று

1) கால சேமிப்பு வைப்பினை ஏற்றல்.
2) முயற்சியாளருக்கு கடன் வழங்குதல்.
3) அந்நிய செலாவணி கொடுக்கல் வாங்கலில் ஈடுபடல்.
4) குத்தகை வசதிகளை வழங்கல்.
5) முகாமைத்துவ ஆலோசனை சேவைகளை வழங்கல்.

8) பின்வருவனவற்றுள் வணிக வங்கிகளின் பிரதி கர்த்தா சேவையாக கருதப்படுவது

1) பிணைப்பத்திரங்களை கொள்வனவு செய்தலும் விற்பனை செய்தலும்.
2) தங்க ஆபரணங்களை பிணையாக ஏற்று கடன் வழங்கல்.
3) தொலைபேசியை பயன்படுத்தி வங்கி கருமங்களை நிறைவேற்றல்.
4) பாதுகாப்பு பெட்டக சேவை வழங்குதல்.
5) வெளிநாட்டு நாணய கொள்வனவு விற்பனைகளில் ஈடுபடல்.

9) காசோலையில் மிகவும் பாதுகாப்பான குறுக்குகோடிடலாக கருதப்படுவது?

1) ______

2) கைமாறத்தகாதது

3) BOC

4) இலங்கைவங்கி வரக்காப்பொல கிளை

5) பெறுவோன் கணக்கு மட்டும் இலங்கைவங்கி வரக்காப்பொலகிளை

10) வரவு அட்டை தொடர்பான தவறான கூற்று
    1) கணக்கிலுள்ள பணத்தை பயன்படுத்துவதால் வட்டி செலுத்த தேவையில்லை.
    2) வங்கி கணக்கொன்றிருப்பது கட்டாயமில்லை.
    3) கணக்கிலுள்ள மீதிவரை கொடுக்கல் வாங்கல் மேற்கொள்ளல்.
    4) கொடுக்கல் வாங்கல் அவ்வேளையிலே இடம்பெறல்.
    5) ATM இயந்திரத்தின் மூலம் பணத்தை பெற்று கொள்ளல்.

இடைவெளி நிரப்புக.

11) அலகு பொறுப்பு முகாமைத்துவ உற்பத்தி ………………… உள்ளடக்கப்படுவதும் ஊழியர் நம்பிக்கை நிதியம் ………………. உள்ளடக்கப்படும்.
12) அலகு பொறுப்பொன்றின் கட்டமைப்பானது ……………. , …………. , ………………… என 3 பிரிவினர்களை உள்ளடக்கியதாகும்.
13) சந்தை இடை தரகர்களை ………………. , ………………….. காரணிபடுத்தும் வழங்குநர் என வகைப்படுத்தமுடியும்.
14) வணிக வங்கிகளினால் பேணப்படும் வைப்புகளாக ……………….. , ……………… , ………………… என்பன காணப்படுகின்றது.
15) வணிக வங்கியின் கடன் தொடர்பான சேவைகளை ……………, ………………. என வகைபடுத்துவதுடன் மேலதிக பற்று வசதிகளை ………………., …………………. என வகைபடுத்தலாம்.

16) காசோலையில் அச்சிடப்பட்டுள்ள ………………… என்ற சொல் வெட்டப்படாது விடப்பட்டுள்ள காசோலை காவியின் காசோலை எனப்படுவதும் கட்டளைக்கு என எழுதப்பட்டுள்ள காசோலை ……………….. காசோலை எனப்படும்.
17) காசோலையின் முகப்பில் இரண்டு சமாந்தர கோடுகளை வரைதல் ……………………. எனப்படுவதுடன் இது ………….. , …………….. கோடிடல் என இரண்டு வகைப்படும்.
18) இலத்திரனியல் பண வகைகளாக …………………., ……………… , ………………. , ………………… என்பவற்றை குறிப்பிடலாம்.

பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.

1) நல்ல பணத்தின் பண்புகளை குறிப்பிடுக.
2) குத்தகை கம்பனிகள் மூலம் வணிகருக்கு கிடைக்கும் பயன்கள் எவை?
3) இலங்கை மத்திய வங்கியின் பிரதான நோக்கங்களை குறிப்பிட்டு விளக்குக.
4) வணிக வங்கிகளினால் வழங்கப்படும் சேவைகள் 4 இனை குறிப்பிடுக.
5) சேமிப்பு கணக்குக்கும், நடைமுறை கணக்குக்கும் இடையிலான வேறுபாடுகளை குறிப்பிடுக.
6) தன்னியக்க வங்கி சேவைகள் மூலம் வாடிக்கையாளருக்கு கிடைக்கும் நன்மைகள் எவை?
7) காசோலை என்பதை வரைவிலக்கணப்படுத்துக.

மத்திய மாகாண கல்வித் திணைக்களம்

8) காசோலை ஒன்று எழுதும் போது கவனத்திற் கொள்ள வேண்டிய விடயங்கள் எவை?
9) காசோலை ஒன்று மறுக்கப்படுகின்ற சந்தர்ப்பங்கள் எவை?
10) இலத்திரனியல் பண கொடுக்கல் வாங்கல்களின்அனுகூலங்கள், பிரதிகூலங்கள் இவ்விரண்டு வீதம் குறிப்பிடுக.

தேர்ச்சி – 8 , 9 , 10

காப்புறுதி

- காப்புறுதி செய்பவரினால் தவணை கட்டணம் செலுத்துவதற்கும் காப்புறுதி அபாயங்கள் காரணமாக காப்புறுதி செய்பவருக்கு ஏற்படக்கூடிய நட்டத்திற்காக காப்புறுத்துவோன் இழப்பீடு கொடுப்பதற்கும் காப்புறுதிசெய்பவருக்கும் காப்புறுத்துவோருக்குமிடையே ஏற்படுத்தி கொள்ளும் உடன்பாடு காப்புறுதி எனப்படும்.

காப்புறுதி செய்யகூடிய இடர்களில் இருக்ககூடிய பண்புகள்

- இடரை எதிர்வு கூற கூடியதாக இருத்தல்.
- பணரீதியாக அளவிட கூடியதாக இருத்தல்.
- இடரானது நிச்சயமாக இடம்பெற கூடியதல்லாததாக இருத்தல்.
- தொடர்புகளிலிருந்து நீக்கப்பட்டதாக இருத்தல்.
- உறுதிபடுத்தக்கூடியதாக இருத்தல்.

காப்புறுதி ஒப்பந்தத்துடன் தொடர்புடைய பிரிவினர்

- 1ம் பிரிவினர் (காப்புறுதி செய்பவர்)
- 2ம் பிரிவினர் (காப்புறுத்துவோன், காப்புறுதி கம்பனி)
- 3ம் பிரிவினர் (வெளியக பிரிவினர்)

காப்புறுதி ஒப்பந்தமொன்று செல்லுபடியாவதற்கு கொண்டிருக்க வேண்டிய அம்சங்கள்

- சட்டரீதியான கடப்பாடொன்றை ஏற்படுத்திக்கொள்ளும் எண்ணம்
- முன்மொழிவுகள்
- ஏற்புடமை
- சட்டரீதியான தன்மை
- ஒவ்வொரு பிரிவினர்களுக்கும் சட்டரீதியான கடப்பாடொன்றை ஏற்படுத்தி கொள்வதற்கான இயலுமை

காப்புறுதி தத்துவங்கள்

மத்திய மாகாண கல்வித்திணைக்களம்

- ❖ காப்புறுதி வணிகத்தை முறையாக நடாத்தி செல்வதற்கு பின்பற்றப்படும் கோட்பாடுகள் காப்புறுதி தத்துவங்களாகும்.
  1) காப்புறுதி செய்யும் உரிமை
  2) உச்ச நம்பிக்கை
  3) இழப்பீட்டு தத்துவம்
  4) புதிலால் வைப்பு தத்துவம்
  5) பங்களிப்பு தத்துவம்
  6) அண்மிய காரணம்

காப்புறுதி வகைகள்

- ❖ ஆயுள் காப்புறுதி
- ❖ பொது காப்புறுதி

பொது காப்புறுதியின் வகைகள்

- ❖ தீ அபாய காப்புறுதி
- ❖ களவபாய காப்புறுதி
- ❖ இயற்கை அனர்த்த காப்புறுதி
- ❖ கடலபாய காப்புறுதி
  1) கப்பல் தண்ட காப்புறுதி
  2) கப்பல் சரக்கு காப்புறுதி
- ❖ பொறுப்பு காப்புறுதி
  1) பொதுமக்கள் பொறுப்பு காப்புறுதி
  2) உற்பத்தி பொறுப்பு காப்புறுதி
  3) ஊழியர் பொறுப்பு காப்புறுதி
- ❖ வழிசரக்கு காப்புறுதி
- ❖ வழி பண காப்புறுதி

தொடர்பாடல்

- ❖ ஒரு பிரிவினரிடமிருந்து மற்றோர் பிரிவினருக்கு அல்லது பல பிரிவினருக்கு தகவல்களை வழங்குதல், பெறுதல், விளங்கி கொள்ளுதல், பகிர்ந்து கொள்ளல் தொடர்பாடல் எனப்படும்.

மத்திய மாகாண கல்வித் திணைக்களம்

தொடர்பாடல் செயன்முறை

தொடர்பாடல் ஊடகங்கள்

- ❖ வாய்மொழி மூல ஊடகம்
- ❖ எழுத்து மூல ஊடகம்
- ❖ சமிக்ஞைகளும் குறியீடுகளும்

நிறுவனமொன்றின் தொடர்பாடல் இடம்பெறும் முறைக்கமைய வகைபடுத்தல்

- ❖ அக அல்லது உள்ளக தொடர்பாடல்
- ❖ புற அல்லது வெளியக தொடர்பாடல்

இலத்திரனியல் தொடர்பாடல்

- ❖ தகவல் தொடர்பாடல் தொழினுட்பத்தின் விருத்தியுடன் உருவான தொடர்பாடல் இலத்திரனியல் தொடர்பாடல் எனப்படும்.

  உ+ம்

  1) இணையம்
  2) இலத்திரனியல் தபால்
  3) அக இணையம்
  4) ஒலியஞ்சல்
  5) தொலைநகல் இயந்திரம்
  6) கைப்பேசி
  7) இன்டர்கொம்

போக்குவரத்து

- ❖ ஓர் இடத்திலிருந்து மற்றோர் இடத்திற்கு பல்வேறு ஊடகங்களை பயன்படுத்தி தனிநபர்கள் அல்லது பொருட்களை கொண்டு செல்லும் செயல்முறை போக்குவரத்தாகும்.

போக்குவரத்தின் அடிப்படைகள்

- ❖ வீதி
- ❖ ஊடகம்
- ❖ வழு அல்லது சக்தி
- ❖ தரிப்பிடம்

போக்குவரத்து முறைகள்

- ❖ பெருந்தெரு போக்குவரத்து
- ❖ புகையிரத போக்குவரத்து
- ❖ நீர்வழி போக்குவரத்து
- ❖ ஆகாய வழி போக்குவரத்து

போக்குவரத்து ஊடகம் ஒன்றை தெரிவு செய்யும் போது கவனம் செலுத்த வேண்டிய விடயங்கள்

- ❖ பொருளின் தன்மை
- ❖ கிரயம்

மத்திய மாகாண கல்வித் திணைக்களம்

- விரைவு அல்லது வேகம்
- தூரத்தின் அளவு
- கொள்ளளவு அல்லது இயலளவு
- பாதுகாப்பானது

களஞ்சியப்படுத்தல்

- பொருள்களை கொள்வனவு செய்த சந்தர்ப்பத்திலிருந்து அல்லது உற்பத்தி செய்த சந்தர்ப்பத்திலிருந்து அவற்றை சந்தைப்படுத்தும் வரை அல்லது நுகர்விற்கு எடுக்கும் வரை பாதுகாப்பாக வைத்திருக்கும் செயன்முறை களஞ்சியப்படுத்தல் எனப்படும்.

களஞ்சியசாலையை நிறுவும் பொழுது கவனம் செலுத்த வேண்டிய விடயங்கள்

- கட்டிடத்தின் தள அமைப்பு திட்டமும் கட்டிடத்தினுள் நகர்த்துவதற்கான வசதியும்
- பொருளின் பயன்பாட்டு வேகத்திற்கேற்ப களஞ்சிய சாலையில் வளங்களை ஒதுக்குவதற்கான தேவை
- பிரதான தொடர்புகளுக்கு அண்மித்ததென
- பண்டங்களை இடத்திற்கிடம் மாற்றகூடிய திறன்
- களஞ்சியபடுத்தும் பொருளின் தன்மை
- கிரயம்

போக்குவரத்தும் வழங்கல் சேவையும்

- நுகர்வோர் தேவை விருப்பங்களை நிறைவு செய்யும் நோக்கில் பொருட்கள் சேவைகள் அவை தொடர்பான தகவல்கள் முன்னும் பின்னும் பாய்ந்து செல்லல் அவற்றின் தொடக்க சந்தர்ப்பத்திலிருந்து நுகரும் சந்தர்ப்பம் வரை வினைதிறனாகவும் பயனுறுதி கொண்டதாகவும் திட்டமிடல் மற்றும் நடைமுறைபடுத்தல் செயன்முறை ஆகும்.
  1) Inbound Logistics
     - மூலப்பொருள் முடிவு பொருட்களை வழங்குநரிடமிருந்து கொள்வனவு செய்வது தொட்டு உற்பத்தி செய்யப்படும் சந்தர்ப்பம் வரையான அசைவுகள்.
  2) Out bound Logistis
     - உற்பத்தி செயன்முறைகள் பூர்த்தியாக்கப்பட்ட சந்தர்ப்பத்திலிருந்து இறுதி நுகர்வோருக்கு வழங்கும் வரையிலான அசைவுகள்.

போக்குவரத்து வழங்கல் சேவை முறைமையின் வகைகள்

- சமநிறை கொண்ட போக்குவரத்து மற்றும் வழங்கல் சேவை முறைமை
- உற்பத்தி செயன்முறை வரை பாய்த்தல் சிக்கல் தன்மை கொண்ட முறைமை
- உற்பத்தியின் பின்னர் இறுதி நுகர்வோனின் கைக்கு கிடைக்க செய்தல் சிக்கல் நிறைந்த துறைமை
- உற்பத்தி பொருட்களை வினியோகித்த பின்னர் மீள்பாய்ச்சலுடன் கூடிய முறைமை

மத்திய மாகாண கல்வித் திணைக்களம்

தேர்ச்சி – 8 , 9 , 10

சரியான விடையின் கீழ் கோடிடுக.

1) காப்புறுதி செய்யகூடிய இடர்களும் செய்யமுடியாத இடர்களும் கீழே தரப்பட்டுள்ளன.
   A – வணிக நட்டமடைதல்
   B – பாடகரின் குரல்
   C – மோட்டார் வாகன தேய்வு
   D – வடிவமைப்பு மாற்றம்
   E – பரீட்சையில் சித்தியடையாமை
   F – களவு
   இவற்றுள் காப்புறுதி செய்ய முடியாத இடர்களை மட்டும் உள்ளடக்கிய தொகுதி
   1) ABCD 2) BCEF 3) ACDE 4) CDEF 5) ADEF

2) குமார் தனது ஆயுளை A காப்புறுதி நிறுவனத்தில் 400 000/= க்கும் B என்ற காப்புறுதி நிறுவனத்தில் 500 000/= க்கும் காப்புறுதி பெற்றிருந்தார். குமார் இறக்கும் போது இரு காப்புறுதி நிறுவனத்திலும் பெற்று கொள்ள கூடிய காப்புறுதி தொகை?
   1) 500 000 2) 400 000 3) 700 000 4) 900 000 5) 800 000

3) பின்வருவனவற்றுள் ஆயள் காப்புறுதி தொடர்பான பொருத்தமற்ற கூற்று
   1) ஆயுள் காப்புறுதியில் இடர் நிச்சயமானதாகும்.
   2) ஆயுள் காப்புறுதியில் இழப்பு ஏற்படும் போது இழப்பீட்டு தத்துவத்திற்கமைய நட்டஈடு வழங்கப்படும்.
   3) ஆயுள் காப்புறுதி ஒப்பந்தத்தை இன்னொருவருக்கு சாட்டுதல் செய்ய முடியாது.
   4) ஆயுள் காப்புறுதி ஒப்பந்தத்தின் மூலம் பங்கிலாபம் போன்ற மேலதிக அனுகூலங்களை பெற்றுகொள்ள முடியும்.
   5) ஆயுள் காப்புறுதி ஒப்பந்தம் ஒரு சேமிப்பாக காணப்படும்.

4) கடலபாய ஒப்பந்தமும் ஒப்பந்த வகைகளும் வருமாறு
   1) கப்பல் தண்ட காப்புறுதி   A – சகல இடர் ஒப்பந்தம்
   2) கப்பல் சரக்கு காப்புறுதி   B – மதிப்பிடப்பட்ட ஒப்பந்தம்
   C – திறந்த ஒப்பந்தம்
   D – துறைமுக ஒப்பந்தம்
   மேலுள்ளவற்றை தொடர்புபடுத்தும் போது சரியான விடையாக அமைவது
   1) 1-A, B, 2-C, D 2) 1-A,C, 2-B, D 3) 1-B,C , 2-A, D
   4) 1-C,D, 2-A,B 5) 1-A,D, 2-B,C

மத்திய மாகாண கல்வித்திணைக்களம்

5) தொடர்பாடல் செயன்முறையை முறையாக காட்டும் தொகுதி?
   1) அனுப்புபவர், ஊடகம், செய்தி, பெறுபவர், துலங்கல், பின்னூட்டல்
   2) அனுப்புபவர், செய்தி, ஊடகம், பெறுபவர், துலங்கல், பின்னூட்டல்
   3) அனுப்புபவர், செய்தி, பெறுபவர், ஊடகம், துலங்கல், பின்னூட்டல்
   4) அனுப்புபவர், செய்தி, பெறுபவர், ஊடகம், பின்னூட்டல், துலங்கல்
   5) அனுப்புபவர், செய்தி, ஊடகம், பெறுபவர், பின்னூட்டல், துலங்கல்

6) எழுத்து மூலமான புறரீதியான இலத்திரனியல் தொடர்பாடல் முறையாக அமைவது
   1) தொலைநகல், இலத்திரனியல் தபால், இலத்திரனியல் அறிவித்தற் பலகை, குறுஞ்செய்தி
   2) தொலைநகல், இலத்திரனியல் தபால், தொலைபேசி, குறுஞ்செய்தி
   3) தொலைநகல், இலத்திரனியல் தபால், இலத்திரனியல் மணி, குறுஞ்செய்தி
   4) மின் சமிக்ஞை, இலத்திரனியல் தபால், இலத்திரனியல் மணி, குறுஞ்செய்தி
   5) இன்டர் கொம், இலத்திரனியல் தபால், தொலைநகல், குறுஞ்செய்தி

7) போக்குவரத்தின் அடிப்படைகளை மட்டும் கொண்ட தொகுதி?
   1) வீதி, ஊடகம், கிரயம், தரிப்பிடம்
   2) வீதி, ஊடகம், வேகம், தரிப்பிடம்
   3) வீதி, ஊடகம், தூரம், தரிப்பிடம்
   4) வீதி, ஊடகம், சக்தி, தரிப்பிடம்
   5) வீதி, ஊடகம், பாதுகாப்பு, தரிப்பிடம்

8) பின்வருவனவற்றுள் உற்பத்தி பொருளை வினியோகித்த பின் பாய்ச்சலுடன் கூடிய முறையாக அமைவது?
   1) உணவு பொருட்களை உற்பத்தி செய்து வழங்கும் நிறுவனம்
   2) வாயு தாங்கி போன்று மின் ஒப்படைக்கப்படும் பொருட்கள்
   3) இரசாயன பொருட்கள் உற்பத்தி கம்பனிகள்
   4) பால் மா பொருட்களை உற்பத்தி செய்யும் நிறுவனங்கள்
   5) பால் மா பொருட்களை உற்பத்தி செய்யும் நிறுவனங்கள்

மத்திய மாகாண கல்வித் திணைக்களம்

பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.

1) காப்புறுதி செய்யகூடிய இடர்களில் இருக்ககூடிய பண்புகள் எவை?
2) வணிகங்களின் வாழ்தன்மைக்கு காப்புறுதி எவ்வகையில் முக்கியத்துவமுடையதாக காணப்படுகின்றது?
3) ஆயுட் காப்புறுதிக்கும் பொது காப்புறுதிக்குமிடையிலான வேறுபாடுகளை குறிப்பிடுக.
4) பொறுப்பு காப்புறுதியின் கீழ் பெற்றுக் கொள்ள கூடிய ஒப்பந்த வகைகளை குறிப்பிட்டு விளக்குக.
5) வினைதிறன் கொண்ட தொடர்பாடலில் இருக்க வேண்டிய பண்புகள் எவை?
6) வாய்மொழி மூல தொடர்பாடல் முறையின் அனுகூலங்கள், பிரதிகூலங்களை குறிப்பிடுக.

7) பெருந்தெரு போக்குவரத்து முறையுடன் ஒப்பிடும் போது புகையிரத போக்குவரத்தில் கிடைக்கும் அனுகூலங்களை குறிப்பிடுக.
8) பொருத்தமான போக்குவரத்து முறையொன்றை தெரிவு செய்யும் போது கவனத்தில் கொள்ள வேண்டிய விடயங்கள் எவை?
9) களஞ்சிய சாலை ஒன்றை நிறுவும் போது கவனம் செலுத்த வேண்டிய விடயங்களை குறிப்பிட்டு விளக்குக.
10) போக்குவரத்து வழங்கல் சேவை முறைமையொன்றின் அடிப்படை செயன்முறைகளை குறிப்பிட்டு விளக்குக.

தேர்ச்சி – 11

வியாபாரம்

❖ கொள்வனவாளரொருவருக்கும் விற்பனையாளரொருவருக்குமிடையே உற்பத்தி பொருட்களினதும் சேவைகளினதும் உரிமையை பரிமாற்றம் செய்யும் செயன்முறை வியாபாரம் எனப்படும்.

வியாபாரத்தை வகைப்படுத்தல்

- வியாபாரம்
  - உள்நாட்டு வியாபாரம்
    - சில்லறை வியாபாரம்
    - மொத்த வியாபாரம்
  - வெளிநாட்டு வியாபாரம்
    - ஏற்றுமதி வியாபாரம்
    - இறக்குமதி வியாபாரம்

இடை நடுவர்கள்

❖ உற்பத்தி பொருள் விநியோகிக்கும் வழிமுறையில் உற்பத்தியாளருக்கும் நுகர்வோருக்குமிடையில் இருக்கும் வினியோக வழிமுறைக்காக வேண்டு தொடர்புபடும் பிரிவினர்கள் இடைநடுவர்கள் எனப்படுவர்.

1) மொத்த வியாபாரி
2) சில்லறை வியாபாரி
3) முகவர்கள்

முகவர்கள்

❖ எவரேனும் முதல்வரின் அதிகாரத்தின் கீழ் ஏதேனும் கருமமொன்றில் ஈடுபடுபவர்களை முகவர்கள் என்றழைப்பர்.

மத்திய மாகாண கல்வித் திணைக்களம்

- முகவர்களை பின்வருமாறு வகைபடுத்தலாம்.
    1) தரகு முகவர்
    2) தரகர்கள்
    3) காரணிகர்கள்
    4) பொறுப்பு முகவர்
    5) ஏல விற்பனையாளர்

சில்லறை வியாபாரம்

- இறுதி நுகர்வோனுக்கு பொருட்களை விற்பனை செய்தல் சில்லறை வியாபாரம் எனப்படும்.

சில்லறை வியாபாரத்தின் பண்புகள்

- இறுதி நுகர்வோருக்கு பொருட்கள் சேவைகளை விற்பனை செய்தல்.
- பல்வேறு வகையான பொருட்களை விற்பனைக்காக முன்வைத்தல்.
- நுகர்வோருக்கு தேவையான பொருட்களை தேவையான அளவில் தேவையான இடத்தில் பெற்று கொள்வதற்கான சந்தர்ப்பத்தை ஏற்படுத்தி இருத்தல்.
- கடனடிப்படையில் பொருட்களை விற்பனை செய்தல்.
- நுகர்வோர்களுடன் நெருங்கிய தொடர்பினை பேணி செல்லுதல்.

மொத்த வியாபாரம்

- மீள் விற்பனை செய்யும் நோக்கில் உற்பத்திகளை கொள்வனவு செய்தல் மொத்த வியாபாரம் எனப்படும்.

மொத்த வியாபாரத்தின் பண்புகள்

- மீள் விற்பனை செய்யும் நோக்கில் பொருட்களை கொள்வனவு செய்தல்
- மொத்தமாக பொருள்களை விற்பனை செய்தல்.
- வியாபார கழிவுகளை வழங்கல்.
- மொத்தமாக பொருள்களை களஞ்சியப்படுத்தி வைத்தல்.
- விற்பனை மேம்படுத்தல் கருமங்களை மேற்கொள்ளல்.
- சந்தை ஆய்வுகளை மேற்கொள்ளல்.

வெளிநாட்டு வியாபாரம்

- ஒரு நாடு இன்னொரு நாட்டுடன் நாடுகளுடன் மேற்கொள்கின்ற வியாபாரம் வெளிநாட்டு வியாபாரமாகும்.

வெளிநாட்டு வியாபாரத்தின் வகைகள்

- இறக்குமதி வியாபாரம்
- ஏற்றுமதி வியாபாரம்
- மீள் ஏற்றுமதி வியாபாரம்
- இறக்கி ஏற்றல் வியாபாரம்

மத்திய மாகாண கல்வித்திணைக்களம்

வெளிநாட்டு வியாபாரத்திற்கு அடிப்படையாக அமைந்த காரணிகள்

- இயற்கை வளங்கள் பகிரப்பட்டுள்ள முறைகளிலுள்ள முரண்பாடுகள்.
- ஒப்பீட்டு ரீதியாக கிரய நன்மைகள்
- சில உற்பத்தி பொருட்கள் தொடர்பில் சில நாடுகளில் சட்டரீதியான தன்னாதிக்கம் காணப்படல்.
- பண்ட மேம்பாடு
- வியாபார தடைகள் குறைவடைதல்.

சுதந்திர வர்த்தகம்

- எவ்வித தடைகளுமின்றி பல்வேறு பிரிவினர்களும் சுதந்திரமாக பொருள் ஏற்றுமதி, இறக்குமதி செய்வதற்கான சந்தர்ப்பம் காணப்படல் சுதந்திர வர்த்தகம் எனப்படும்.

சுதந்திர வர்த்தகத்திற்கு காணப்படும் தடைகள்

- தீர்வை வரி
- தீர்வை வரியற்ற தடைகள்
  1) இறக்குமதி கோட்டா முறை
  2) ஏற்றுமதி கோட்டா முறை
  3) இறக்குமதி, ஏற்றுமதியை தடை செய்தல்.
  4) வியாபார ஒப்பந்தம்
  5) வெளிநாட்டு செலாவணி கொள்கை

இறக்குமதி நடைமுறைகள்

- வெளிநாட்டு வழங்குநர் ஒருவரை தெரிவு செய்தல்.
- விலை விசாரணை கடிதம் அனுப்புதல்.
- விலை கூற்று பெறல்
- இறக்குமதி அனுமதிபத்திரம் பெற்று கொள்ளல்.
- கட்டளை சமர்பித்தல்.
- கொடுப்பனவு தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
- பொருட்களை பெற்றுகொள்ளல்.

ஜ

ஏற்றுமதி நடைமுறைகள்

- ஏற்றுமதியாளரொருவராக பதிவு செய்து கொள்ளல்.
- வெளிநாட்டு கொள்வனவாளரை அறிந்து கொள்ளல்.
- ஏற்றுமதி அனுமதிபத்திரத்தை பெற்று கொள்ளல்.
- பெறப்பட்ட விலை விசாரணைக்கு பதிலாக விலை கூற்றை அனுப்புதல்.
- இன்டெண்டை பெற்று கொள்ளல்.
- கப்பலுக்கு பொருளை ஏற்றுவதற்கு தேவையான இடத்தை ஒதுக்கி கொள்ளல்
- பொருத்தமான முறையில் பொருள்களை பொதி செய்தல்.
- ஏற்றுமதி பொருட்தொகுதியை காப்புறுதி செய்தல்.
- சுமை சீட்டு, வார் நாமத்தை பெற்று கொள்ளல்.
- பணத்தை பெறுவதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

மத்திய மாகாண கல்வித் திணைக்களம்

ஏற்றுமதி, இறக்குமதி வியாபாரத்தில் பயன்படுத்தப்படும் ஆவணங்கள்

- இறக்குமதி, ஏற்றுமதி அனுமதிப்பத்திரம்
- கட்டளை
- சுமை சீட்டு
- பட்டியல்
- உற்பத்தி நாட்டு சான்றிதழ்
- நாணய கடிதம்
- இறக்குமதி குறிப்பு
- ஏற்றுமதி குறிப்பு
- காப்புறுதி பத்திரம்
- கப்பல் தள சீட்டு
- நட்ட ஈட்டு கடிதம்
- சுகநல சான்றிதழ்
- பண்டக சாலை அனுமதிபத்திரம்

வியாபார வலயம்

- சில நாடுகள் ஒன்றிணைந்து வரி, சுங்க வரி மற்றும் வியாபாரம் தொடர்பான ஒப்பந்தமொன்றை உருவாக்கி கருமமாற்றும் சுதந்திர வியாபார பிரதேசம் வியாபார வலயம் எனப்படும்.
  1) ஐரோப்பிய சங்கம்
  2) ஆசியான் அமைப்பு
  3) 8 நாடுகளின் குழு

வியாபார ஒப்பந்தம்

- இரு நாடுகள் அல்லது அதற்கு மேற்பட்ட நாடுகள் குறிப்பிட்ட காலப்பகுதியொன்றினுள் வியாபார பொருள்களை பரிமாறி கொள்வதற்காக ஏற்படுத்தி கொள்ளப்படும் உடன்பாடு வியாபார ஒப்பந்தம் எனப்படும்.
  1) வடஅமைரிக்க சுதந்திர வியாபார ஒப்பந்தம்
  2) தெற்காசிய சுதந்திர வியாபார வலயம்
  3) ஆசிய பசுபிக் வியாபார ஒப்பந்தம்

சர்வதேச அமைப்புக்கள்

- உலக வியாபார அமைப்பு
- சார்க் அமைப்பு
- ஆசிய அபிவிருத்தி வங்கி
- உலக வங்கி
- சர்வதேச நாணய நிதியம்

மத்திய மாகாண கல்வித் திணைக்களம்

தேர்ச்சி – 11

சரியான விடையின் கீழ் கோடிடுக.

1) வியாபாரம் என்பது தொடர்பான சரியான கூற்று
   1) கொள்வனவாளரும், விற்பனையாளரும் சந்திக்கும் இடம்
   2) விற்பனையாளரும், கொள்வனவாளரும் தொடர்புபடும் எந்தவொரு சந்தர்ப்பமாகும்.
   3) ஒரு நாட்டின் அரசியல் எல்லைக்குள் இடம்பெறுவது
   4) ஒரு நாட்டின் அரசியல் எல்லைக்கு அப்பால் இடம்பெறுவது
   5) கொள்வனவாளருக்கும் விற்பனையாளருக்குமிடையே உற்பத்தி பொருட்கள் சேவைகளின் உரிமை பரிமாற்றம் செய்யும் செயல்முறை

2) பின்வருவனவற்றுள் நேர் வினியோக வழிமுறையாக காணப்படுவது?
   1) உற்பத்தியாளர் நுகர்வோருக்கு பொருளை வினியோகித்தல்.
   2) உற்பத்தியாளர் சில்லறை வியாபாரி மூலம் நுகர்வோருக்கு பொருளை வினியோகித்தல்.
   3) உற்பத்தியாளர் மொத்த வியாபாரி மூலம் நுகர்வோருக்கு பொருளை வினியோகித்தல்.
   4) உற்பத்தியாளர் முகவர் மூலம் நுகர்வோருக்கு பொருளை வினியோகித்தல்.
   5) உற்பத்தியாளர் மொத்த வியாபாரி, சில்லறை வியாபாரி மூலம் நுகர்வோருக்கு பொருளை வினியோகித்தல்.

3) பின்வருவனவற்றுள் முகவர்களை மட்டும் கொண்ட தொகுதி?
   1) தரகு முகவர், காரணிகர், ஏல விற்பனையாளர்
   2) தரகு முகவர், தரகர், சில்லறை வியாபாரி
   3) தரகு முகவர், பொறுப்பு முகவர், மொத்த வியாபாரி
   4) மொத்த வியாபாரி, சில்லறை வியாபாரி, முகவர்
   5) பொறுப்பு முகவர், காரணிகர், உற்பத்தியாளர்

4) முதல்வரின் சார்பாக பொருள்களை கொள்வனவு செய்யும் போது அல்லது விற்பனை செய்யும் போது தனது தனிப்பட்ட பெயரில் மேற்கொள்ளும் முகவர்கள்
   1) தரகுமுகவர் 2) தரகர் 3) மொத்த வியாபாரி 4) காரணிகர் 5) ஏல விற்பனையாளர்

5) பின்வருவனவற்றுள் சில்லறை வியாபாரமாக அமைவது?
   1) பாடசாலை சிற்றுண்டி சாலைக்கு கொப்பி, பேனைகள் கொள்வனவு செய்தல்.
   2) உணவகம் ஒன்றிற்கு தேவையான மரக்கறிகளை கொள்வனவு செய்தல்
   3) நடமாடும் வியாபாரத்தில் ஈடுபடும் சிவா வெதுப்பக உற்பத்திகளை வினியோகிப்பதற்காக கொள்வனவு செய்தல்.

மத்திய மாகாண கல்வித் திணைக்களம்

4) வீட்டு தோட்டத்தில் விற்பனை செய்வதற்காக கீரைக்கட்டுக்களை கொள்வனவு செய்தல்.
5) அன்னதான நிகழ்வு ஒன்றிற்காக 10 மூடை அரிசியை கொள்வனவு செய்தல்.

6) மொத்த வியாபரியினால் சில்லறை வியாபாரிக்கு வழங்கும் சேவையாக கருதமுடியாதது?
   1) பொருட்களை விற்பனை செய்து கொடுத்தல்.
   2) பொருட்களை மொத்தமாக வழங்குதல்.
   3) பொருட்களை விற்பனையகங்களுக்கு கொண்டு சென்று ஒப்படைத்தல்.
   4) கடன் வசதிகளை வழங்குதல்.
   5) பொருட்களை தெரிவு செய்தல், பொதி செய்தல், கலவை செய்தல் போன்ற சேவைகளில் ஈடுபடுதல்.

7) வெளிநாட்டு வியாபாரத்தினால் கிடைக்கும் அனுகூலமாக கருதமுடியாதது?
   1) அந்நிய செலாவணியை உழைத்து கொள்ளல்.
   2) ஏனைய நாடுகளின் கட்டுபாடுகள், கலாச்சாரம் என்பன உள்நாட்டில் தாக்கம் செலுத்துதல்.
   3) புதிய முகாமைத்துவம், தொழிநுட்ப தேர்ச்சிகள்
   4) சுதந்திர வர்த்தகம் காணப்படல்
   5) பொருளாதார சிக்கனங்களை பெற்று கொள்ளலாம்.

8) ஏற்றுமதி, இறக்குமதி வியாபாரத்தில் பயன்படுத்தும் ஆவணமாக கருதமுடியாதது?
   1) பற்றுசீட்டு 2) பட்டியல் 3) கட்டளை 4) சுமை சீட்டு 5) நாணய கடிதம்

9) குற்றமுள்ள சுமைசீட்டுக்குப் பதிலாக தூய சுமை சீட்டை பெற்றுகொள்வதற்கு கப்பல் தலைவனுக்கு சமர்ப்பிக்கும் ஆவணம்
   1) கட்டளை சீட்டு 2) நாணய கடிதம் 3) நட்டஈடு கடிதம்
   4) ஏற்றுமதி குவிப்பு 5) இறக்குமதி குவிப்பு

10) பின்வருவனவற்றுள் வியாபார வலயமாக காணப்படுவது
   1) உலக வியாபார அமைப்பு 2) ஆசியாள் அமைப்பு 3) சார்க் அமைப்பு 4) உலக வங்கி 5) சர்வதேச நாணய நிதியம்

இடைவெளி நிரப்புக.

11) ஒரு நாட்டின் அரசியல் எல்லைக்குள் இடம்பெறும் வியாபாரத்தை ………………., ……………. எனவும் ஒரு நாட்டின் அரசியல் எல்லைக்கு அப்பால் இடம்பெறும் வியாபாரத்தை ………………., ……………….. எனவும் வகைபடுத்தமுடியும்.

மத்திய மாகாண கல்வித் திணைக்களம்

12) உற்பத்தி பொருள் வினியோக வழிமுறையில் இடை நடுவர்களுடன் ……………….., ………………. போன்ற பிரிவினர்கள் காணப்படுவர்.
13) சுதந்திர வர்த்தகத்தில் காணப்படும் தடைகளை ………………….. மற்றும் ……………….. தடைகள் என வகைபடுத்தலாம்.
14) வெளிநாட்டு வியாபாரத்தில் பணம் செலுத்துவதற்கான ………………., …………………. போன்ற முறைகள் பயன்படுத்தப்படுகின்றது.
15) வட அமெரிக்க சுதந்திர ஒப்பந்தம் ………………….., ………………., ………………. ஆகிய நாடுகளுக்கிடையில் ஏற்படுத்தி கொள்ளப்பட்ட ஒப்பந்தமாகும்.

வினாக்களுக்கு விடை தருக.

1) உள்நாட்டு வியாபாரம், வெளிநாட்டு வியாபாரம் என்பவற்றுக்கிடையிலான வேறுபாடுகளை குறிப்பிடுக.
2) வியாபாரத்தில் இடைநடுவர்களை பயன்படுத்துவதால் பெறப்படும் அனுகூலங்களை குறிப்பிடுக.
3) சில்லறை வியாபாரத்தின் நவீன போக்குகளை குறிப்பிடுக.
4) சர்வதேச வியாபாரத்தில் ஈடுபடுவதனால் பெற்றுகொள்ளகூடிய அனுகூலங்கள் எவை?
5) பொருட்களை ஏற்றுமதி செய்யும் போது பின்பற்ற வேண்டிய நடைமுறைகளை குறிப்பிடுக.
6) வியாபார சங்கங்கள், ஒப்பந்தங்கள், அமைப்புக்கள் என்பன வெளிநாட்டு வியாபாரத்தில் ஏற்படுத்தும் தாக்கங்களை குறிப்பிடுக.
7) இலத்திரனியல் வியாபாரத்தினூடாக நுகர்வோருக்கு கிடைக்கும் அனுகூலங்களை குறிப்பிடுக.
8) இலத்திரனியல் வியாபாரம் இடம்பெறும் முறைகளை குறிப்பிட்டு விளக்குக.

மத்திய மாகாண கல்வித் திணைக்களம்

தேர்ச்சி – 16

மனித வள முகாமைத்துவம்

❖ அமைப்பொன்றின் நோக்கங்களை அடைந்து கொள்வதற்காக மிகப்பொருத்தமானதாக ஊழியர் திருப்தியும் அபிவிருத்தியும் ஏற்படக்கூடியவாறு நிறுவனத்தின் மனித வளங்களை வினைத்திறனாகவும் விளைதிறன் கொண்டதாகவும் ஈடுபடுத்திக் கொள்வது தொடர்பான செயற்பாட்டுத் தொகுதியே மனிதவள முகாமைத்துவம் எனப்படும்.

❖ ஏனைய வளங்களுடன் ஒப்பிடும் போது மனிதவளங்களில் காணப்படும் விசேட பண்புகள்.

1) உயிருள்ள வளமொன்றாக இருத்தல்.
2) சிந்திப்பதற்கும் மாற்றுச் செயற்பாடுகளைக் காட்டுவதற்கும் முடியுமாக இருத்தல்.
3) ஏனைய வளங்களை கட்டுப்படுத்தக்கூடியதாக இருத்தல்.
4) பயிற்சியளிப்பதன் மூலம் பெறுமானத்தை அதிகரிக்க முடிதல்.

5) குழுவொன்றாக கருமமாற்ற முடிதல்.
6) நடத்தை சார் சிக்கல் தன்மை கொண்டதாலும் எதிர்வு கூற முடியாது போதல்.
7) ஆக்கபூர்வமான ஆற்றல்களுடன் கூடியதாக இருத்தல்.

வேலை வடிவமைப்பு

- யாதேனும் குறிப்பிட்ட நோக்கமொன்றை நிறைவேற்றுவதற்காக வேலையொன்றை உருவாக்குதல் அல்லது தோற்றுவித்தல் வேலை வடிவமைப்பு எனப்படும்.

வேலை பகுப்பாய்வு

- வணிகமொன்றின் வேலைகள், கடமைகள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாகவும் அத்தொழிலினை வெற்றிகரமான முறையில் நிறைவேற்றிக் கொள்வதற்குத் தேவையான ஊழியர்களிடம் இருக்க வேண்டிய தகைமைகள்/ பண்புகள் தொடர்பாவும் மேற்கொள்ளப்படும் ஒழுங்குமுறையொன்றே வேலைப் பகுப்பாய்வாகும்.
- இது பின்வருவனவற்றை தயாரிக்க உதவும்.
  1) வேலை விபரணம்
     ஏதேனும் வேலையொன்றிற்குரிய பணிகள், கடமைகள், பொறுப்புக்கள், வேலை நிபந்தனைகள், வேலை செய்ய வேண்டிய மணித்தியால எண்ணிக்கை, லையின் தன்மை, யாருக்குப் பொறுப்புக் கூற வேண்டும் என்பன விபரிக்கப்படுகின்ற கூற்று வேலை விபரணம் ஆகும்.

  2) வேலை குறித்துரைத்தல்
     வேலையொன்றை விளைதிறனாகவும் வினைதிறன் கொண்டதாகவும் நிறைவேற்றுவதற்குத் தொழிலைச் செய்பவரிடம் இருக்க வேண்டிய அடிப்படைத் தகைமைகளை உள்ளடக்கித் தயாரிக்கப்படும் ஆவணமே வேலை குறித்துரைத்தல் ஆகும்.

மனிதவள திட்டமிடல்

- நிறுவனமொன்றின் இலக்குகளையும் நோக்கங்களையும் அடைந்து கொள்வதற்காக நிறுவனத்தின் எதிர்கால ஊழியர் தேவைப்பாட்டை தீர்மானித்துக் கொள்வதற்கும் அத் தேவையினை நிறைவேற்றிக் கொள்ளும் பொருட்டு எடுக்கப்பட வேண்டிய செயல்முறைகளைத் தீர்மானித்தல் மனிதவள திட்டமிடல் எனப்படும்.

- மனிதவளத் திட்டமிடல் செயன்முறையின் படிமுறைகள்
  1) எதிர்கால மனிதவளத் தேவைகளை எதிர்வு கூறல்.
  2) மனித வளங்களின் வழங்கலை மதிப்பீடு செய்தல்
  3) மனித வளங்களின் கேள்வி நிரம்பலை ஒப்பீடு செய்தல்.

மத்திய மாகாண கல்வித் திணைக்களம்

4) மனித வளங்களின் மிகை அல்லது பற்றாக்குறைக்கு எடுக்க வேண்டிய உபாய வழிமுறைகளை அபிவிருத்தி செய்தல்.
5) மனிதவளத் திட்டத்தைத் தயாரித்தல்.
6) மனிதவளத் திட்டமிடலின் செயற்பாட்டினை மதிப்பீடு செய்தலும் விருத்தி செய்தலும்.

ஆட்சேர்ப்பு

- அமைப்பொன்றின் இலக்குகள், நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்ளும் பொருட்டு நிறுவனமொன்றிற்கு துணையாக அமைகின்ற ஆற்றல்கள், நேர் மனப்பாங்குகளுடன் கூடிய தொழில்களை எதிர்ப்பார்ப்போரை நிறுவனத்தின் பக்கம் ஈர்த்துக் கொள்ளம் செயன்முறையே ஆட்சேர்ப்பு எனப்படும்.

- ஊழியர் ஆட்சேர்ப்பு செயல்முறைக்குரிய கருமங்கள்
  1) தொழில் வெற்றிடங்களை இனங்காணல்.
  2) வேலை குறித்துரைத்தல்களை அறிந்து கொள்ளல்.
  3) ஈர்ப்பதற்குரிய காரணிகளில் கவனம் செலுத்துதல்.
  4) விண்ணப்பப் படிவங்களைத் தயாரித்தல்.
  5) ஊழியர் ஆட்சேர்ப்பு முறை/ முறைகளை தெரிவு செய்தல்.
  6) நடைமுறைப்படுத்தல்
  7) மதிப்பீடு

- ஆட்சேர்ப்பு செய்முறைகள்
  1) உள்ளக ரீதியான ஆட்சேர்ப்பு முறைகள்
  2) வெளியக ரீதியான ஆட்சேர்ப்பு முறைகள்

- உள்ளக ரீதியான ஆட்சேர்ப்பு முறைகள
  1) வேலை அறிவித்தல்
  2) திறன் அட்டவணை
  3) உள்ளக வலையமைப்பு
  4) ஊழியர் சிபாரிசு
  5) மரபுரிமை திட்டம்

- வெளியக ரீதியான ஆட்சேர்ப்பு முறைகள்
  1) ஊடகங்கள் மூலமான விளம்பரங்கள்
  2) இணையம்/ வேலை வலையமைப்புக்களின் மூலம்
  3) கடந்தகால ஊழியர்கள் மூலம்
  4) கல்வி நிறுவனங்கள் மற்றும் தொழில் சார் நிறுவனங்கள் மூலம்
  5) தொழில் முகவர் நிறுவனங்கள் மூலம்
  6) தொழிற்சங்கங்கள் மூலம்
  7) தொழிற்சந்தைகள் மூலம்

மத்திய மாகாண கல்வித் திணைக்களம்

தெரிவு செய்தல்

❖ விண்ணப்பதாரிகளில் வேலை வெற்றிடத்தை நிரப்புவதற்குப் பொருத்தமான விண்ணப்பதாரர்களை இனங்காணும் முறைமையொன்றே விண்ணப்பதாரர்களைத் தெரிவு செய்தல் எனப்படும்.

❖ தொழிலுக்கான வெற்றிடத்தை நிரப்புவதற்கு மிகவும் பொருத்தமான நபரைத் தெரிவு செய்வதற்குப் பயன்படுத்தப்படுகின்ற முறைகள்
1) விண்ணப்பங்களை மதிப்பிடல்.
2) நேர்முகப் பரீட்சைகள்
3) நுண்ணறிவுப் பரீட்சை
4) ஆளுமைப் பரீட்சை
5) செய்முறைப் பரீட்சை
6) வைத்தியப் பரீட்சை
7) பின்னணிப் பரீட்சை

ஊழியர் நியமனம் செய்தல்

❖ பொருத்தமான விண்ணப்பதாரர்களைத் தெரிவு செய்ததன் பின்னர் பொருத்தமான நபர்களை உரிய வேலைப் பதவிகளில் நியமனம் செய்யும் செயன்முறை ஊழியர் நியமனம் செய்தல் எனப்படும்.

❖ ஊழியர்களை நியமித்துக் கொள்ளும் அடிப்படைகள்
1) நிரந்தர அடிப்படை
2) தற்காலிக அடிப்படை

நியமனக் கடிதம்

❖ ஊழியரொருவர் வேலையில் நியமிக்கப்பட்ட பின்னர் அவருக்கு வேலை தொடர்பான கருமங்கள், பணிகள், பொறுப்புக்கள், நிபந்தனைகள் என்பவற்றை விரிவாக உள்ளடக்கி தொழில் வழங்குநரினால் வழங்கப்படுகின்ற சட்டரீதியான ஆவணம் நியமனக் கடிதம் எனப்படும்.

வேலைக்கு அமர்த்துதல்

❖ புதிதாக இணைத்துக்கொள்ளப்பட்ட ஊழியரொருவரை முதன் முதலாவதாக நிறுவனத்திற்கு அறிமுகப்படுத்தல் மற்றும் அவருக்கு/ அவளுக்கு தனது வேலை, வேலைக்குழு, வேலைச்சூழல் மற்றும் முழு நிறுவனம் தொடர்பிலான விளக்கமொன்றைப் பெற்றுக் கொடுக்கும் கருமம் வேலைக்கு அமர்த்துதலாகும்.

தகுதிகாண் காலம்

❖ பதவியில் இணைக்கப்பட்ட புதிய ஊழியரொருவரை பதவியில் நிரந்தரமாக்க முன்னர் சேவை செய்யவேண்டிய காலப்பகுதி தகுதிகாண் காலம் எனப்படும்.

மத்திய மாகாண கல்வித்திணைக்களம்

- தகுதிகாண் காலத்தினுள் ஊழியருக்குத் தனது கருமங்களை உரிய முறையில் நிறைவேற்ற முடியாமல் போனால் முகாமைக்கு பின்வரும் நடவடிக்கைகளை எடுக்கலாம்.
  1) சேவையினை முடிவுக்கு கொண்டு வரல்.
  2) வாய் மூலமும் எழுத்து மூலமும் எச்சரித்தல்.
  3) தகுதிகாண் காலத்தினை நீடித்தல்
  4) ஊழியரை இடமாற்றுதல்.

செயற்றிறன் மதிப்பீடு

- ஊழியர் தனது வேலைப் பணிகளை எந்தளவிற்கு சிறப்பாக நிறைவேற்றுகின்றார் என்பதைக் கண்டறிந்து அறிக்கைப்படுத்துகின்ற செயன்முறை செயற்றிறன் மதிப்பீடு எனப்படும்.

கொடுப்பனவு முகாமைத்துவம்

- கொடுப்பனவு முகாமைத்துவம் என்பதன் கருத்து சம்பளம், ஊக்குவிப்புக் கொடுப்பனவுகள் மற்றும் ஏனைய அனுகூலங்களை உள்ளடக்கிய சம்பள முறையொன்றை வழங்குதலை நடைமுறைப்படுத்துதலும் மற்றும் அதனை நடைமுறைப்படுத்திச் செல்வதற்கான மனிதவள முகாமைத்துவக் கருமமாகும்.

- கொடுப்பனவு முறைமையொன்றின் அடிப்படைகள்



ஊழியர் அசைவு

- ஊழியரது வேலை நிலையில் ஏற்படுத்துகின்ற மாற்றங்கள் ஊழியர் அசைவு எனப்படும்.

- ஊழியர் அசைவினை ஏற்படுத்தக்கூடிய முறைகள்
  1) பதவியுயர்வு
  2) இடமாற்றம்
  3) விலக்குதல்
  4) வேலையினை முடிவுறுத்தல்

மத்திய மாகாண கல்வித்திணைக்களம்

ஊழியர் குறைகள்

- ❖ வேலை/ வேலைச் சூழல் தொடர்பில் ஊழியரொருவரிடம்/ ஊழியர் குழுவொன்றில் ஏற்படக்கூடிய உளரீதியான தளர்வு/ சோர்வடைதல் ஊழியரின் குறைகள் எனப்படும்.

- ❖ ஊழியர் குறைகளை இனங்காணக்கூடிய முறைகள்
  1) நீங்கற் செய்தல் நேர்முகக் கலந்துரையாடல்.
  2) ஆலோசனைப் பெட்டி
  3) ஊழியர் மனப்பாங்கு ஆய்வு

- ❖ ஊழியர் குறைகளைத் தீர்க்கும் முறைகள்
  1) குறைகளைத் தீர்க்கும் விதிமுறைகளை உள்ளடக்கிய சட்டதிட்டங்கள்
  2) உடனடி மேற்பார்வையாளர்
  3) திறந்த வாயிற் கொள்கை
  4) கூட்டுக் குழுமுறை
  5) ஆலோசனை கூறல்
  6) குறைகோள் அதிகாரியை நியமித்தல்.
  7) தீர்ப்பனவு

- ❖ ஊழியர் குறைகளை தீர்ப்பவர் பின்பற்றவேண்டிய படிமுறைகள்
  1) குறைகளுக்குச் சிறந்த முறையில் செவி சாய்த்தல்.
  2) குறைகளுக்கும் அதனை முன்வைக்கும் ஊழியர்களுக்கும் உரியவாறு சரியான தகவல்களைச் சேகரித்தல்.
  3) ஊழியரோடு அது தொடர்பாக கலந்துரையாடுதல்.
  4) ஊழியரினால் வழங்கப்படும் விடயங்களுக்குச் சிறந்த முறையில் செவிசாய்த்தல்.
  5) ஊழியரினால் வழங்கப்படும் விடயங்கள் சரியானதாக இருப்பின் அவற்றை ஏற்றுக் கொள்ளல்.
  6) ஊழியரினுள் நம்பிக்கையைக் கடடியெழுப்புதல்.

ஊழியர் ஒழுக்கம்

- ❖ வுணிக நிறுவனமொன்று ஒழுங்குமுறையாகச் சட்டரீதியாக நடத்திச் செல்வதற்காக தேவையான ஏற்றுக்கொள்ளப்பட்ட/ வேலை வழங்குனரது எதிர்பார்க்கப்பட்ட ஊழியரது நடத்தைகள் சிறந்த ஒழுக்கம் எனப்படும்.

- ❖ ஒழுக்காற்று நடவடிக்கைகள்
  1) நேரடியாக எச்சரித்தல்.
  2) எழுத்துமூலம் எச்சரித்தல்.
  3) தண்டம் விதித்தல்.
  4) சம்பளமின்றித் தற்காலிகமாக வேலையினை இடை நிறுத்தம்
  5) ஒழுக்காற்று நடவடிக்கையாக இடமாற்றம் செய்தல்.
  6) சம்பள அதிகரிப்பினை நிறுத்துதல்
  7) பணியிறக்கம் செய்தல்.
  8) சேவையிலிருந்து நீக்குதல்.

மத்திய மாகாண கல்வித்திணைக்களம்

ஊழியர் சுகாதாரம்

- ❖ வேலைப் பணிகள், கடமைகள், பொறுப்புகள் என்பனவற்றை வினைதிறனாக மேற்கொள்வதற்கு ஊழியரிடம் காணப்படவேண்டிய முழுமையான உடல், உள நிலைமைகள் சுகாதாரம் எனப்படும்.

ஊழியர் பாதுகாப்பு

- ❖ சுகாதாரத்திற்குத் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய சகல இடர்களிலிருந்தும் ஊழியர்களைப் பாதுகாப்பதே பாதுகாப்பு எனப்படும்.

தொழில் உறவு

- ❖ தொழில் வழங்குநர் - ஊழியர் எனும் இரு பிரிவினர்களுக்கிடையே காணப்படும் ஏதேனும் ஒரு முறையிலான தொழில் சார் உறவானது கைத்தொழில் உறவு எனப்படும்.

தொழில் பிணக்குகள்

- ❖ ஏதாவது வேலை தொடர்பான பிரச்சினையொன்றின் காரணமாக தொழில் மற்றும் ஊழியர்களிடையே அல்லது ஊழியருக்குமிடையிலே ஏற்படுகின்ற பிணக்குகள் கைத்தொழில் பிணக்குகள் எனப்படும்.

- ❖ கைத்தொழில் பிணக்குகள் ஏற்படுவதற்கான காரணங்கள்
  1) வேலை வழங்கல் அல்லது வழங்காமை.
  2) சேவை நிபந்தனைகள்
  3) வேலை நிலைமை தொடர்பில்

தொழிற் சங்கம்

- ❖ தொழில் சார் உரிமைகளைப் பெற்றுக்கொள்வதற்காகவும் அவற்றை பாதுகாத்து கொள்வதற்காகவும் ஏதாவது கைத்தொழிலொன்றில் ஈடுபட்டுள்ள தொழில் வழங்குநர் / ஊழியர்கள் ஒன்று சேர்ந்து அமைத்துக் கொள்கின்ற அமைப்பு தொழிற்சங்கம் எனப்படும்.

- ❖ தொழிற்சங்கமொன்றின் கருமங்கள்
  1) கூட்டுப் பேரம் பேசுதல்.
  2) கூட்டாக கலந்துரையாடல்களில் பங்குபற்றல்.
  3) ஊழியர் முகாமைத்துவ கொள்கை, நடைமுறைகள் என்பவற்றை உருவாக்கும் போதும் மற்றும் அவற்றில் திருத்தங்களை செய்யும்போது ஆலோசனை வழங்கல்.
  4) தொழிற்சங்க நடவடிக்கைகளை திட்டமிடலும் நடைமுறைப்படுத்தலும்.
  5) தேசிய மற்றும் சர்வதேச கூட்டங்கள், கருத்தரங்குகளில் கலந்து கொள்ளல்.
  6) அங்கத்தவர்களுக்கு சட்ட ரீதியான பாதுகாப்பினை அரசரிடமிருந்து பெற்றுக் கொள்ளல்.

மத்திய மாகாண கல்வித்திணைக்களம்

கைத்தொழில் நடவடிக்கைகள்

❖ கைத்தொழில் பிரச்சினையொன்று காணப்படும் போது அப்பிரச்சினை தொடர்பில் தொழில் வழங்குநரினால் மேற்கொள்ளப்படுகின்ற அழுத்தங்களுக்கு எதிராக தொழிற் சங்கங்கள் பயன்படுத்துகின்ற பல்வேறு நடவடிக்கைகள் கைத்தொழில் நடவடிக்கைகள் எனப்படும்.

❖ கைத்தொழில் நடவடிக்கைகள்

1) கூட்டுப்பேரம் பேசுதல்.
2) சட்டப்படி வேலை செய்தல்.
3) மெதுவாக வேலை செய்தல்.
4) கறுப்புப்பட்டி அணிந்து வேலை செய்தல்.
5) மேலதிக நேர வேலைகளில் ஈடுபடாதிருத்தல்.
6) வேலைகளில் ஈடுபடாதிருத்தல்.
7) வேலைப் பகிஷ்கரிப்பு
8) வேலையினைக் குழப்புதல்.
9) மறியல் போராட்டாம்
10) உண்ணாவிரதம்

❖ ஊழியர்களின் தொழிற்சங்க நடவடிக்கைகளை தடுப்பதற்காக தொழில் வழங்குநர் எடுக்கக்கூடிய வழிமுறைகள்

1) வாயிற்கதவுகளை மூடுதல்/ வெளியேற்றல்.
2) சேவையை விட்டு விலகிச் சென்றதாக கருதுதல்.
3) வேலை நிறுத்தத்திற்கு பதிலீடு செய்தல்.
4) அந்நியோன்ய உதவி வேலைத்திட்டங்களை பயன்படுத்துதல்.
5) உற்பத்தியினை மாற்றுதல்.

கூட்டு ஒப்பந்தம்

❖ கைத்தொழில் பிணக்கு தொடர்பில் தொழில் வழங்குநர் - ஊழியர் எனும் இரு பிரிவினர்களிடையே ஏற்படுத்திக் கொள்கின்ற இணக்கப்பாடு கூட்டு ஒப்பந்தம் எனப்படும்.

❖ கூட்டு ஒப்பந்தமொன்றின் நோக்கம்

1) ஊழியர்களினதும் தொழில் வழங்குநர்களினதும் வெகுமதிகளையும் உரிமைகளையும் கடமைகளையும் பாதுகாத்தல்
2) கைத்தொழில் பிணக்குகளைத் தடுப்பதற்காகத் தொழில் உறவுகளை ஏற்படுத்தல்.
3) தொழில் தடைப்படுவதனால் ஊழியர்களுக்கு கிடைக்கப் பெறும் வெகுமதிகளையும் அனுகூலங்களையும் விட சாதகமான நிலைமையொன்றை ஏற்படுத்தல்.

❖ ஊழியர் செயற்பாடுகளை மதிப்பீடு செய்வதற்கான நியதிகள்

1) ஊழியர் புரள்வு
2) ஊழியர் வரவின்மை
3) ஊழியர் உற்பத்திகள்
4) கைத்தொழில் உறவுகள்

மத்திய மாகாண கல்வித் திணைக்களம்

ஊழியர் புரள்வு

- ❖ குறித்த காலப்பகுதியினுள் ஊழியர் நிறுவனத்திலிருந்து விலகிச் செல்லும் அளவு ஊழியர் புரள்வு எனப்படும்.

- ❖ ஊழியர் புரள்வு =

$$\frac{\text{குறித்த காலப்பகுதியொன்றில் விலகிய ஊழியர் எண்ணிக்கை}}{\text{அக்காலப்பகுதியில் வேலை செய்த சராசரி ஊழியர் எண்ணிக்கை}}$$

ஊழியர் வரவின்மை

- ❖ ஊழியர்களுக்கு வேலைக்குச் சமூகமளிக்காமை மற்றும் வேலைக்குச் சமூகமளித்தும் வேலை செய்யாமை காரணமாக நிறுவனத்திற்குச் சேவை இழக்கப்படல் ஊழியர் வரவின்மை எனப்படும்.

- ❖ நிறுவனத்திற்கு சேவை கிடைக்கப் பெறாத சந்தர்ப்பங்கள்
  1) வேலைக்குச் சமூகமளிக்காமை.
  2) வேலைக்குச் சமூகமளித்தும் சேவையினை வழங்கல்.
  3) ஓய்வு நேரத்தை கூடுதலாக எடுத்தல்.
  4) தாமதமாக சமூகமளித்தல்.
  5) உரிய நேரத்திற்கு முன்னர் வெளியேறிச் செல்லல்.

- ❖ ஊழியர் வரவின்மை =

$$\frac{\text{ஊழியர் வேலைக்கு சமூகமளிக்காமையினால் இழக்கப்பட்ட நாட்களின் எண்ணிக்கை}}{\text{ஊழியர் வேலை செய்வதற்கு நிர்ணயிக்கப்பட்ட மொத்த வேலை நாட்கள்}} \times 100$$

ஊழியர் உற்பத்தி திறன்

- ❖ குறித்த காலப்பகுதியினுள் நிறுவனமொன்றின் ஊழியர் உள்ளீடு மற்றும் வெளியீடு என்பவற்றுக்கிடையிலான தொடர்பு ஊழியர் உற்பத்தி திறன் எனப்படும்.

- ❖ ஊழியர் உற்பத்தி திறன் =

$$\frac{\text{வெளியீடு}}{\text{ஊழியர் எண்ணிக்கை}}$$

மத்திய மாகாண கல்வித் திணைக்களம்

தேர்ச்சி -16

சரியான விடையின் கீழ் கோடிடுக.

1) மனிதவள முகாமையின் பொதுவான நோக்கமாக இருப்பது
   1) ஊழியர் அர்ப்பணிப்பை ஏற்படுத்தல்.
   2) வணிகத்திற்கு பொருத்தமான திருத்திகரமான ஊழியர்களை பெற்றுக்கொள்ளலும் அவர்களை தொடர்ந்து வைத்திருத்தலும்
   3) மனிதவளம் தொடர்பான அமைப்பின் சமூக ரீதியான மற்றும் சட்டரீதியான பொறுப்புக்களை நிறைவேற்றுதல்.
   4) ஊழியர் தொடர்பான சட்டரீதியான நிபந்தனைகள் பூர்த்தி செய்தல்.
   5) ஊழியர் உற்பத்தி திறனை அதிகரித்தல்.

2) A – மனிதவள கேள்வியை எதிர்வு கூறல்.
   B – அவசரமாக சேர்ப்பதால் ஏற்படும் மேலதிக கிரயங்களை தவிர்த்தல்.
   C – மனிதவள வழங்களை மதிப்பிடல்.
   D – கேள்வி, நிரம்பலை ஒப்பீடு செய்தல்.
   E – மனிதவளத்தை உற்பத்தி திறனுடனும் வினைதிறனுடனும் பயன்படுத்திக் கொள்ளல்.
   F – மனிதவள மிகை அல்லது பற்றாக்குறைக்கு எடுக்கவேண்டிய உபாய வழிமுறைகளை அபிவிருத்தி செய்தல்.
   G – நிறுவனத்தின் நிகழ்கால எதிர்கால நிதி நிலைமை
   மேலுள்ளவற்றுள் மனிதவள திட்டமிடலின் செயன்முறையின் மடிமுறைகளை மட்டும் கொண்ட தொகுதி
   1) ACDF 2) BEFG 3) ABDF 4) CDFG 5) ACEF

3) பின்வருவனவற்றுள் உள்ளக ரீதியான ஆட்சேர்ப்பு முறைகளை மட்டும் கொண்ட தொகுதி
   1) வேலை அறிவித்தல், அச்சு இலத்திரனியல் ஊடகம், கடந்தகால ஊழியர், திறன் அட்டவணை
   2) வேலை அறிவித்தல், வெளியக வலையமைப்பு, தொழிற்சங்கம் மூலம், மரபுரிமை திட்டம்
   3) வேலை அறிவித்தல், திறன் அட்டவணை, மரபுரிமை திட்டம், தொழிற் சந்தை மூலம்
   4) வேலை அறிவித்தல், கடந்தகால ஊழியர், திறன் அட்டவணை, ஊழியர் சிபாரிசு
   5) வேலை அறிவித்தல், திறன் அட்டவணை, உள்ளக வலையமைப்பு, மரபுரிமை திட்டம்

4) வேலை விபரணத்தில் உள்ளடக்கப்படாத விடயம்
   1) தொழிற் தன்மை 2) கல்வி தகைமை 3) கடமை, பொறுப்பு
   4) சேவை நிபந்தனை 5) செயற்திறன் மதிப்பீடு

5) தெரிவு செய்யப்படுகின்ற நபருக்கு உரிய கருமங்களை செய்வதற்குள்ள உண்மையான ஆற்றலை அளவிடுவதற்கு மேற்கொள்ளப்படுகின்ற பரீட்சை பின்வருவனவற்றுள் எது?

மத்திய மாகாண கல்வித் திணைக்களம்

1) விண்ணப்பங்களை மதிப்பிடல்
2) நேர்முக பரீட்சை
3) நுண்ணறிவு பரீட்சை
4) ஆளுமை பரீட்சை
5) செயன்முறை பரீட்சை

6) நியமன கடிதம் தொடர்பான பிழையான கூற்று
   1) நிறுவனத்திற்கும் ஊழியருக்குமிடையிலான உறவு முறையை வெளிப்படுத்தும்.
   2) நிறுவனமும் ஊழியரும் சட்டரீதியாக இணைந்துள்ளனர் என்பதற்கான ஒப்பந்தமாக காணப்படும்.
   3) பணிகள், கடமைகள், பொறுப்புக்கள் தொடர்பாக விளக்கத்தை பெற்றுக் கொள்ளலாம்.
   4) சட்டரீதியான ஆவணமாக பயன்படுத்த முடியாது.
   5) ஊழியர் நிறுவனத்தின் ஊழியர் என்பதை உறுதிப்படுத்தலாம்.

7) A – தொழில் வழங்குநர்
   B – ஊழியர்

   1- பயிற்சியளித்தலின் தேவைப்பாட்டினை இனங்காணல்.
   2- மதிப்பீட்டிலிருந்தான நன்மைகள்
   3- பதவி உயர்விற்கான தகமை பெறல்.
   4- பதவி உயர்வு, இடமாற்றம் தொடர்பான தீர்மானம் எடுத்தல்.

   செயற்திறன் மதிப்பீட்டின் மூலம் ஊழியருக்கும் தொழில் வழங்குநருக்கும் கிடைக்கக்கூடிய அனுகூலங்களை தொடர்புபடுத்தினால் சரியான விடையாக அமைவது,

   1) A – 1, 3 , B – 2,4 2) A – 1,2 , B – 3,4 3) A – 1,4 , B – 2,3
   4)A – 2,4 , B – 1,3 5) A – 2,3 , B – 1,4

8) ஊழியர் அசைவு என்பதனுள் உள்ளடக்க முடியாதது
   1) பதவி உயர்வு 2) வரவின்மை 3) இடமாற்றம்
   4) விலக்குதல் 5)வேலையினை முடிவைடுத்தல்.

9) சிறந்த தொழில் வழங்குநர், ஊழியர் உறவின் மூலம் நிறுவனமொன்றிற்கு கிடைக்க பெறும் அனுகூலம் அல்லாதது
   1) வள வீண்விரயம் குறைவடைதல்.
   2) வுணிக செயற்பாடுகள் பலவீனமடைதல்.
   3) ஊழியர் உற்பத்தி திறன் அதிகரித்தல்.
   4) தொழில் பிணக்கு குறைவடைதல்.
   5) ஊழியர் புரள்வு குறைவடைதல்.

10) ஊழியர் வரவின்மை என்பதால் கருதப்படுவது
   1) ஊழியர் நிறுவனத்திலிருந்து விலகி செல்லுதல்.
   2) கடமை விடுமுறைகளை பெற்றுக்கொள்ளல்.
   3) உரிய விடுமுறைகளை பெற்றுக்கொள்ளல்.
   4) வேலைக்கு சமூகமளிக்காதிருத்தல்.
   5) அறிவுறுத்தல்களை ஏற்றுக்கொள்ளாமை.

மத்திய மாகாண கல்வித்திணைக்களம்

இடைவெளி நிரப்புக.

11) பதவியொன்றின் கடமைகள், பொறுப்புக்களை எடுத்துக்காட்டுவது ……………… எனவும் வேலைக்கு தேவைப்படும் நபரிடம் இருக்க வேண்டிய தகமைகள் திறன்களை காட்டுவது …………….. எனவும் அழைக்கப்படும்.

12) உள்ளக ஆட்சேர்ப்பு முறைகளாக ……………….. பதிந்துரைகள் …………….. திட்டம் ஆகியவற்றை பயன்படுத்த முடியும்.

13) புதிய ஊழியர்களை சமூகமயப்படுத்தும் செய்முறையானது …………………… எனப்படுவதுடன் அவர்களை பணியில் நிரந்தரமாக்குதல் வரையான காலப்பகுதி ……………. காலம் எனப்படும்.

14) பொருத்தமான நபர்களை உரிய வேலை பதவிகளில் நியமனம் செய்யும் செயன்முறை ……………….. எனவும் இது …………….. , ……………….. அடிப்படையில் மேற்கொள்ளப்படும்.

15) கொடுப்பனவு முகாமையானது …………………., ……………………… , ………………… என்பவற்றை உள்ளடக்கியதாகும்.

16) ஊழியர் அசைவினை ……………….. , ………………. , ………………. , ………………. ஆகிய முறைகளில் ஏற்படுத்த முடியும்.

17) ஊழியர்களின் குறைகளை நீக்குவதற்கான செயன்முறையில் இடைவெளிகளை நிரப்புக.



18) தொழில் உரிமைகளை பெற்றுகொள்வதற்காகவும் அவற்றை பாதுகாத்து கொள்வதற்காகவும் தொழில் ஈடுபட்டுள்ளவர்களால் ஒன்று சேர்ந்து அமைத்து கொள்கின்ற அமைப்பு ……………. எனப்படும்.

19) தொழிற்சங்க பிரநிதிகளும் தொழில் வழங்குநருக்குமிடையிலான கருத்துக்களை பரிமாறிக் கொள்ளும் கலந்துரையாடல் …………………….. எனப்படும்.

20) குறித்த காலப்பகுதியில் ஊழியர் சேவையிலிருந்து விலகும் அளவினை அறிந்து கொள்ள ………………… கணிப்பிடப்படுவதுடன் ஊழியரொருவரின் உள்ளீட்டிற்கும் வெளியீட்டிற்குமிடையிலான தொடர்பை அறிந்து கொள்ள ………………… கணிப்பிடப்படுகின்றது.

பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.

1) ஏனைய வளங்களோடு ஒப்பிடும் போது மனித வளங்களில் காணப்படகூடிய விசேட பண்புகளை குறிப்பிடுக.
2) வேலை விபரணம், வேலை குறித்துரைத்தல் என்பவற்றுக்கிடையிலான வேறுபாடுகளை எடுத்து காட்டுக.
3) மனிதவள திட்டமிடலின் முக்கியத்துவம் யாது?
4) ஊழியர் ஆட்சேர்ப்புக்குரிய கருமங்களை ஒழுங்குமுறையாக குறிப்பிடுக.
5) வேளியக ஆட்சேர்ப்பு முறைகள் மூலம் அமைப்புக்கு கிடைக்கப்பெறும் அனுகூலம், பிரதிகூலம் இவ்விரண்டு வீதம் எழுதுக.
6) நியமன கடிதமொன்றில் உள்ளடக்கப்படுகின்ற முக்கியமான விடயங்களை குறிப்பிடுக.
7) தகுதிகாண் காலத்தில் ஊழியருக்கு தனது கருமங்களை உரிய முறையில் நிறைவேற்ற முடியாமல் போனால் முகாமையினால் மேற்கொள்ளகூடிய நடவடிக்கைகள் எவை?
8) பயிற்சி அபிவிருத்தி மூலம் தொழில் வழங்குநருக்கு கிடைக்க கூடிய அனுகூலங்கள் 5 இனை குறிப்பிடுக.
9) கைத்தொழில் பிணக்குகள் காரணமாக தொழில் வழங்குநருக்கும் ஊழியருக்கும் ஏற்படக்கூடிய பாதிப்புக்களை தனித் தனியாக குறிப்பிடுக.
10) தொழிற்சங்க நடவடிக்கைகளை தடுப்பதற்காக தொழில் வழங்குநர்களால் எடுக்க கூடிய நடவடிக்கைகள் எவை?

மத்திய மாகாண கல்வித்திணைக்களம்

தேர்ச்சி – 17

தரவுகள்

- ❖ சூழலில் அல்லது அமைப்பொன்றில் இடம்பெறும் பல்வேறு நிகழ்வுகளின் மூலமும் வணிகக் கொடுக்கல் வாங்கல்களின் மூலமும் உருவாகும் அடிப்படை விடயங்கள் மற்றும் புள்ளிகள் தரவுகள் எனப்படும்.

தகவல்கள்

- ❖ விளங்கி கொள்ளகூடியவாறும் பயன்படுத்துவதற்கு பிரயோகிக்க கூடியவாறும் தயாரிக்கப்பட்ட தரவுகள் தகவல்கள் எனப்படும்.

- ❖ தரவு ஒழுங்கமைத்தல் செயன்முறைக்குரிய கருமங்கள்
  1) வகைப்படுத்தல்
  2) தெரிவு செய்தல்/ ஒழுங்கமைத்தல்
  3) கணித்தல்
  4) பொழிப்பாக்கல்

- ❖ தரவு ஒழுங்கமைத்தல் தொழினுட்பத்தை வகைப்படுத்தல்

நியதிகள்	தகவல்கள் வகைப்படுத்தல்
மூலங்களின் அடிப்படை	உள்ளக, வெளியக
தன்மை அடிப்படை	அளவு ரீதியான, பண்பு ரீதியான
முகாமைத்துவ மட்டத்தினடிப்படை	வரையறைகள், உபாயவழிமுறைகள், நெறிப்படுத்தல்
காலத்தினடிப்படை	இறந்தகால, நிகழ்கால, எதிர்கால
நிகழ்தகவின் அடிப்படை	உறுதியான, நிகழதக்க
முகாமை தொழிற்பாடு	நிதி, சந்தைப்படுத்தல், மனிதவளம்
திரட்சியாக்கப்பட்ட,	திரட்சியாக்கப்பட்ட தகவல்கள்
பிரித்தெடுக்கப்பட்ட அடிப்படை	பிரித்தெடுக்கப்பட்ட தகவல்கள்

தகவல் முறைமை

- ❖ வணிகமொன்றின் தீர்மானமெடுத்தல், கட்டுபடுத்தல் என்பவற்றிற்கு தேவைப்படுகின்ற தகவல்களை சேகரித்தல், ஒழுங்கமைத்தல், களஞ்சியப்படுத்தல், விநியோகித்தல் என்பவற்றிற்கான இடைதொடர்புகளுடன் கூடிய கருவி தொகுதிகளின் சேர்க்கை தகவல் முறைமை எனப்படும்.

தரவுகள் தகவல்களாக மாற்றப்படுகின்ற பகுதிகள்

- ❖ உள்ளீடு
- ❖ செயன்முறைப்படுத்தல்
- ❖ வெளியீடு
- ❖ களஞ்சியப்படுத்தல்
- ❖ பின்னூட்டல்

மத்திய மாகாண கல்வித்திணைக்களம்

கணனிமயப்படுத்தப்பட்ட தகவல் முறைமையொன்றில் உள்ளடக்கப்பட்டிருக்கும் பகுதிகள்

- ❖ வன்பொருள்
- ❖ மென்பொருள்
- ❖ உயிர்பொருள்
- ❖ தரவு
- ❖ நடைமுறைகள்
- ❖ நிலைமென்பொருள்

தகவல் முறைமையினை வகைப்படுத்துவதற்கு பயன்படுத்தப்படும் நியதிகள்

- ❖ பயன்பாட்டு மட்டத்திற்கமைய
- ❖ பயன்பாட்டிற்கமைய
- ❖ முகாமைத்துவ தொழிற்பாடுகளுக்கமைய

பயன்பாட்டு மட்டத்திற்கமைய தகவல் முறைமைகளை வகைப்படுத்தல்

- ❖ தந்திரோபாய மட்டத்தகவல் முறைமை
- ❖ முகாமைத்துவ மட்டத்தகவல் முறைமை
- ❖ அறிவு மட்டத்தகவல் முறைமை
- ❖ செயற்பாட்டு மட்டத்தகவல் முறைமை

பயன்பாட்டிற்கமைய தகவல் முறைமையை வகைப்படுத்தல்.

- ❖ நிறைவேற்று உதவி முறைமை
- ❖ தீர்மான உதவி முறைமை
- ❖ முகாமைத்துவ தகவல் முறைமை
- ❖ அலுவலக தன்னியக்க முறைமை
- ❖ அறிவு பணி முறைமை
- ❖ கொடுக்கல், வாங்கல் செயன்முறைபடுத்தல் முறைமை
- ❖ வணிக நுண்மதி தகவல் முறைமை

முகாமைத்துவ தொழிற்பாட்டிற்கமைய தகவல் முறைமையை வகைப்படுத்தல்

- ❖ செயற்பாட்டு தகவல் முறைமை
- ❖ நிதி தகவல் முறைமை
- ❖ சந்தைப்படுத்தல் தகவல் முறைமை
- ❖ மனிதவள முகாமைத்துவ தகவல் முறைமை
- ❖ ஆராய்ச்சி மற்றும் அபிவருத்தி தகவல் முறைமை

தகவல் தொழினுட்பத்துடன் இணைந்த தொழினுட்பங்கள்

- ❖ கணித்தல் தொழினுட்பம்
- ❖ தொடர்பாடல் தொழினுட்பம்
- ❖ தகவல் முகாமைத்துவ தொழினுட்பம்

கணித்தல் தொழினுட்பம்

- ❖ தகவல் முறைமைகளில் கணித்தல் மேற்கொள்வது தொடர்பிலான அறிவாகும். கணித்தலை மேற்கொள்ளும் பிரதான உபகரணம் கணினி என்பதால் இது கணனி தொழினுட்பம் எனவும் அழைக்கப்படும்.

தொடர்பாடல் தொழினுட்பம்

- ❖ உருவாக்கப்பட்ட தரவுகளை உரிய பிரிவினர்க்கு பகிர்ந்தளிப்பதற்கு பயன்படுத்தப்படுவது தொடர்பாடல் தொழினுட்பமாகும்.

தகவல் முகாமைத்துவ தொழினுட்பம்

- ❖ நிறுவனத்திடம் காணப்படும் கணனி தொழினுட்பம் தொடர்பாடல் தொழினுட்பம் என்பவற்றை சிறப்பாக ஒழுங்குமுறைப்படுத்தி தகவல் வளங்களை வினைதிறனாகவும் விளைதிறன் கொண்டதாகவும் பயன்படுத்தும் செயன்முறை தகவல் முகாமைத்துவ தொழினுட்பமாகும்.

தகவல் தொழினுட்பத்தின் அனுகூலங்கள்

- ❖ விரைவானது
- ❖ துல்லியத்தன்மை
- ❖ நெகிழ்வு தன்மை
- ❖ நம்பகத்தன்மை
- ❖ பண்பு தரம் விருத்தியடைதல்
- ❖ குறைவான கிரையம்
- ❖ கூடிய அளவிலான தகவல்களை முகாமைத்துவ செய்தல்.
- ❖ குறைந்த ஊழியர் தொகை போதுமானதாக இருத்தல்.
- ❖ குறைந்த இடவசதி போதுமானதாக இருத்தல்.

கணினி வலையமைப்பு

- ❖ செய்திகள், தரவுகள், தகவல்களை பரிமாறிக்கொள்ளல் விலை கூடிய வளங்களை பகிர்ந்துகொள்ளல் போன்ற கருமங்களை நிறைவேற்றி கொள்வதற்கு இரண்டு அல்லது இரண்டுக்கு மேற்பட்ட கணனிகளை தொடர்புபடுத்தி பொதுவாக கருமமாற்றுதல் கணனி வலையமைப்பு ஆகும்.

மத்திய மாகாண கல்வித்திணைக்களம்

கணினி வலையமைப்பின் இரு பிரதான வகைகள்

- ❖ உள்ளூர் பிரதேச வலையமைப்பு
- ❖ பரந்த கணனி வலையமைப்பு

இணையம்

- ❖ உலகம் பூராகவும் பரம்பியுள்ள கணனி வலையமைப்புகள் ஒன்றுடனொன்று தொடர்புபடுத்தப்பட்டு எந்த வேலையிலும் தகவல் பரிமாற்றத்தினை இயலுமைபடுத்த உதவுவது இணையம் எனப்படும்.

இணையத்தினால் வழங்கப்படும் சேவைகள்

- ❖ உலகளாவிய வலையமைப்பு
- ❖ இலத்திரனியல் அஞ்சல்
- ❖ கோவைபெயர்வு நடப்பொழுங்கு
- ❖ உரையாடுவதற்கான வசதிகள்
- ❖ செய்தி குழு
- ❖ தொலை கணித்தல்

மத்திய மாகாண கல்வித் திணைக்களம்

தேர்ச்சி -17

சரியான விடையின் கீழ் கோடிடுக

1) தரவு ஒழுங்கமைத்தல் செயன்முறையில் உள்ளடக்கப்படாதது
   1) வகைப்படுத்தல் 2) தெரிவு செய்தல் 3) கணித்தல்
   4) பொழிப்பாக்கல் 5) பின்னூட்டல்

2) தகவல்களை வகைப்படுத்தும் நியதிகளும் வகைபடுத்தல்களும் தரப்பட்டுள்ளது.

நியதிகள்	வகைபடுத்தல்
1) மூலங்களின் அடிப்படை	A) அளவு, பண்பு ரீதியான
2) தன்மையின் அடிப்படை	B) உறுதியான, நிகழத்தக்க
3) முகாமை தொழிற்பாட்டின் அடிப்படை	C) உள்ளக, வெளியக
4) நிகழ்தகவின் அடிப்படை	D)நிதி, நெறிப்படுத்தல், சந்தைப்படுத்தல்

   சரியான தொடர்பை காட்டும் தொகுதி
   1) 1-C,2-D, 3-B, 4-A 2) 1-A, 2-C, 3-B,4-D 3) 1-B, 2-C, 3-A, 4-D
   4)1-D, 2-B, 3-C, 4-A 5) 1-C, 2-A, 3-D, 4-B

3) பின்வருவனவற்றுள் தகவல் முறைமையொன்றின் தொழிற்பாடாக கருதமுடியாதது
   1) உள்ளீடு 2) பொருத்தபாடு 3) செயன்முறைபடுத்தல்
   4) வெளியீடு 5)களஞ்சியப்படுத்தல்

4) கட்டமைக்கப்பட்ட, பகுதி கட்டமைக்கப்பட்ட தீர்மானங்களை எடுக்கும் தகவல் முறைமை
   1) நிறைவேற்று உதவி முறைமை
   2) தீர்மான உதவி முறைமை
   3) முகாமைத்துவ தகவல் முறைமை
   4) அலுவலக தன்னியக்க முறைமை
   5) அற்வு பணி முறைமை

5) பின்வருவனவற்றுள் சரியான கூற்றை தெரிவு செய்க.
   1) தொலை இயக்கி ஒரு நிலை பொருளாகும்.
   2) மத்திய செயன்முறைப்படுத்தல் அலகு ஒரு உயிர் பொருள் ஆகும்.
   3) காட்சி நிறை ஒரு மென்பொருள் ஆகும்.
   4) முறைமை செயன்முறைபடுத்துனர் ஒரு வன்பொருள் ஆகும்.
   5) இணையதளம் ஒரு வரவு ஆகும்.

மத்திய மாகாண கல்வித் திணைக்களம்

இடைவெளி நிரப்புக

6) பேனை, பென்சில், எழுதுகருவி போன்ற உபகரணங்களை பிரயோகித்து கையினால் தரவு தயாரித்தல் ………………… எனவும் தட்டச்சு இயந்திரத்தையும் கையையும் பயன்படுத்தி தரவு தயாரித்தல் ……………… எனவும் அழைக்கப்படும்.
7) தகவல் முறைமையொன்றில் காணப்படும் சகல பௌதிக பிரிவுடனும் ……………….. எனப்படுவதுடன் தரவு செயன்முறைபடுத்துவதற்கான நிகழ்ச்சி திட்டங்கள் ……………… எனப்படும்.
8) அறிவுமட்ட தகவல் முறைமை ………………… ஊழியர்களும் …………………… ஊழியர்களும் பயன்படுத்துவர்.
9) முகாமைத்துவ மட்டத்திலான தகவல் முறைமையினுள் …………… , ……………. உள்ளடக்கப்படும்.
10) தகவல் தொழினுட்பத்துடன் இணைந்த தொழிநுட்பங்களான கணித்தல் தொழினுட்பம் ………………… , ………………….. என்பன காணப்படுகின்றது.

பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.

1) தரவுக்கும் தகவலுக்கும் இடையிலான வேறுபாடுகளை குறிப்பிடுக.
2) சிறந்த தகவலொன்றில் காணப்படகூடிய பண்புகளை குறிப்பிடுக.
3) பயன்பாட்டிற்கேற்ப தகவல் முறையினை எவ்வாறு வகைப்படுத்தலாம்?
4) நிறுவனமொன்றிற்கு தகவல் முகாமைத்துவத்தின் முக்கியத்துவத்தை சுருக்கமாக விளக்குக.
5) தகவல் முகாமைத்துவ தொழிநுட்பம் என்பதால் கருதப்படுவது யாது?

தேர்ச்சி -18

வணிக எண்ணம்

- ❖ தனி நபரொருவரின் அல்லது அமைப்பொன்றின் தேவையொன்றை அல்லது விருப்பமொன்றை நிறைவேற்றக்கூடிய உற்பத்தியொன்று தொடர்பாக முயற்சியாளரொருவரிடம் உருவாக்ககூடிய சிந்தனை வணிக எண்ணம் எனப்படும்.
- ❖ வணிக எண்ணங்களை பேரின, சிற்றின பகுப்பாய்வு செய்வதன் மூலம் வணிகச் சந்தர்ப்பமொன்றை உருவாக்கமுடியும்.

வணிக திட்டம்

- ❖ வணிகமொன்றின் இலக்குகளையும் நோக்கங்களையும் அவற்றை அடைந்து கொள்ள கூடிய வழிமுறைகளையும் விபரிக்கின்ற அட்டவணையே வணிக திட்டம் எனப்படும்.

வணிக திட்டமொன்றை தயாரிக்கும் போது கவனத்தில் கொள்ளவேண்டிய விடயங்கள்

- ❖ குவிமையப்படுத்தல்
- ❖ வாடிக்கையாளர்
- ❖ இலக்கு
- ❖ நிதிவளங்கள்

வணிக திட்டமொன்றில் உள்ளடக்கவேண்டிய விடயங்கள்

- ❖ முன்பக்கம்
- ❖ நிறைவேற்று சுருக்கம்
- ❖ வணிகவிபரம்
- ❖ சந்தைப்படுத்தல் திட்டம்
- ❖ செயற்பாட்டு திட்டம்
- ❖ மனிதவளத் திட்டம்
- ❖ நிதித் திட்டம்
- ❖ பின்னிணைப்புகள்

வணிக விபரங்கள் என்பதனுள் உள்ளடக்கப்படும் விடயங்கள்

- ❖ வணிகத்தின் பெயரும் முகவரியும்
- ❖ வணிகத்தின் இலக்குகளும் நோக்கங்களும்
- ❖ பழைய நிர்மாணிப்பாளர்கள்
- ❖ அமைப்புக் கட்டமைப்பு
- ❖ ஒழுங்கமைப்பு முறை
- ❖ பணிப்பாளர் சரை
- ❖ பொருட்கள், சேவைகள் தொடர்பான விபரங்கள்

மத்திய மாகாண கல்வித் திணைக்களம்

சந்தைப்படுத்தல் திட்டம்

- ❖ சந்தையின் போட்டி நிலைமைகள், சந்தை உபாய வழிமுறைகள், விற்பனை எதிர்வு கூறல் ஆகிய தகவல்களை விரிவாக முன்வைக்கப்படுகின்ற பகுதி சந்தைப்படுத்தல் எனப்படும்.

சந்தைப்படுத்தல் திட்டமொன்றில் உள்ளடக்கப்படும் விடயங்கள்

- ❖ கைத்தொழில் மற்றும் சந்தை பற்றிய பகுப்பாய்வு
- ❖ விற்பனை செய்வதற்கு எதிர்பார்க்கும் பொருள் அல்லது சேவை
- ❖ இலக்கு சந்தை
- ❖ போட்டி தன்மையினை பகுப்பாய்வு செய்தல்.
- ❖ உத்தேச விற்பனை
- ❖ போட்டியாளர்களின் சந்தைப்படுத்தல் உபாய வழிமுறைகள்
- ❖ முன்மொழியப்பட்ட விற்பனை உபாய வழிமுறைகள்
- ❖ வருடாந்த விற்பனை எதிர்வு கூறல்
- ❖ சந்தைப்படுத்தற் செலவுகள்

உத்தேச சந்தைப்படுத்தல் உபாய வழிமுறைகளில் உள்ளடக்க வேண்டிய விடயங்கள்

- ❖ உற்பத்தி பொருள் உபாய வழிமுறை
- ❖ விலை உபாய வழிமுறை
- ❖ விநியோக உபாய வழிமுறை
- ❖ மேம்படுத்தல் உபாய வழிமுறை

செயற்பாட்டு திட்டம்

- ❖ ஏதேனும் உற்பத்தி பொருளொன்றை உருவாக்கும் பொழுது அவ்வுற்பத்தி நடைமுறைகள், உற்பத்தி பொருளின் அளவு, உற்பத்தி கிரயம், பயன்படுத்தப்படுகின்ற நியமங்கள், உற்பத்திக்குரிய உபகரணங்கள், தொழிற்சாலையை நிறுவுவதற்கான இடம் போன்ற விபரங்கள் உள்ளடக்கப்படுகின்ற பகுதி செயற்பாட்டுத் திட்டம் எனப்படும்.

செயற்பாட்டுத் திட்டமொன்றில் உள்ளடக்கப்பட வேண்டிய விடயங்கள்

- ❖ உற்பத்தி இயலளவு
- ❖ நடைமுறையல்லா சொத்துக்களின் தேவைபாடு
- ❖ மூலப்பொருள் தேவைபாடு
- ❖ உற்பத்தி பொது மேந்தலை கிரயம்
- ❖ தொழிற்சாலையின் தள அமைப்புத் திட்டம்
- ❖ கழிவு பொருள் அகற்றல்
- ❖ சமூக மற்றும் சூழல் தாக்கங்கள்
- ❖ மொத்த உற்பத்தி கிரயமும் அலகுக் கிரயமும்
- ❖ வணிகத்தை ஆரம்பிப்பதற்கு முன்னர் ஏற்படும் செயற்பாட்டு கருமங்களும் கிரயங்களும்

மத்திய மாகாண கல்வித் திணைக்களம்

வணிகமொன்றை ஆரம்பிப்பதற்கு முன்னர் ஏற்படும் செலவுகள்

- ஆய்வு நடவடிக்கைகளை மேற்கொள்ள ஏற்படும் செலவு
- வணிகத்தை பதிவு செய்வதற்காக ஏற்படும் செலவு
- மூலதன ஈட்டலுக்காக ஏற்படும் செலவு
- தேவையான நடைமுறை அல்லா சொத்துக்களை கையகப்படுத்தி கொள்வதற்காக ஏற்படும் செலவுகள்

மனிதவள திட்டம்

- வணிகமொன்றின் இலக்குகளையும் நோக்கங்களையும் நிறைவேற்றும் பொருட்டு எதிர்கால மனிதவளத் தேவையினை நிச்சயப்படுத்தி கொள்வதற்கும் அதற்குரிய கிரயத்தினை மதிப்பீடு செய்து தயாரிக்கப்படுகின்ற திட்டம் மனிதவள திட்டமாகும்.

மனிதவள திட்டமொன்றில் உள்ளடக்கப்படும் விடயங்கள்

- முயற்சியாளர்/ பங்காளர் தொடர்பான விபரங்கள்
- முகாமைத்துவ திறன்கள்
- நிறுவன கட்டமைப்பின் அடிப்படையில் பதவிகள், பொறுப்புக்கள்
- அமைப்பு வரைபடம்
- மனிதவளங்களுக்கான வருடாந்த செலவுகள்

நிதி திட்டம்

- வணிகமொன்றில் சகல மதிப்பிடப்பட்ட நிதித் தகவல்களையும் உள்ளடக்கி தயாரிக்கப்படும் பகுதி நிதி திட்டம் எனப்படும்.

நிதி திட்டமொன்றில் உள்ளடக்கப்படும் விடயங்கள்

- மதிப்பிடப்பட்ட செயற்றிட்ட கிரயம்
- மதிப்பிடப்பட்ட வருமான கூற்று
- மதிப்பிடப்பட்ட காசு பாய்ச்சல் கூற்று
- மதிப்பிடப்பட்ட நிதி நிலைமை கூற்று
- கடன் மீள செலுத்துகை அட்டவணை

நிறைவேற்று சுருக்கம்

- வணிகதிட்டமொன்றில் உள்ளடங்கும் அடிப்படை விடயங்கள் பொழிப்பாக்கப்பட்டு சுட்டடிக் காட்டப்படும் பகுதி நிறைவேற்று சுருக்கம் எனப்படும்.

மத்திய மாகாண கல்வித் திணைக்களம்

நிறைவேற்று சுருக்கத்தில் உள்ளடக்கப்படும் விடயங்கள்

- வணிகத்தின் பெயரும் முகவரியும்
- வணிகத்தின் வரலாறு
- வணிகத்தின் தூரநோக்கு, இலட்சியநோக்கு, இலக்கு, நோக்கங்கள்
- உற்பத்தி செய்யப்படும் பொருள் அல்லது சேவை
- போட்டியிட வேண்டி இருக்கும் சந்தை
- பிரதான முகாமைத்துவ குழுக்கள்
- மொத்த முதலீடு
- உத்தேச அல்லது எதிர்பார்க்கப்பட்ட கடன்பெறுமானம்

தேர்ச்சி – 18

சரியான விடையின் கீழ் கோடிடுக.

1) வணிகதிட்டம் தொடர்பான கூற்றொன்றை சரியாக விபரிக்கின்ற கூற்றை தெரிவு செய்க.
   1) போட்டிசார் மற்றும் சந்தை உட்புகுதல் தந்திரோபாயங்கள் வரி திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கும்.
   2) வளதேவைப்பாடு மற்றும் உற்பத்தி பொருள் நியமங்கள் செயற்பாட்டு திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கும்.
   3) மனிதவள தேவைப்பாடுகள் நிதிதிட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கும்.
   4) மதிப்பிடப்பட்ட சகல தகவல்களும் சந்தைப்படுத்தல் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கும்.
   5) வணிக தந்திரோபாயங்களும் நிறுவனம் சார் கட்டமைப்பும் மனிதவள திட்டத்தில் விபரிக்கப்பட்டிருக்கும்.

2) வணிக திட்டம் தயாரிப்பதன் பிரதான நோக்கம்
   1) தேவையான மூலதனத்தை பெற்று கொள்ளலாகும்.
   2) வணிகத்தின் சாத்திய தன்மையை மதிப்பிடலும் அதனை கொண்டு நடத்துவதற்கான வழிகாட்டல்களாகும்.
   3) வித்தியாசமான தரப்பினருக்கு வணிகம் தொடர்பிலான விழிப்புணர்வை வழங்குதலாகும்.
   4) வணிகத்திற்கு பொருத்தமான இட அமைவை தெரிவு செய்தலாகும்.
   5) அரசாங்க ஊக்குவிப்புகளை பெற்றுக் கொள்ளலாகும்.

3) வணிகதிட்டம் தொடர்பிலான வழிகாட்டலை வழங்குவதற்காக தயாரிக்கப்படும் சுருக்கம்
   1) நிறைவேற்று சுருக்கம்
   2) கிரய சுருக்கம்
   3) காசு பாய்ச்சல் சுருக்கம்
   4) வருமான சுருக்கம்
   5) கடன் தொடர்பான சுருக்கம்

மத்திய மாகாண கல்வித்திணைக்களம்

4) மதிப்பிடப்படாத செயற்திட்ட கிரய அட்டவணை ஒன்றில் உள்ளடக்கப்படாத விடயம்
   1) காணி கட்டிடங்களின் கிரயம்
   2) வணிகத்தின் ஆரம்ப செலவுகள்
   3) நன்மதிப்பு
   4) உற்பத்தி மேந்தலை கிரயம்
   5) நிர்வாக மேந்தலை கிரயம்

5) பின்வருவனவற்றுள் நிதி திட்டம் ஒன்றில் உள்ளடக்கப்படாத ஒரு உருப்படி
   1) மதிப்பிடப்பட்ட வருமான கூற்று
   2) கடன் மின் கொடுப்பனவு அட்டவணை
   3) மூலதன தேவைப்பாடுகள்
   4) மதிப்பிலிடப்பட்ட காசு பாய்ச்சல் கூற்று
   5) ஊழியர் மரபுரிமை திட்டம்

பின்வரும் வினாக்களுக்கு விடை தருக

1) வணிக திட்டமொன்றின் முக்கியத்துவம் யாது?
2) வணிக திட்டமொன்றில் உள்ளடக்கப்படவேண்டிய விடயங்கள் யாவை?
3) வணிக விபரங்கள் எனும் பகுதியில் உள்ளடக்கப்பட வேண்டிய தகவல்கள் எவை?
4) உத்தேச சந்தைப்படுத்தல் உபாய வழிமுறைகளில் உள்ளடக்கப்பட வேண்டிய தகவல்கள் எவை?
5) செயற்பாட்டுத் திட்டம் ஒன்றை தயாரிப்பதன் முக்கியத்துவம் யாது?
6) வணிகமொன்றை ஆரம்பிப்பதற்கு முன்னர் ஏற்படும் செயற்பாட்டு செலவுகள் எவை?
7) மனிதவள திட்டமொன்று முக்கியத்துவம் பெறுவதற்கான காரணங்கள் யாவை?
8) நிதிதிட்டமொன்றில் உள்ளடக்கப்பட வேண்டிய விடயங்கள் யாவை?
9) மதிப்பிடப்பட்ட வருமான கூற்றொன்றில் உள்ளடக்கப்படும் விடயங்கள் யாவை?
10) நிறைவேற்று சுருக்கமொன்றின் முக்கியத்துவம் யாது?

மத்திய மாகாண கல்வித்திணைக்களம்